
தரமான உதிரிப்பாகங்களைக் கொண்டு தயாரிக்கப்படும்



நியூரோன் பம்புகளை வாங்குங்கள்




வார முரசொலி

VARAMURASOLI



Pump With Standard Accessories



Select Newtone-Pumps



முரசு 3 ஒலி 4? ஞாயிற்றுக்கிழமை 08-01-1989 (மார்கழி 24) ஐ. அவ்வல் 29 விலை ரூபா நான்கு


ஹபரணை குண்டு வெடிப்பையடுத்து நாற்பத்தேழு நாட்களுக்குப் பின்னர்

# குடாநாட்டு மின்சார சப்ளை

# நேற்றிரவு 10 மணிக்கு வந்தது

## யாழ். மின்சார சபை ஊழியர்களின் துரித பணியினுல் கிடைத்த பலன்

யாழ்ப்பாண மாவட்டத்துக்கான மின்சார விநியோகம் நேற்றிரவு சுமார் பத்துமணிக்கு மீண்டும் அனுராதபுரத்துக்கு ஊடாக வழங்கப்பட்டது. கடந்த பத்துத் தினங்களாக மேற்கொள்ளப்பட்ட திருத்தவேலையை அடுத்து இந்த சப்ளையை விரைவாக வழங்க முடிந்ததாக மின்சாரசபையினர் நேற்றிரவு முரசொலிக்கு தெரிவித்தனர்.

நாளை திங்கட்கிழமை முதலே மின்விநியோகம் மேற்கொள்ளக்கூடியதாகவிருக்குமென்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்ததாயினும், எதிர்பார்த்ததிலும் பார்க்கமுன்னதாக நேற்றிரவுபத்துமணிக்கே மின் சப்ளை கிடைத்தது.

உக்குவெல வழியாக பன்னிரண்டு கே.வி. சப்ளை நேற்றிரவு வழங்கப்பட்டது. இதனுல் உடனடியாக மட்டுப்படுத்தப்பட்ட மின் சேவை வழங்கக் கூடியதாகவிருக்கும். அடுத்த சில தினங்களில் முழுமையான சேவை கிடைக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இலங்கை மின்சார சபையின் யாழ்ப்பாணப் பிரிவு ஊழியர்களே இந்தத் திருத்த வேலையை மேற்கொண்டனர்.

கடந்த வருடம் நவம்பர்

→16 ஆம் பக்கம் பார்க்க

## ஆங்கில ஆசிரியர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சை 28-ம் திகதி

மாவட்ட சேவைத்திட்டத்தின் கீழ் கஷ்டப் பிரதேசங்களில் கடமை புரிவதற்கான ஆங்கில உதவி ஆசிரியர்களை சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை இம் மாதம் இருபத்தெட்டாம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கு போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான அனுமதிப்பத்திரங்கள் பரீட்சைக்கு ஒரு கிழமைக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக

→16 ஆம் பக்கம் பார்க்க

## தமிழ்நாட்டில் ராஜீவ்காந்தி

இரு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு தமிழ்நாடு வந்த பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி மதுரையில் நடைபெறும் பாரத விஞ்ஞான மாநாட்டை நேற்று தொடக்கி வைத்தார்.

## திருகோணமலையில் இணைப்பு எஸ்.பி.

வடக்கு கிழக்கு இணைப்பு பகுதிக்கென புதிதாக இணைப்பு பொலிஸ் அதிபர் பதவியொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்த புதிய பதவிக்கு திரு. ரி. ஈ. ஆனந்தராஜா நிய

→16 ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் இளைஞர்கள் ஆறு பேர் வெள்ளவத்தையில் கைது

கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக ஆறு தமிழ் இளைஞர்களை வெள்ளவத்தைப் பொலிஸார் கடந்த புதன்கிழமை கைது செய்தனர். இவர்களிடமிருந்து சில ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

கே. விஜயசுந்தரம், எஸ். சைமன், டபிள்யூ. ரூபராஜா, கே. தம்பிராஜா, எஸ். கே. நிமல்ராஜா, ஆர். சுந்தரலிங்

→16 ஆம் பக்கம் பார்க்க

ஜி.சி.ஈ. (உ.த.) பரீட்சை முடிவில்

## அகில இலங்கை முதல் 15க்குள் ஹாட்லி, சென். ஜோன்ஸ் மாணவர்

கடந்த வாரம் வெளியான ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சை முடிவுகளின்படி அகில இலங்கையிலும் பதினைந்து மாணவர்கள் மட்டுமே நான்கு பாடங்களிலும் 'ஏ' சித்தியடைந்துள்ளனர்.

இவர்களில் இரு மாணவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவர் ஒருவர் பொறியியல் கல்வி பயில்வதற்கு

→16 ஆம் பக்கம் பார்க்க

## பஞ்சாப்பில் 14 பேர் கொலை

(அமிர்தசரஸ்)

பஞ்சாப்பில் வன்முறைகள் மீண்டும் ஆரம்பித்துள்ளது. நேற்று மட்டும் சீக்கிய தீவிரவாதிகள் பதின்நான்கு பேரை கொன்றனர்.

→16 ஆம் பக்கம் பார்க்க

## 68 மாத அவசரகால நிலை வார இறுதியுடன் ரத்தாகும்

கடந்த அறுபத்தெட்டு மாதங்களாக நாடு முழுவதும் தொடர்ச்சியாக அமுலிலிருந்து வரும் அவசரகாலச் சட்டம் இந்த வார இறுதியுடன் நீக்கப்படுகின்றது. மாதாமாதம் பாராளுமன்றத்தினுல் நீடிக்கப்பட்டுவந்த அவசரகாலச்சட்டம், தற்போது பாராளுமன்றம் கலைக்கப்பட்டதையடுத்து எதிர்வரும் பதினைந்தாம் திகதி ஞாயிற்றுக்கிழமையுடன் காலாவதியாகின்றது. அவசரகால நிலை ரத்தாவதையடுத்து, இதன் கீழ் அமுலுக்கு வந்த பயங்கரவாத தடைச்

→16 ஆம் பக்கம் பார்க்க

வட, கிழக்கு விமானத் தளங்களில்

## சிவில் விமானங்கள் இறங்கும் தடை நீக்கப்பட்டுள்ளது

வவுனியா, யாழ்ப்பாணம், சீனன்குடா, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் உள்ள இராணுவ விமானத்தளங்களில் சிவில் விமானங்கள் இறங்குவதற்கு இருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

விமானப்படையினரின் அனுமதியின்றி இந்த இராணுவ விமானத்தளங்களில் சிவில் விமானங்கள் இறங்குவ

→16 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்புக்கு ரயில்சேவை இன்றும் நாளையும் இங்கிருந்து

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான யாழ்தேவி நேற்று ஒன்றரை மணி தாமதமாக பிற்பகல் நான்கு மணிக்கே யாழ்ப்பாணம் வந்தது. இதில் பயணிகள் நிறைந்து காணப்பட்டனர்.

இந்த ரயில் இன்று காலை ஒன்பது மணிக்கு யாழ்பாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்லும். இதேவேளை இன்று கொழும்பிலிருந்துவரும் யாழ் தேவி ரயில் நாளை இங்கிருந்து

→16 ஆம் பக்கம் பார்க்க

1988 ஜுலை விசேடபரீட்சையில் தோற்றுதோருக்கு

## நடனம், சங்கீதம் பாடங்களை மீண்டும் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணத்தில் 1988-ம் ஆண்டு ஜுலை மாதம் நடைபெற்ற ஜி சி ஈ. விசேட பரீட்சைக்கு சங்கீதம் நடனம் ஆகிய பாடங்களுக்குத் தோற்றுத மாணவர்களுக்கு மீண்டும் இப் பாடங்களில் பரீட்சை நடத்த ஏற்பாடாகியுள்ளது.

யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு வெற்றிவேலு சபாநாயகம் இது தொடர்பாக நேற்று பரீட்சை ஆணையாளர் திரு. ஆர்தர்

→16 ஆம்பக்கம் பார்க்க

## ஜப்பானிய சக்கரவர்த்தி 87 வயதில் காலமானுர்

உலகில் மிக நீண்டகாலம் ஆட்சிபுரிந்த ஜப்பானிய சக்கரவர்த்தி ஹிரோ ஹிட்டோ தமது எண்பத்தேழாவது வயதில் நேற்று காலமானுர். அவரது இடத்திற்கு அவரது மூத்த மகன் அக் ஹி ஹிட்டோ எளிமையான வைபவத்தில் சக்கரவர்த்தியாக நியமிக்கப்பட்டார். சக்கரவர்த்தி ஹிரோ ஹிட்டோவின் மறைவையொட்டி இலங்கையில் நேற்று துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது. பாரதத்தில் மூன்று நாள் துக்கதினம் அனுஷ்டிக்கப்படுகிறது. சக்கரவர்த்தியின் இறுதிச் சடங்கில் பல உலக நாடுகளின் தலைவர்களும், மக்களும் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்து.

சக்கரவர்த்தியின் பூதவுடல் சம்பிரதாயப்படி நாற்பத்தைந்து நாட்களுக்கு அஞ்சலிக்காக வைக்கப்படும். 62 வருடங்களாக ஆட்சி புரிந்த சக்கரவர்த்தியின் ஆட்சிக் காலம் ''துரிதமான சமாதான யுகம்'' என அழைக்கப்பட்டது. ஜப்பானிய சம்பிரதாயப்படி ஒவ்வொரு சக்கரவர்த்தியின் ஆட்சிக்காலமும் ஒவ்வொரு யுகமாக அழைக்கப்படுவது வழக்கம். இந்த வகையில் புதிய சக்கரவர்த்தியின் ஆட்சிக்காலம் ''சமாதானத்திற்கான சாதனையின் யுகம்'' என்று அழைக்கப்படும்.

# சிறு விளம்பரம்

**பிரெஞ்சு மொழி வகுப்புக்கள்**
பிரெஞ்சு மொழி கற்பதற்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகவிருக்கின்றன. 09.01.89 திங்கட்கிழமை வரை புதிய மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். தொடர்புக்கு:- Alliance Francaise De Jaffna 130, 1-st Cross Street, Jaffna. 01214

**மலிவு விற்பனைக்கு**
ஏழிரு யிலர் கோழி கள் 2 சேட்டி சேற்றும் கொள் ளலாம். ஒசீ சைக யாக எடுப்பவர்களுக்கு விசேஷ சழிவு கொடுக்கப்படும். அண்ணு பாம், னுவில் செம்மா தெரு. யாழ்ப் பாணம் 01218

**Grill Inn**
GrillInn Galaxy Catering division orders undertaken for wedding reception, Birthday, Cocktail parties other special function etc Address: Palay Road, Thirunelvely or 30, Kannathiddy Road, Jaffna. 01161

**உணவு**
பு Chefs வருகையால் Rice / curry fish 17/50, Buriyani 25-35/- Fried Rice 20-40/-. Also Cool Beer 39/- நாடும்முகவரி: Galaxy Restaurant, கன்னதிட்டி, (சிவன் கோவில் முன் பாக) யாழ்ப்பாணம். 01176

**விற்பனைக்கு**
பாவித்த அலுமாரி, கட்டில், மெத்தைகள், Show Case, சாப்பாட்டு மேசை, சன்னுடி மேசை Baby cot, குக்கர், எலக்ரிக் கேற்றல், Grinder, play pen, மெஷின், பெரிய றேடியோ, மற்றும் பல உடன்மலிவு விலையில் விற்பனைக்குண்டு. No 164, ரெம்பிள்ரோட், நல்லூர் கோயில் பின் வீதியில் Dr அழகக்கோன் டிஸ்பென்சரி முன்பாக. 01200

Sisil (R. 80) குளிர்சாதனப்பெட்டி உடன் விற்பனைக்குண்டு. 164, ரெம்பிள் ரோட், நல்லூர் கோயில் பின்வீதி Dr அழகக்கோன் டிஸ்பென்சரி முன்பாக. 01198

Broilers. கல்பேட்ஸ் இறைச்சிக் கோழிகள் புது வருடத்தை முன்னிட்டு விலை குறைத்து விற்பனை செய்கின்றோம். தொடர்பு: சிமாட்டி ஃபாம், ஸ்ரேசன் ரோட், மயிலங்காடு, சுன்னுகம். 01107

**தேவை**
தாதி பயிலுநர்கள் G.C.E.O/L ஆங்கில சித்தியுடன் A/L இரண்டு பாடங்களும் விருப்பத்தக்கது. 5மைல் சுற்றுடலில் இருப்போருக்கு முன்னுரிமை. மகப்பேறுவும், பிணி திர்பவையும். சங்கானை 01070

**விஞ்ஞானம்**
வெளிவந்து விற்பனையாகின்றது. ஆரம்ப விஞ்ஞானம் ஆண்டு 4,5,6 க்குரியவை M.C. பிரான்சிஸ் (முன்னைநாள் யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியர்) N.J. ஞானப்பொலராஜ் (யாழ். சென்யோன்ஸ் கல்லூரி) யாழ்ப்பாண முன்னணிக் கல்லூரிகளின் முக்கியமான பாடநூல். கல்லூரிகளுக்கும், ஆசிரியர்களுக்கும், வியாபாரிகளுக்கும் சழிவு வழங்கப்படும். வெளியீடு விற்பனவு: பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். 01145

**மணமகன் தேவை**
யாழ். வேளாண் குலமும் O/L தரமும் அழகும் குணமும் தையற் பயிற்சியும் உடைய முப்பத்திரண்டு வயதுடைய மகளுக்கு அதே குலத்தில் சைவ உணவேஉண்ணும் குடிப்பழக்கமற்ற ஆசிரியர், லிகிதர் அல்லது போதிய வருவாயுடைய மணமகனைத் தேடுகின்றனர். சாதக குறிப்பு, குடும்ப விபரம், எதிர்பார்ப்புகளுடன் தொடர்புகுக விளம்பர இல. 231 C/o முரசொலி யாழ்ப்பாணம். 01102

**காணி விற்பனைக்கு**
நல்லூரில் 5½ பரப்பு நல்ல தண்ணீர் அமைதியான சுற்றுடல். யாவற்றிற்கும் வசதியான இடம். மூன்று பகுதிகளாகப் பிரிக்கக்கூடிய பள்ளக்காணி விற்பனைக்குண்டு தொடர்பு: விளம்பர இல 234, மே/பா. முரசொலி. யாழ்ப்பாணம். 01241

**ஈழத்து நாவலகள்**
எவ்வளவோ சிரமங்களுக்கு மத்தியில் புதிய ஈழத்து நாவல்களை மீரா வெளியீடாக வெளியிட்டுள்ளோம். உங்கள் நூல் நிலையங்களில், வீட்டில் மீரா வெளியீடு நூல்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள். ராஜன் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். சோதிடவிலாச புத்தகசாலை, ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம். AllCeylon Distributors Jaffna-Colombo, கன்தா ஸ்ரோர்ஸ், வவுனியா. 01151

**A/L MATHS**
ஆசிரியர்: ரவிமோகன்
யாழ்ப்பாணம்
[பெருமாள்கோவிலடி]

## அலுவலகத்திற்கான கட்டடம்

அரசாங்க நிறுவன அலுவலகமொன்றிற்கு ஏறக்குறைய மூவாயிரம் (3000) சதுர அடி அளவிலான கட்டடம் வாடகைக்குத் தேவைப்படுகின்றது. யாழ் பெரியகடைக்கு அண்மையிலோ அன்றி கச்சேரிக்கு அண்மையிலோ இருப்பது விரும்பத்தக்கது. தொடர்பு: விளம்பர இல. 233 மே/பா முரசொலி, யாழ்ப்பாணம். 01237




## "சிக்கனமே சிறந்த செல்வம்"

உள்ளூர் உற்பத்திக்கு ஆதரவு தாருங்கள்

மாணவ மணிகளே,

25 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளில் உள்ள திருக்குறள்களை வெட்டி அனுப்பி 'அப்பியாசக் கொப்பி' ஒன்றையும், 'நேரசூசியையும்' பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க்வைற், யாழ்ப்பாணம்.**

01238

# NEW MASTER INSTITUTE

B M. C. Lane, Jaffna.

## 89 A/L
## DAY CLASSES

[திங்கள் —> வெள்ளி]

பிரிவு III

ஆரம்பம்: 10-01-89 செவ்வாய்க்கிழமை காலை 7. 30 மணி

| | |
|---|---|
| Physics | - திரு. நந்தகுமார் |
| Chemistry | - திரு. மக்லி |
| Botany | - திரு. செல்வநேசன் |
| Zoology | - திரு. நாகநாதன் |
| Applied / Pure Maths | - திரு. சந்திரமோகன் |

- Day Classes பிரிவு I, பிரிவு II க்குரிய வகுப்புகள் நடைபெறுகின்றன.
- ஒவ்வொரு மாதமும் 160 மணித்தியாலங்களுக்குக் குறையாத வகுப்புகள் நடைபெறும்.

01244

## வருடாந்த விளையாட்டு போட்டி

சுன்னுகம் புனித அந்தோனியார் இளைஞர் மன்ற வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிறு காலை சுன்னுகம் புனித அந்தோனியார் ஆலயமுன்றலில் செல்லுசியான் மரியதாஸ் ஜேம்ஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. மன்றப்போஷகரும் சுன்னுகம் பங்குத்தந்தையுமான அருட்திரு. ம. அல்பேட் யோகராசா அடிகள் விழாவை ஆரம்பித்துவைப்பார் மன்ற இயக்குநர் திரு. வரப்பிரகாசம் பெனடிக்ற் பங்களிக்கத் கேற்றுவார். உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு ஆ. மகாலிங்கம் சிறப்புவிருந்தினராகவும், யாழ்.மறைமாவட்ட முதல்வர் அருட்திரு. செல்லறி ஜெயநேசன் அடிகள் பிரதம விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

# விக்னு டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்

1989 DEC.

O/L புதிய பிரிவு 3 2-45—4-45
(புதிய பாடத்திட்டம்)

Day Classes 8-30 - 1-30 (பழைய பாடத்திட்டம்)
(மீட்டல்)

பிரிவு 2.

ஆண்டு **6, 7, 8, 9, 10**
(2. 45 - 4 45)

**புதிய பிரிவு ஆரம்பம்: 9-1-1989**

மு. குறிப்பு: I கடமை, கட்டுப்பாட்டுடன் நடாத்தும் ஒரே நிறுவனம்.
II தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்கள் ஒருங்கிணைந்த சேவை.
III இலவசமாக பயிற்சிப் பரீட்சைகள் நடத்தப்படும்.

01119

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு செல்லையா இரத்தினசிங்கம்**
(அரசாங்க நில அளவையாளர்)

மலர்வு: 17. 03. 1924 உதிர்வு :12 01. 1986
திதி: 08 01 1989

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே! அணையாத ஜோதியே! எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு அணைந்த எம் அன்புத்தெய்வமே. ஆண்டுகள் மூன்று சென்றாலும் உங்கள் நினைவு எம்மை விட்டகலாது. தங்கள் நல்லாத்மசாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

532, கே. கே. எஸ். வீதி,
தட்டாதெரு சந்தி,
யாழ்ப்பாணம்.

01247




# அமெரிக்க லிபிய நெருக்கடி

## முற்றி வெடிக்கும் ஆபத்து!

லிபியாவுடனுன அமெரிக்காவின் சண்டித்தனம் பெரும் நெருக்கடிக்குள் உலகைத் தள்ளிவிடக் கூடிய ஆபத்தை உருவாக்கியுள்ளது.

லிபியாவில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் இரசாயன ஆயுதங்களை லிபியா தயாரிக்கின்றது என்ற அமெரிக்காவின் குற்றச்சாட்டுக்களைக் கடந்த இருபத்திரண்டாந் திகதி லிபியத் தலைவர் கேர்ணல் மும்மர்கடாபி நிராகரித்திருந்தார்.

நச்சு வாயுவைத் தயாரிப்பதாக அமெரிக்காவினுல் குற்றஞ் சாட்டப்படும் தொழிற்சாலை உண்மையிலே மருந்து வகைகளையே தயாரிக்கின்றது என்று கூறிய கடாபி அமெரிக்காவின் எந்தவொரு தாக்குதலுக்கும் முகம் கொடுக்கத் தயாராக இருப்பதாகவும் எச்சரிக்கை செய்தார்.

இதேவேளை இரசாயன ஆயுதத் தொழிற்சாலை ஒன்றைக் கட்டுவதற்கு மேற்கு ஜெர்மன் கம்பனி ஒன்று உதவி செய்திருப்பதாக அமெரிக்கா மேற்கு ஜெர்மனிடம் ஆட்சேபத்தைத் தெரிவித்தது. ஆனுல் மேற்கு ஜெர்மனே இது பற்றிய தகவல்கள் எமக்கு எதுவும் கிடைக்கவில்லை என்று கூறிவிட்டது.

அமெரிக்கா லிபியா இரசாயன ஆயுதங்களைத் தயாரிக்கிறது என நேசநாடுகளிடம் கூறிவந்திருக்கின்றது. தனது நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்காகவே அது அவ்வாறு செய்திருக்கின்றதென்பது கண்கூடு.

கடந்த நாலாந்திகதி கென்னடி என்ற அதிநவீன விமானந்தாங்கிக் கப்பலும் அதனுடன் பன்னிரண்டு போர்க்கப்பல்களும் மத்திய தரைக்கடலை நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்தன. இக் கப்பல்கள் வருவது பற்றி அமெரிக்காவிடம் கேட்டபோது இக் கப்பல்கள் வழமையான பயிற்சிகளில் ஈடுபடுவதற்காகவே அங்கு செல்கின்றன என்று பதில் வந்தது.

இப் பதில் வந்த சில மணி நேரங்களில் அமெரிக்காவின் கென்னடி விமானந் தாங்கிக் கப்பலில் இருந்து புறப்பட்ட எவ் 15 ரக விமானம், லிபியாவின் எவ் 23ரகத்தைச் சேர்ந்த இரண்டு ஜெட் விமானங்களைச் சுட்டு வீழ்த்திவிட்டது.

இச் சம்பவம் பற்றி, அமெரிக்க வெள்ளை மாளிகை குறிப்பிடுகையில் ''கென்னடி கப்பலை நோக்கி இரு ஜெட் விமானங்களும் பறந்து வந்து கொண்டிருந்தன. எமது ராடார் திரையில் விமானங்கள் தெரிந்தவுடனே தற்பாதுகாப்புக் கருதி சுடப்பட்டது'' என்று விளக்கம் கூறியது.

ஹோர்மூஸ் குடாவில் ஈரானிய பயணிகள் விமானத்தை (ஈரான் எயர் ஓ 300) சுட்டு வீழ்த்தியபோதும் இந்தப் பதிலையே அமெரிக்கா சொன்னது. முழுப் பூசனிக்காயை சோற்றுக்குள் மறைப்பதில் அமெரிக்காவுக்கு நிகர் அமெரிக்காதான்.

இத் தாக்குதல் திட்டமிடப்பட்ட தாக்குதல்தான் கடந்த இருபத்திரண்டாந்திகதி அமெரிக்க ஜனதிபதி றீகன் தொலைக்காட்சி உரையின் போது, லிபியா இரசாயன ஆயுதங்கள் தயாரிப்பதை நிறுத்தவேண்டும், இன்றேல் நாம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய நிலை ஏற்படும் என எச்சரித்திருந்தார்.

அமெரிக்காவின் இத் தாக்குதல் நடவடிக்கைகளை உலகம் வரவேற்றதாகத் தெரியவில்லை. அமெரிக்கா லிபியா இரசாயன ஆயுதங்களைத் தயாரிப்பது பற்றிய தகவல்கள் எம்மிடம் இருக்கின்றன நாம் வானில் இருந்து தொழிற்சாலையை செய்கோள் மூலம் படம் பிடித்து வைத்திருக்கின்ரேம் என்று கூறுவதோடு அப்படத்தையும் தனது நேச நாடுகளுக்கும் காட்டியுள்ளது

மேற்கு ஜெர்மன் வான் புகைப்படத்தை ஏற்றுக் கொள்ளவில்லை அதேபோலவே

### பூரணன்

அமெரிக்காவின் ஏனைய நேச நாடுகளும் தயக்கம் காட்டியுள்ளன.

அமெரிக்காவோ லிபியா 1925 இல் ஜெனிவாவில் இரசாயன ஆயுதங்களுக்கு எதிராக செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையை மீறுவதாகக் கூறுகின்றது லிபியாவோ எம்மிடம் இரசாயன ஆயுதத் தொழிற்சாலை இல்லை,மருந்து தயாரிக்கும் தொழிற்சாலையே உண்டு என்றும் அதனை நேரடியாக வந்து பார்க்கலாம் என்றும் கூறுகிறது இதற்கு அமெரிக்கா தயாரில்லை.

கடாபி ஏமாற்று வேலைகள் செய்வதில் கைதேர்ந்தவர் என்று கூறுகிறது இந்த இடத்தில் அமெரிக்கா தன்னைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தால் அது தனக்கும் பொருந்தும் என்பதை உணர முடியும்.

1986 ஆம் ஆண்டு ஏப்பிரல் 16 ஆந் திகதி அமெரிக்க விமானங்கள் லிபியத் தலைநகர் திரிபொலியில் கேணல் கடாபியின் தலைமையகத்தின் மீது குண்டுமாரி பொழிந்துவிட்டுத் திரும்பியது 43 லிபியர்கள் கொல்லப்பட்டார்கள் 160 பேர் காயமடைந்தார்கள்.

ஏப்பிரல் ஆருந்திகதி மேற்கு ஜெர்மனியில் உள்ள மேற்கு பெர்லினில் அமெரிக்கப் போர் வீரர்கள் பொழுதுபோக்குவதற்குப் ''புகழ் பெற்ற டிஸ்கோ'' இரவு விடுதியில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவமே இத் தாக்குதலுக்கான காரணமாகும். இக் குண்டுவெடிப்பில் படை வீரர்களில் ஒருவரும் துருக்கியப் பெண் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

லிபியாவே இக் குண்டு வெடிப்புச் சம்பவத்திற்குச் சூத்திரதாரி என்பதை லிபியா அனுப்பிய வயர்லெஸ் செய்திகளை எலெக்ட்ரொனிக் கருவிகள் மூலம் இடைமறித்துக் கேட்டதாகவும் றீகன் கூறினர் இத் தாக்குதலுக்குப் பிரிட்டனே அமெரிக்காவுக்குத் தள உதவி செய்தது என்பதை இவ்விடத்தில் சுட்டிக் காட்டுதல் பொருத்தம்.

1986 ஏப்ரல்16 -ல் லிபிய தலைநகர் மீது தாக்குதல் நடத்திவிட்டு அமெரிக்க விமானங்கள் திரும்பியபோது றீகன் கூறிய வார்த்தைகள் இவைதான் ''இன்று நாம் எதைச் செய்திருக்க வேண்மோ அதனையே செய்தோம் தேவைப்படின் அதனை மீண்டும் செய்வோம்.

லிபியா ஜெட் விமானத் தாக்குதல் சம்பவத்தை ஐ நா. விடம்புகார்செய்துள்ளது. விசேட பாதுகாப்புச் சபைக் கூட்டத்தைக் கூட்டுமாறுவிடுத்தவேண்டுகோளை அடுத்து ஐ நா பாதுகாப்புச் சபை ஐந்தாந்திகதி கூடியது. இதன் தீர்மானங்கள் கட்டுரை எழுதும் வரைகிடைக்கவில்லை எதிர்வரும் ஏழாந்திகதிபாரிஸ் நகரில் 140 நாடுகளின் பிரதிநிதிகள் கூடி இச்சம்பவம் குறித்து ஆராய்வார்கள்

இத் தாக்குதல் சம்பவம் நடைபெறுவதற்கு முன் கடந்த மூன்ருந்திகதி இரவு நடந்த ஐ. நா இரகசிய கூட்டத்தில் இருபத்து மூன்று மண்டல சார்பற்ற நாடுகளும் லிபியாவிற்கு ஆதரவு தெரிவிப்பது என்றும் அமெரிக்க நடவடிக்கைகளை எதிர்ப்பது என்றும் தீர்மானித்தன என்பது குறிப்பிடத்தகுந்தது

சோவியத் யூனியன் அமெரிக்கா சர்வதேச சட்ட விதி முறைகளை மீறியுள்ளது என்று குற்றஞ் சாட்டியதோடு மேற்காசியசமாதான முயற்சிகளுக்கு குந்தகம் ஏற்படலாம் என்றும் அச்சம் தெரிவித்துள்ளது அமெரிக்க அச்சுறுத்தலில் இருந்து லிபியாவைப் பாதுகாக்க 1986 -ல் சோவியத்யூனியன் தனது போர்க்கப்பல்களை திரிபொலி நோக்கி நகர்த்தியமையை இச் சந்தர்ப்பத்தில் நினைவு கூர்வது பொருத்தமானதாகும்

சோவியத் பத்திரிகை 'பிராவ்டர்' அமெரிக்க அடாவடித்தனங்களைக் கண்டித்துள்ளது. 'றெட்ஸ்ரா' என்ற சோவியத் ராணுவப் பத்திரிகை மத்தியதரைக் கடலை நோக்கி சென்ற விமானந் தாங்கிக் கப்பலின் புகைப் படத்தை பிரசுரித்து காரசாரமாக கண்டித்துள்ளது.

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸிர் அரபாத் அமெரிக்காவின் இந்த நடவடிக்கை மேற்காசிய சமாதான முயற்சிகளைப் பாதிக்கும் என்று கூறியுள்ளார்.

எமக்கு இறுதியாகக் கிடைத்த செய்திகளின்படி லிபியத் தலைவர் கேர்ணல் கடாபி அமெரிக்காவின் இந்த காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று எச்சரித்துள்ளார்.

... 15 ஆம் பக்கம் பார்க்க

## செயற்கரிய செய்தோர்

சங்கப் புலவர்கள் தம்முள் ஒற்றுமையும், பெருமதிப்பும் உடையவர்கள் ஒரு புலவரின் அறிவாற்றலையும், உயர் பண்புகளையும் இன்னெரு புலவர் போற்றிப் பாராட்டப் பின் நிற்பதில்லை. கபிலரின் அறிவாற்றலையும் அவரது பாடலின் பொருட் சிறப்பையும் வேறு புலவர்கள் பாராட்டிப் பாடிய பாடல்கள் பல.

வறுமையால் வாடிய புலவர் ஒருவர் தகுதி வாய்ந்த அரசன் ஒருவனைப் பாடிப் பரிசில் பெறுவார். வறுமை தீர்ந்து பொருளுடன் வரும் வழியில் இன்னெரு புலவரைக் காண நேர்ந்தால் அவரும் பரிசில் பெற வேண்டும் என எண்ணும் பரிசில் பெற்ற புலவர் தாம் காணும் புலவரை ''சிறப்புகள் பல பொருந்திய அரசனைப் பாடிப் பரிசில் பெறு'' என்று ஆற்றுப் படுத்துவார். புலவர்களின் ஒற்றுமைக்குப் புறநானூற்றிற் பல சான்றுகள் உள்ளன.

இளம் தத்தன் என்னும் புலவர் சோழன் நலங்கிள்ளி என்னும் அரசனிடம்

### கோவூர்கிழார்

சென்ருர். நலங்கிள்ளியும், நெடுங்கிள்ளியும் அப்போது பகை கொண்டிருந்தமையால் இளம் தத்தன் என்னும் புலவர் தன்பால் ஒற்றறிய வந்த ஒற்றன் என்று நினைத்தான் நெடுங்கிள்ளி. எனவே புலவரைக் கொல்லுவதற்கு முற்பட்டான். இதனைக் கோவூர்க்கிழார் என்னும் புலவர் அறிந்தார். மிகவும் வேதனைப்பட்டார். நெடுங்கிள்ளியிடம் விரைந்து சென்ருர்.

''அரசே, புலவரது பரிசில் வாழ்க்கை பிறர்க்குத் தீங்கு செய்வது அன்று. வள்ளல்கள் பாற் சென்று அவர்களைப் பாடிப் பரிசில் பெற்றுத் தாமும் உண்டு பிறர்க்கும் கொடுப்பது அவர் தம் வாழ்வு. அவர் அது மட்டுமன்று மண்ணும் அரசராகிய உம் போன்றவரின் தலைமையையும் உடையது'' அதனுல் இளம்தத்தன் ஒற்றன் அல்லர், அவரை விட்டுவிடு'' என்ருர்.

கோவூர்க் கிழாரின் அறிவுரையைக் கேட்ட அரசனும் புலவரைக் கொல்லாது விட்டான். கோவூர்க் கிழார் தம்மைப் போன்ற இன்னெரு புலவரின் உயிரைக் காத்தவர் ஆனர்.

## தரிசனம்

ஈழத்து இலக்கிய உலகிலிருந்து வெளிவரும் செய்திகள் கலை,இலக்கிய நண்பர்களுக்கு மகிழ்வூட்டுவதாகவுள்ளன.

புதிய புதிய நூல்கள், சஞ்சிகைகள்,வாரப்பதிப்புகள் இந்த மண்ணிலிருந்து பிரசவமாகப் போவதாக வெளியாகும் தகவல்கள், இலக்கியப் பசியுடன் இருப்பவர்களை மகிழ்விக்கத்தானே செய்யும்.

1988-ம் ஆண்டுக்கு இலக்கியப் பிரியாவிடை வழங்கிய பெருமை மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவுக்குரியது.

இவரது அனுபவமுத்திரைகளாக அமைந்த 'தூண்டில்' என்ற நூலே கடந்த ஆண்டில் வெளிவந்த ஈழத்தின் கடைசி நூலாகும்.

தமிழிலக்கிய உலகின் 'பிரகாச' எழுத்தாளரான கோகிலா மகேந்திரனின் தலைமையில்தனது தூண்டிலை வெளியிட்டு ஜீவா ஒரு சாதனை புரிந்துள்ளார்.

இந்த இடத்தில் இன்னென்றையும் குறிப்பிட வேண்டும்.

நோர்வே தமிழ்ச் சங்கம் நடத்திய சிறுகதைப் போட்டியில் கோகிலா முதற்பரிசில் பெற்றுள்ளார். இப் போட்டியில் பங்குபற்றிய சில மூத்தவர்கள் பின்னுல் தள்ளப்பட்டு விட்டனர்.

இதே சங்கத்தினரின் கவிதைப் போட்டியில் திரு. விஸ்வரத்தினம் முதலாம் பரிசைப் பெற்றுள்ளார்.

இருவருக்கும் எங்களின் ஆழ்ந்த பாராட்டுக்கள்.

ஈழத்து இலக்கியப் பரப்பில் வைத்தியத் துறையிலும் இலக்கியத்துறையிலும் ஈடுபாடுடையவர்கள் வெகுசிலரே.

டாக்டர் நந்தி, தி. ஞானசேகரன், எம். கே முருகானந்தம், புலோலியூர் சதாசிவம், ச. முருகானந்தம் என்று விரல் விட்டு எண்ணக் கூடியவர்களேயுள்ளனர்.

இந்தவரிசையில் டாக்டர் நந்திக்கு அடுத்ததாக, வைத்தியக் கட்டுரைகளை இலக்கியப் பாணியில் மக்களுக்கு வழங்கி வருபவர் டாக்டர் எம். கே. முருகானந்தம் மட்டுமே.

வாராவாரம் வாரமுரசொலியின் வைத்தியக் கலசத்தில் அவரின்தனித்திறமையை எமது வாசகர்கள் அறிந்து வருகின்றனர்.

டாக்டர் அவர்களின் ''தாயாகப்போகும் உங்களுக்கு'', ''எயிட்ஸ்'' ஆகிய இரு நூல்கள் எதிர்வரும் 15-ம் திகதி வெளிவரவுள்ளன.

இவ்விரு நூல்களும் இந்த மண்ணின் வாசனையை நிச்சயமாக வெளியுலகுக்குக் கொண்டு வருமென நம்பலாம்.

எஸ். திருச்செல்வம்
பிரதம ஆசிரியர்
முரசொலி / வாரமுரசொலி

# பொங்கலோ பொங்கல்

துன்பங்கள் தொலைக எங்கும்
சுடரொளி விளக்கைப் போன்றே
இன்பங்கள் ஜொலிக்க யார்க்கும்
இன்னல்கள் மூழ்க என்றும்
அன்பெங்கள் நெஞ்சிற் பாய்ந்தே
அவலங்கள் நீங்க வென்றே
முன்பெங்கள் முன்னோர் சொன்ன
முதுமொழி காத்து வாழ்வோம்.

மண்ணிடை வாழும் எங்கள்
மனமதை ஒன்று சேர்த்து
விண்ணிடை உதயம் ஆகும்
விரிசுடர்ப் போற்றி செய்வாம்
பண்ணிடை கவிதை கொண்டே
பாரிடைப் பகைமை நீங்க
கண்ணிடை ஒளியே யன்ன
கதிரவற் போற்றி செய்வோம்.

யாரொடு நோகோம் இறைவா
ஆரொடு சொல்வோம் குறையை
சீரொடு சிறப்பு எல்லாம்
சிறுப்பினப் பட்டோர் வாழ்வை
வேரோடும் கல்வி விண்மேல்
வீசிய செடியைப் போன்றே
ஊரோடும் கலங்கி நின்றோம்
உத்தமா உவகை காட்டாய்.

ஆழ்கடலான்

# நீங்களே பெரிய மகான்

ஒரு ஆச்சிரமத்தில் ஓர் இளந் துறவி தன் சிஷ்யரோடு இருந்தார். அப்போது ஓர் வாலிபன் வந்து வீழ்ந்தான். துறவி கேட்டார்.

'ஏன் மகனே என் காலில் விழுகிறாய்? உனக்கு ஏதேனும் கஷ்டம் உண்டா?'

அதற்கு அவ் வாலிபன், 'எனது துணைவி மிகவும் கொடுமைக்காரி. நான் திருமணம் செய்து 6 வருடம் அவளிடம் நான் பட்ட பாடு கொஞ்சநஞ்சமல்ல. நான் பெரும் செல்வந்தன். என் சொத்துக்களை எல்லாம் அவளிடமே கொடுத்து விட்டு வந்து விட்டேன். அடியேனையும் உங்கள் சிஷ்யனாக ஏற்றுக் கொள்ளுங்கள்' என்று பதிலளித்தான்.

அவர் அவனை ஆச்சிரமத்தின் பிரதம சிஷ்யனாக ஏற்றுக் கொண்டார்.

சிறிது காலம் செல்ல இளந்துறவி ஊர் சுற்றிப் பார்க்கப் போவதாகக் கூறி தனியே சென்றார். ஓராண்டாகியும் அவர் ஆச்சிரமத்திற்கு திரும்பவில்லை. பிரதம சிஷ்யனாக இருந்த இளம் பணக்கார வாலிபன் ஆச்சிரமத்தின் பெரும் சுவாமியாகி விட்டார்.

ஓர் நாள் அவரின் காலில் இளம்குடும்பஸ்தன் ஒருவன் வீழ்ந்தான் 'என்னை உங்களின் சிஷ்யனாக ஏற்றுக் கொள்ளுங்கள்' என்று அக் குடும்பஸ்தன் கேட்டான்.

அச் சுவாமியார், 'மகனே! உனக்கு என்ன கஷ்டம்?' என்று கேட்டார்.

அதற்கு அந்தப் புது குடும்பஸ்தன் சொன்னான்: 'சுவாமி உங்களுக்கு என்னைத் தெரியவில்லையா? நான் உங்களின் குருவாக இருந்தவன். உங்களின் மனைவியைத் திருமணம் செய்து ஒரு வருடத்திற்குள்ளேயே வாழ்க்கை வெறுத்து விட்டது. அவளை கைவிட்டுவிட்டு வந்து விட்டேன். நீங்களே பெரிய மகான். ஏனெனில் நீங்கள் அவளோடு 6 வருடங்களல்லவா இருந்தீர்கள்' என்றான் புது சிஷ்யன்.

# நாற் பிரிவில் தொகைப் பெயர்கள்

| | |
|---|---|
| நாற்பாதம் | — சரியை, கிரியை, யோகம், ஞானம். |
| நால் வேதம் | — இருக்கு, யசுர், சாமம், அதர்வணம். |
| நானிலம் | — குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல். |
| நால்வர் | — அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர். |
| நான்கு உபாயம் | — சாம, தான, பேத, தண்டம். |
| நால் முனிவர் | — சகனர், சனந்தரர், சனாதரர், சனற்குமாரர். |
| நாற் பயன் | — அறம், பொருள், இன்பம், வீடு. |
| நாற் படை | — யானை, தேர், குதிரை, காலாள். |
| நாற் கதி | — தேவர், நரகர், மனிதர், விலங்கு. |
| நாற் கவி | — ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம். |
| நால்வகைப்பொன் | — ஆடகம், கிளிச்சிறை, சாம்பூநதம், சாதரூபம். |
| நால்வகை உண்டி | — உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன. |
| நால்வகை முத்தி | — சாலோகம், சாரூபம், சாமீபம், சாயுச்சியம். |
| நால்வகை நிலை | — பிரமசாரி, கிருகத்தன், வானப்பிரத்தன், சந்நியாசி. |
| நாற் குணம் | — (பெண்:) அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு. (ஆண்:) அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி. |
| நாற் சொல் | — பெயர், வினை, இடை, உரி. |

இ. அனுரதன்




## பாரதியை சந்தித்தார் கி. ஆ. பெ

எனக்கு அப்போது 16 அல்லது 17 வயதிருக்கும் "பிரஜானு கூலன்" பத்திரிகை ஆசிரியர் ராமானுஜுலு நாயுடு ஸ்ரீரங்கத்திலிருந்துதிருச்சிக்குவருவார்காய்கறிவாங்க பாரதியாரை அவருக்கு நன்றாகத் தெரியும். ராமானுஜுலு வீட்டிற்குப் பாரதியார் வருவார். என்னைப் பாரதியாரிடம் நாயுடு அறிமுகப்படுத்திவைத்தார்.

"இந்த இளைஞர் புகையிலை வியாபாரம் பண்ணுகிறவர்; என் பத்திரிகையை ஆர்வமுடன்படிப்பார்இளமையிலேயே தமிழ்ப்பற்று அதிகமாக உள்ளவர் பெயர் விசுவநாதம்" என்று என்னைப் பாராட்டி அறிமுகம் செய்துவைத்தார்.

பாரதியார், "எதுவரையில் படித்திருக்கிறீர்கள் தம்பி" என்று கேட்டது மட்டும் நினைவில் இருக்கிறது.

நான் ஒன்றும் படிக்கவில்லை; சிறு பிள்ளையாக இருந்த போதே வீட்டில் வேலைக்கு அனுப்பி விட்டார்கள்; ஆகவே எந்தப் பள்ளிக்கூடத்திலும் சேர்ந்து படிக்கவில்லை என்றேன்.

கதிர் மாணிக்கம்

## ஒரு பாட்டிற் பத்துப்பாட்டு

சங்க இலக்கியம் பத்துப் பாட்டு எட்டுத்தொகை என்பன பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும் எவை என்பதைப் பழையதமிழ்ப் பாடல் ஒன்று கூறுகிறது. இதோ அந்தப் பாடல்.

"முருக பொருநாறு பாணி
ரண்டு முல்லை
பெருகுவளமதுரைக்
காஞ்சி—மருவினிய
கோல நெடுநல்வாடை கோல்
குறிஞ்சிபட்டினப்
பாலைகாடாத்தொடு பத்து"

பாடலில் வரும் பத்துப் பாட்டு

திருமுருகாற்றுப் படை, பொருநராற்றுப் படை சிறுபாணாற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை முல்லைப் பாட்டு, மதுரைக் காஞ்சி நெடுநல் வாடை, குறிஞ்சிப் பாட்டு பட்டினப்பாலை, மலைபடுகடாம்.

## வைத்திய கலசம்

# உங்களுக்கு அலர்ஜி ஏற்படின்

டாக்டர் எம். கே. முருகானந்தன் M. B. B. S. (Cey)

★ நீங்கள் ஏதாவது ஒருவகை அலர்ஜியால் பாதிக்கப்பட்டிருந்தால், அதற்கான காரணப் பொருளை இனங்கண்டு அதனை தவிர்ப்பதே சரியான வழியாகும். ஆனால் அதை இனம்கண்டு கொள்வது மிகவும் சிரமமான அல்லது முடியாத காரியமாகவே இருக்கும். ஆனால் வளர்ச்சியடைந்த நாடுகளில் இவற்றைக் கண்டு பிடிக்கச் சில தோல் பரிசோதனைகளைச் (Skin Test) செய்கிறார்கள்.

★ சுவாசத்தினால் அலர்ஜியை ஏற்படுத்தும் பொருட்களை (உ-ம்: மகரந்தம், தூசி) இனங் காண்பதற்கே இந்த தோற் பரிசோதனைகள் முக்கியமாக உதவும். பல்வேறு வகைப்பட்ட மரங்கள், புல்கள் ஆகியவற்றின் மகரந்தங்கள், பூனை நாய் போன்ற மிருகங்களின் மயிர், தூசியில் இருக்கும் கிருமி (Dust Mite) போன்றவையே முக்கியமாகப் பரிசோதிக்கப்படுபவை. இவை மிகக் குறைந்த செறிவுள்ள திரவங்களாக்கப்பட்டு, அவற்றைத் தனித்தனியே ஊசிமூலம் தோலில் ஏற்றுவார்கள். ஊசி ஏற்றப்பட்ட ஏதாவது இடத்தில் 20 நிமிடங்களுக்குள் பூச்சி கடித்தது போன்ற தடிப்பு ஏற்பட்டால் அவருக்கு அப்பொருளுக்கு அலர்ஜி என்று கணிப்பார்கள்.

★ இதைத் தவிர ராஸ்ட் டெஸ்ட் (Rast Test –Radio Allergosorbent Test) சைடோடொக்சிக்(Cytotoxic) டெஸ்ட் போன்றவற்றாலும் அலர்ஜியை ஏற்படுத்தும் பொருளைக் கண்டுபிடிக்கக் கூடியதாயிருக்கும்.

★ உணவுப் பொருட்களால் ஏற்படும் அலர்ஜிகளை இத்தகைய பரிசோதனைகள் மூலம் கண்டு பிடிப்பது முடியாது. ஏனெனில் உணவுப் பொருட்கள் சமிபாடு அடையும்போது பல்வேறு மாற்றமடைகின்றன. இதில் எந்த நிலை அலர்ஜியை உண்டாக்கும் என்று சொல்ல முடியாது.

★ உணவு அலர்ஜியை நீங்களே கண்டுபிடிக்க முயலலாம். ஏதாவது ஒரு பொருள் உங்களுக்கு அலர்ஜியை ஏற்படுத்துகிறது என நீங்கள் சந்தேகித்தால் அப்பொருளை 5 நாட்களுக்கு உண்ணாமல் தவிருங்கள். பின் ஒருமுறை உண்ணுங்கள். அப்பொருளைத் தவிர்க்கும் போது அலர்ஜியின் குணங்குறிகள் மறைந்து உண்டபின் அது மீளவும் தோன்றுமாயின் தொந்தரவு தரும் பொருளைக் கண்டு பிடித்த பாக்கியசாலி ஆவீர்கள்.

★ ஆயினும் முன்பு கூறியபடி சுலபமாகக் கண்டுபிடிப்பது கஷ்டமானது. காரணங்கள் பல. ஒரு பொருளுக்கான அலர்ஜியின் குணங்குறிகள் 3–4 நாட்களுக்கு மேலும் நீடிக்கலாம். சிலவேளை பல உணவுப் பொருட்கள் அலர்ஜியை ஏற்படுத்தலாம். பல தருணங்களில் உங்களுக்கு சிறிதும் சந்தேகத்தை ஏற்படுத்தாத, நீங்கள் மிகவும் விரும்பி அடிக்கடி உண்ணும் பொருளே காரணமாயிருக்கலாம் அத்துடன் மா, பால், முட்டை போன்றவை பல்வேறு உணவுப் பதார்த்தங்களிலும் கலக்கப்படுபவை என்பதையும் மறந்து விடாதீர்கள்.

★ உணவு அலர்ஜியை ஏற்படுத்தக் கூடிய எல்லா வகை உணவுகளையும் 5 நாட்களுக்குத் தவிர்த்து பத்தியமிருந்து, பின் அப்பொருட்களை ஒவ்வொன்றாக உணவில் சேர்ப்பதன் மூலம், அலர்ஜியை ஏற்படுத்தும் பொருளைக் கண்டுபிடிப்பது மற்றுமோர் முறையாகும்.

★ பல குழந்தைகளுக்கு முட்டை, பசுப்பால், பால்மா, சொக்கிளட் ஆகியவற்றை உண்டபின் தொய்வு அல்லது எக்ஸிமா உண்டாவது அவதானிக்கப்பட்டுள்ளது. குறைந்தது ஆறுமாதம் மட்டுமாவது தாய்ப் பாலைத் தவிர வேறு உணவுகளைக் கொடுக்காத குழந்தைகளுக்கு இத்தகைய அலர்ஜி ஏற்படுவதில்லை என நம்பப்படுகிறது.

★ ஒவ்வாத பொருட்கள் உடலில் சேர்ந்தவுடன், உடலில் ஹிஸ்டமீன் (Histamine) என்ற பொருள் பரவுகிறது. இப்பொருளே பெரும்பாலான அலர்ஜியின் குணங்களுக்குக் காரணமாகிறது. இதனை முறியடிக்க அன்டி ஹிஸ்டமீன் (Antihistamine) என்ற வகையைச் சேர்ந்த மருந்துகள் உபயோகிக்கப்படுகின்றன. அலர்ஜிக்காக வைத்தியர் உங்களுக்கு அடிக்கடி கொடுக்கும் பிரிடோன் (Piriton), பெனகன் (Bhenergan), அவில் (Avil), ஹிஸமனல்(Hismanal), பெனறில் (Benadryl), அக்ரிபெட் (Actifect) போன்றவை இந்த வகையைச் சேர்ந்ததே.

★ சில தருணங்களில் ஸ்டீரொயிட்ஸ் (Steroids) என்று சொல்லப்படும் கடுமையான மருந்துகளும் அலர்ஜியின் அசௌகரியமளிக்கும் குணங்குறிகளைக் குணப்படுத்த உபயோகிக்கப்படுகின்றன. பிரட்னிசலோன்(Predniso-Lone), ஹைரோகோட்டிசோன் (Kyorocortisone) இத்தகையானவையே.

★ மருந்துகள் அலர்ஜியின் தொல்லை தரும் குணக்குறிகளை மாற்றவே உதவுகின்றன. அலர்ஜியை அவற்றால் இல்லாது ஒழிக்க முடியாது. அதற்கு ஒரேவழி அலர்ஜியை உண்டாக்கும் பொருளை இனங்கண்டு தவிர்ப்பதே. இன்டால் (Intal) போன்ற மருந்துகள் அலர்ஜியை குறிப்பிட்ட சில நேரத்திற்கு ஏற்படாமல் தடுக்கும்.

# யாழ்ப்பாண மாவட்டத்தின் இரண்டாவது நிர்வாக நகராக கொடிகாமம் அமையலாமா?

1978இல் முல்லைத்தீவுமாவட்டமும்1983-ல் கிளிநொச்சி மாவட்டமும் உருவாக்கப்பட்டதனுல் யாழ்ப்பாண மாவட்டத்தின் நிலப்பரப்பு 2469 சதுர கிலோ மீற்றரிலிருந்து 1053 சதுர கிலோ மீற்றராகக் குறைவடைந்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் தற்போதைய நிலப்பரப்பு இம் மாவட்டம் 1978 இல் கொண்டிருந்த நிலப்பரப்பில் 40 வீதமாகும். மேலும் குடாநாட்டின் ஒரு பகுதியான பச்சிலைப்பள்ளி,கிளிநொச்சி மாவட்டத்தின் ஒரு பகுதியாகவுள்ளது. 1981 இல் எடுத்த குடிசனக் கணிப்புப்படி யாழ்ப்பாண மாவட்டம் தற்போதைய கிளிநொச்சி மாவட்டம் உட்பட 881112 பேரைக் கொண்டிருந்தது. மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்ட பொழுது யாழ்ப்பாண மாவட்டம் 738787 பேரையும், புதிய கிளிநொச்சி மாவட்டம் 92325 பேரையும் முறையே பெற்றன. கிளிநொச்சி மாவட்டம் பிரிவினைக்கு முன்னைய யாழ்ப்பாண மாவட்டத்தின் 11.1 வீத மக்களையும் 54 வீத நிலப்பரப்பையும்பெற யாழ்ப்பாண மாவட்டம் 88.9 வீத மக்களையும் 46 வீத நிலப்பரப்பையும் பெற்றது. கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் குடிசன வடர்த்தி 1981இல் சதுர கிலோ மீற்றருக்கு முறையே 83 பேராகவும் 725 பேராகவும் இருந்தது.

புதிய நிர்வாக மாவட்டங்கள் உருவாக்கப்பட்டதனுல் யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்திலுள்ளிருந்த பெருநிலப் பகுதி, நிலக்குடியேற்றங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள், விவசாயப் பரப்புக்கள், காட்டுப் பகுதிகள், அபிவிருத்தி செய்யக் கூடிய நிலங்கள் மற்றும் பச்சிலைப்பள்ளி தென்னந்தோட்டப் பகுதிகள் போன்றவை மாவட்டத்து நிர்வாகத்துக்கு வெளியில் சென்றுவிட்டன. யாழ்ப்பாண மாவட்டத்து அபிவிருக்கி முயற்சியில் கடந்த 50 ஆண்டுகள் வரை பெருநிலப்பகுதி அபிவிருத்தியே முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தது. யாழ்ப்பாண மாவட்டத்தின் தற்போதைய அமைப்பில் இதுவரை கடைப்பிடித்து வந்த அபிவிருத்தி திறமுறை மேலும் பொருத்தமானதாக இருக்காது. தற்போதைய மாவட்டம் பெரிய குடிசனத் தொகையையும், உயிர் வாழ் குடிசன வடர்த்தியையும், 40 வீதத்திற்கு மேற்பட்ட நகரப் பகுதியையும் கூடுதலான விவசாயச் சார்பில்லாத கிராமிய மக்களையும் கொண்டு காணப்படுகிறது. மாவட்டத்தின் இன்றைய பொருளாதாரவமைப்பில் விவசாயம், மீன்பிடி ஆகியவற்றுடன் சிறுகைத்தொழில்களும், சேவைத் தொழில்களும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. 1983 க்குப் பின்னர் இடம்பெற்ற நிகழ்வுகளால் மாவட்டத்தின் பொருளாதார நடவடிக்கைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. இன்று பிறநாடுகளிலிருந்து இப்பிரதேசத்தைச் சார்ந்தவர்கள் அனுப்பும் பணமும், உள்ளூர் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் போன்றனவுமே மாவட்டப் பொருளாதாரச் செயற்பாட்டில் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றன.

மாவட்டத்தின் இடஞ்சார்பு அபிவிருத்தியை நோக்க முதல், துறைசார்பு அபிவிருத்தி வாய்ப்புக்களை நோக்குமிடத்து விவசாயத் துறையை மேலும் விருத்தியாக்க நிலப்பற்றுக் குறைவு பெரும் தடையாக இருக்கின்றது மாவட்டத்தில் குறிப்பாக வலிகாமம் செம்மண் பிரதேசத்தில் விவசாயத்துக்குக் கீழ் இருக்கும் நிலப்பரப்புக்கள் படிப்படியாக வாழ்விடத் தேவைக்கு மாற்றப்பட்டு வருவதால் விவசாய நிலம் குறைவடைந்து வருகிறது மேலும் புதிய விவசாய நிலங்களைப் பெறுவதும் கடினமாக உள்ளது. மாவட்டத்தினுள் மூன்று வகையான எல்லை நிலங்கள் காணப்படுகின்றன. அவை யாவன


**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
**புவியியல் பீடத்தலைவர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**


(1) கலட்டுக்காணிகள் (2) மணற் பிரதேசங்கள் (3) தாழ்நிலத் தரவைகளும் சதுப்பு நிலங்களும். கலட்டுக் காணிகள் வலிகாமம் பகுதியில் குறிப்பாக அச்சுவேலி - தெல்லிப்பளை - பண்டத்தரிப்பு வீதிக்கும் வடக்குக் கடற்கரைக்குமிடைப்பட்ட பகுதியில் காணப்படுகின்றன இக் கலட்டுக் காணிகளில் கல்லுக் கிளறி எடுக்கப்பட்ட பின்னர் இவை மேல்மண்ணிட்டுத் தோட்டக் காணிகளாக மாற்றப்பட்டு வருகின்றன. மாவட்டத்தில் 10,000 ஏக்கர் கலட்டுக் காணிகள் இருப்பதாகமதிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இக்காணிகளைப் பயிர்ச்செய்கைக்கு ஏற்றதாக மாற்றியமைப்பது செலவு மிக்கதொன்ருகும். பயன்படுத்தப்படாத மணற்காணிகள் வடமராட்சி கிழக்குப் பகுதியில் காணப்படுகின்றன. இக்காணிகளில் பெரியளவில் பயிர்ச்செய்கை செய்ய முடியாது. தரவைக் காணிகள் உவர்த்தன்மை மிக்கதாகவும் மழைக் காலத்தில் இங்கு வெள்ளம் தேங்குவதாலும் இவை பயிர்ச் செய்கைக்குப் பொருத்தமற்றதாகவுள்ளன. மேலும் மாவட்டத்தில் அரசுக்குச் சொந்தமான நிலங்கள் மிகவும் குறைவாகவிருப்பதால் விவசாயம் சார்பான நில அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளுவது கடினமாகும். மாவட்டத்தின் விவசாய அபிவிருத்தி, நவீனப்படுத்தலிலும், புதிய பயிர்களை அறிமுகம் செய்தலிலுமே தங்கியுள்ளது. இம்மாவட்டத்தில் 13,000 பேர் நேரடியாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். நேரடியாகவும் மறைமுகமாகவும் மீன்பிடித்தொழிலில் ஒரு லட்சம் பேருக்கு மேல் தங்கியுள்ளனர். அண்மைக்கால நிகழ்வுகளால் மீன்பிடித் தொழில் பெரிதும் பாதிப்படைந்துள்ளது. இம் மாவட்டத்தில் மீன்பிடித்தொழில் விருத்திக்கு ஏற்ற நல்ல வாய்ப்புக்கள் இருப்பதால் இத்தொழிலைப் புனரமைப்புச் செய்தல் எதிர்காலத்தில் முக்கியதொரு நடவடிக்கையாக இருக்க வேண்டும்.

இம்மாவட்டத்தில் வருங் காலப் பொருளாதாரம்,கைத்தொழில், சேவைத்தொழில் வளர்ச்சியிலேயே கூடுதலாகத் தங்கியுள்ளது. சிறிய கைத்தொழில்கள் வளர்ச்சிக்கு இங்கு நல்ல வாய்ப்புண்டு. மாவட்டப் பொருளாதார வளர்ச்சியை அதிகரிப்பதற்கு உதவியாக போக்குவரத்து, துறைமுகம், வீடமைப்பு துறைகளின் வளர்ச்சியிலும் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

மாவட்டத்தின் மேற்குப் பகுதிக்கும் கிழக்குப் பகுதிக்குமிடையே காணப்படும் வேறுபாட்டைக் குறைக்கவும் தீவுப்பகுதியின் சமூக பொருளாதர அபிவிருத்தியைத் துரிதப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப் படவேண்டும். யாழ்ப்பாண மாவட்டத்தில் கிழக்குப் பகுதி குறிப்பாக கொடிகாமம் பகுதி ஒப்பீட்டு ரீதியில் அபிவிருத்தி வாய்ப்புக்களைக் கொண்டு காணப்படுகின்றது.

பிரதேசத் திட்டமிடல் நோக்கில் யாழ்ப்பாண மாவட்டத்தை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன:-

| பிரிவு | பரப்பு ச.கி.மீ. | குடிசனத்தொகை(1981) | குடிகளடர்த்தி ச.கி.மீற்றர் |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் மேற்கு | 322 | 464443 | 1445 |
| யாழ்ப்பாணம் கிழக்கு | 420 | 192234 | 458 |
| தீவுப்பகுதி | 201 | 82110 | 309 |

யாழ்ப்பாணம் மேற்குப் பிரிவு ஏழு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைக் கொண்டுள்ளது. யாழ்ப்பாணம், நல்லூர்ப் பிரிவுகள் யாழ்ப்பாண நகரத்தையும் அயற் கிராமங்களையும் உள்ளடக்கியுள்ளன. இவ்விரு பிரிவுகளும் உள்ளடக்கும் பிரதேசத்தை''பெரிய யாழ்ப்பாணம்'' என அழைக்கலாம். ஏனைய ஐந்து உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் வலிகாமம் பகுதியை உள்ளடக்குகின்றன. வலிகாமப் பகுதியில் மக்கள் மிகவும் நெருக்கமாக வாழ்வதுடன் சிக்கலானதும் செறிவானதுமான நிலப்பயன்பாடும் நிலவாட்சி முறைகளும் காணப்படுகின்றன. நிலப்பற்ருக்குறைவு, நிலப்பயன்பாட்டு மாற்றங்கள், நீர் உவர்த்தன்மையாதல் போன்றன இங்கு காணப்படும் முக்கிய பிரச்சனைகளாகவுள்ளன. இப்பகுதியில் காணப்படும் குடிசனத் தொகையைக் குறைப்பதற்குக் குடிசன இடப்பெயர்வு மாவட்டத்துக்கு உள்ளும் வெளியும் ஊக்குவிக்கப்பட வேண்டும். மாவட்டத்தின் மேற்குப் பகுதியிலிருந்து கிழக்குப் பகுதிக்கு மக்கள் இடம்பெயர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். இந்நோக்கத்தை நிறைவேற்ற கொடிகாமத்தை முக்கியதொரு நகரமாக விருத்தியாக்க வேண்டும். யாழ்ப்பாண நகரத்துக்கு அடுத்து கொடிகாமம் இரண்டாவது முக்கிய நிர்வாக நகரமாக விருத்தியாகக்கூடிய வாய்ப்புக்கள், வளங்கள் கொண்டு காணப்படுகிறது.

தீவுப்பகுதி இயற்கை வளம் குறைந்தும் பொருளாதார ரீதியில் பின்தங்கிய பகுதியாகவும் உள்ளது. தீவுப் பகுதியின் வளர்ச்சியை நன்னீர் பற்ருக்குறைவு. போக்குவரத்துச் சீர்கேடு, குடிசன வெளியேற்றம் போன்றன பெருமளவு பாதித்து வருகின்றன. மேலும் ஒவ்வொரு தீவிலும் காணப்படும் பிரச்சனைகள் சற்று வேறுபட்டும் காணப்படுகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தின் இடஞ்சார்பு அபிவிருத்தியில் குறிப்பாக தென்மராட்சி வடமராட்சி பிரிவுகளின் விருத்திக்குக் கொடிகாமத்தின் வளர்ச்சி மிக முக்கியமான தொன்ருகும். கொடிகாமத்தினை மாவட்டத்தின் பெரிய நகரமாக விருத்தி செய்வதற்குச் சாதகமாயிருக்கும் காரணிகள் பின்வருவாறு:-

1. கொடிகாமம் ஏற்கனவே சிறிய சந்தை நிலையமாக விருப்பதுடன் தென்மராட்சி கிழக்கின்பிரதான சேவைநிலையமாகவும் உள்ளது.
2. கொடிகாமம், தென்மராட்சி வடமராட்சிப் பிரதேசங்களின போக்குவரத்தில் முக்கியவிடத்தைப் பெற்றுள்ளது. வடமராட்சி மக்கள் கொடிகாமம் ஊடாகவே தென் பகுதிக்கான பிரயாணங்களை மேற்கொள்கிருர்கள்
3. கொடிகாமப் பகுதியைச் சூழவுள்ள நிலப்பகுதி விவசாய வளம் குறைந்த மணற் பிரதேசமாகவும் தரவைப் பகுதிகளாகவும் இருப்பதால் இவற்றைக் கைத்தொழில் வீடமைப்புக்கு தேவையான நிலங்களாகப் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும்.

... 15 ஆம் பக்கம் பார்க்க

# உணவில் உப்பை குறையுங்கள்

சோடியம் ஒரு கனிப்பொருள். இதை வெடியம் அல்லது உப்பின் மூலத் திணிமம் என்கிருர்கள். இயற்கையாக கிடைக்கும் சோடியம், நம் உணவுகள் பலவற்றிலும், பாண் வகைகளிலும், மருந்துகளிலும் கூட கலந்திருக்கிறது. நம் உணவில் உள்ள சோடியத்தின் பெரும் பகுதி உப்பிலிருந்து கிடைக்கிறது. சமையல் உப்பின் இரசாயனப் பெயர்; சோடியம் குளோரைட்டு. உலகில் ஒவ்வொரு ஆண்டும் சர்க்கரைக்கு அடுத்த படியாக அதிக அளவில் உணவில் பயன்படுத்தப் படும் பொருள் உப்பு ஆகும். நம்மில் பெரும்பாலோர் நமக்குத் தேவைப்படும் உப்பை விட அதிக அளவிலேயே உபயோகிக்கிருேம்.

நல்லாரோக்கியத்திற்கு சோடியம் மிகவும் அவசியம். இரத்தத்தின் சுழற்சித் தன்மையைப் பாதுகாப்பதில் சோடியம் பெரும் பங்கு வகிக்கிறது. இரத்த நாளங்கள் நீரை ஈர்த்துத் தம்முள் இருத்தி வைக்க சோடியம் உதவுகிறது. ஆனுல், அது எவ்வளவு உபயோகமான பொருளாயிருந்த போதிலும் நமது உடலுக்கு மிகச் சிறிய அளவிலேயே அது தேவை.

சோடியத்தை மிக உயர்ந்த அளவில் உணவில் சேர்த்துக் கொள்வது உயர் இரத்த அழுத்தத்தைக் கொண்டுவரும் காரணிகளுள் ஒன்ருகி விடும். இதற்கு வயது வேறுபாடு கிடையாது. உயர் இரத்த அழுத்தத்தைக் கவனித்துச் சிகிச்சை செய்யாமல் விட்டு விட்டால் அது இருதயத் தாக்கு, ஸ்ட்ரோக்குகள், சிறுநீரக நோய் ஆகியவற்றில் கொண்டுபோய் விட்டுவிடும்.

சோடியம் பல்வேறு மூலப் பொருள்களிலிருந்து நம் உணவில் வந்து சேருகிறது அது இயற்கையாகவும் உணவில் இருப்பதுண்டு; அல்லது உணவுப் பொருள்களைப் பதப்படுத்தும் போது சேர்க்கப் படுவதுண்டு; அதோடு சமைக்கும் போதும், பரிமாறும் போதும் சேர்த்துக் கொள்ளப் படுவதுண்டு. பதப்படுத்தப் பட்ட உணவுகள், ஏற்கனவே தயார்செய்யப்பட்ட

## உடல் நலம்

இறைச்சிகள், சிற்றுண்டிகளில் ஏராளமான சோடியம் திணிக்கப்பட்டுள்ளது.

நமது உணவில் சோடியத்தின் அளவைக் குறைக்கும் வழிகள் பின்வருமாறு;

1) செயற்கை முறையில் பதனம் செய்யப்பட்ட உணவு வகைகளில், ''சோடியம் குறைந்த உணவு'' என்று குறிப்பிட்டிருந்தால் அதன் அளவையும், நிறுவனங்கள் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

2) சோடியம் அடங்கிய சமையலுக்குத் தேவைப்படும் பொருள்களை நன்ருகத் தெரிந்துவைத்துக்கொள்ள வேண்டும். உதாரணம்- உப்பு..

3) சோடியம் குறைவாக உள்ள உணவுகளை செய்ய முயலுங்கள். புத்தம் புதிய பழங்கள்,காய்கறிகள் மற்றும் செயற்கை முறையில் பதப்படுத்தப்படாத உணவுகளையே சேர்த்துக்கொள்ளுங்கள்.

4) சமையல் செய்யும்போது உப்பின் அளவைக் குறைத்துச் சேருங்கள் .

5) சோடியம் குறைவாக உள்ள சுவையூட்டும் பொருட்களை உபயோகியுங்கள் அல்லது எலுமிச்சைச் சாறு, தாவரங்களிலிருந்து கிடைக்கும் வாசனைப்பொருட்கள் ஆகியவைகளை உணவிற்கு சுவையூட்டப் பயன்படுத்தவும்.

6) பரிமாறும்போது, உணவில் உப்பைப் போடு முன் சுவைபார்த்துப்போடவும் எப்போதும் உப்பு மட்டாக இருப்பதே நல்லது.

7) மாதம் ஓரிரு முறைகளோ அல்லது வாரம் ஒருமுறையோ நாள் முழுவதும் உப்புக் கலவாத உணவுகளை மட்டுமே உண்ணுங்கள். இதனுல் முன்பு அதிகமாக உட்கொண்ட உப்பின் அளவைச் சரிப்படுத்திக் கொள்ளமுடியும்.

8) சாப்பிடும்போது சோடியம் உள்ள உணவுடன், அது இல்லாத உணவுவகைகளையும் சேர்த்துக்கொள்ளவும். ஒரு வேளை சோடியம் மிகுந்த உணவை உண்டால், அடுத்த வேளை அது இல்லாத உணவுகளை உண்ணலாம். மேற்கூறிய முறைகளைக் கையாளுவதன் மூலம் உணவில் சேரும் உப்பின் அளவைக் குறைத்து, எம் உடலை நன்ருக வைத்திருக்கலாம்.

(நன்றி: நல்வழி)

# ஈழத்துக் கவிஞர் பக்கம்

## தென்றல் இயம்புகிறது

ஓ... மானிடரே!
நில்லுங்கள்
உங்கள்
அரியாசனத்தின் அருகிருந்து
ஆசையோடு அளவளாவத்தான்
நான்
எழுந்து வந்திருக்கிறேன்
இம் மண்ணில்......
மைந்தர்கள் மலர்ந்தவுடன்
கரம் கூப்பி
கை குலுக்கி முதலில்
நான் தானே வரவேற்கிறேன்
நீங்கள்
இவ் உலகை வாசிக்கு முன்
என்னைத்தானே (சு)வாசிக்கிறீர்கள்
இதனால்...
நானும் கூட ஒரு
படைப்பாளிதானோ—என
எண்ணத் தோன்றுகிறது...
மலர்களும்
எனக்கு உறவுதான்...
யாரும் அறியாமல்
மறைவாக
மொட்டவிழ்ந்த
மலரின் நறுமணத்தை
மௌன பாஷையில்—நான்
மேனியில் சுமந்து
தூது செல்வதால்தான்...
மயங்கிய வண்டுகள்
மகிழ்ந்து...
மறு நாளே
பெண்பார்க்க வருகின்றன!
வனவாசம் மேற்கொண்டு
முகவரியின்றி இருந்த
மூங்கிலைக் கூட
நீங்கள்
முத்தமிட
முன் மொழிந்தவனே
நான்தான்
இதனால் தான்
கவிதையின்
காயங்களுக்குக்
கட்டுப் போடுகிறேனென்று
கவிஞர்கள் எல்லோரும்
என்னைக்
களவாடி—தங்கள்
கவித்துவத்திற்குக்
கணையாழி போடுகின்றனர்

நான் என்றுமே
ஏழைகளின் தோழன்தான்
பணக்கார வர்க்கத்தின்
மின்சார விளக்குகள்
மெழுகுதிரியை அணைத்து
விடுமாறு
எனக்கு
எச்சரிக்கைக் கடிதம்
அனுப்புகின்றன...
ஆனாலும் நான்
ஏழைகளின் தோழன்
தான்...
கோடை புகையும்போது
பலநாள்—நான்
பலமின்றி
நந்தவனத்தில்
நர்த்தனமாட முடியாமல்
அந்தப்புரத்தில் ஓய்வுதேடி
உறங்கி விடுகிறேன்...
நீங்களோ...
உறக்கம் கலையுமுன்பே
திட்டுக்களால்—என்னைத்
தட்டி எழுப்பி விடுகிறீர்கள்
ஆனால்...
மாரியில்...
பனித்துளி என்மேல்
பயணப்படுவதால்
பதமான குளிரோடு
புன்னகைக்கிறேன்
அப்போது கூட
உங்கள்
மேனியிலிருந்து—என்னை
விலக்கி வைத்து
விவாகரத்துக் கேட்கிறீர்களே
நியாயமா?
ஓ......
அன்பு நண்பர்களே!
விடிவுக்கு விடைதேடி
வினாவாகிப்போனீர் களோ?
சற்றே பொறுங்கள்
விஞ்ஞானத்தைப் பெயர்த்தெடுத்து
விடிவெள்ளியாய் அனுப்ப
மீண்டும் வருவேன்...
வருகிறேன்.

ஆர். ரூசற்

## நியாயம்தானா?

விடியலுக்கு முந்திய
பூபாளமே!
இரவின் அமைதியில்
இன்பமாய்த் தூங்கி
விடிவின் அதிர்ச்சியில்
விழிக்கள் எழுப்பும்
மனதின் கோலங்களை
மறக்க எண்ணும்
மனிதர்கள் நாங்கள்
துன்பச் சுமைகள்
பகலில் கனக்க
சோர்ந்து மனங்களும்
சோகத்தில் வாட
இரவின் வரவை
இமைகள் நோக்க
அமைதி தேடிடும்
அத்தனை மனங்களும்
இரவின் வரவால்
யாவும் மறந்து
இன்பம் கொள்ள
நீயும் ஏனோ?
மீண்டும் இசைத்து
சலனங்களைச்
சந்திக்க வைக்க
நினைப்பது நியாயம்தானா?

புங்கை எம். எம். குமார்

## மாங்கன்று விற்கப் படும்

வானத்திலே
நட்சத்திரங்களைகாண
வில்லை
மேகக் கூட்டங்களை
விசாரித்ததில்
அவை
சந்திரனுக்கு பெண்பார்க்க
போய்விட்ட
சங்கதியினை அறிந்து
கொண்டே......
என்– துவிச்சக்கரவண்டி
வீதி நெடுகிலும்
குழிகளை
குசாலம் விசாரித்துக்
கொண்டே
ஓடிக்கொண்டிருக்க
என் விழிகள்
விளம்பரப் பலகை
யொன்றை
விருந்தோம்பிக்கொண்டன
அது
மாங்கன்று விற்கப்படும்.

காலை– என்
மனைவி சொன்ன
வார்த்தைகள்
மனக்கண் முன் வந்தன.

இஞ்சருங்கோ...!
நல்லதாய் சந்தித்தால்
ஒரு மாங்கன்று

சொன்னது மனைவியல்
லவா?
விடுவேனா?
வாங்கினேன்– ஒன்று
விலாட்டு என்று.
நாட்கள்
மாதங்களாகையில்
நீரூற்றி தேய்ந்தன
என்– கைகள்
மரம்பட்டே–
சொரிந்தன– இலைகள்.

எனக்கு
கோபம்
பொத்துக்கொண்டு
வந்தது.

மீண்டும் விளம்பரப்பலகை
யிடம்
விசாரித்தேன்.
அது– கூறியது
என்னில் தவறில்லை
நீங்கள்
விளங்கியது– தான்
தவறென்று
ஆம்
மாங்கன்று
விற்க–
படும்.

த. முரளிதரன்

## மண்ணிலே விண்ணைக் காண்போம்

வானவர்கள் வளர்க்கின்ற காமதேனு!
வண்ணமுற எல்லாமே வழங்குமென்பார்
தேனெனவே இனிக்கின்ற அமிர்தமுமே
தேவர்களின் உணவெனவே செப்புவார்கள்
ஆனவர்கள் நாட்டிலுள்ள கற்பகக்கா
அளவில்லா வளமெல்லாம் அளிக்குமென்பார்
ஏனவர்கள் சிந்தாமணிக் கிலைசவதாக
ஏதுமிந்த மண்ணின்மிசை இல்லையென்பார்

தேவர்களாம் அன்னவர்கள் வாழ்வுதன்னை
திறம்படவே அமைத்தவர்கள் மனிதரன்றோ
தேவர்களாய் மனிதகுலம் வரலாமென்ற
செப்பரிய கற்பனையில் வாழலாமோ
மூவர்களால் காக்குமந்த விண்ணுலகும்
மூவர்ணக் கொடியேந்தி நிற்குமாமோ
ஜீவர்களாம் மனிதஇனம் வாழ்வதற்கு
சிறப்பான மண்ணுலகை அமைப்போர்நாமே

விண்ணிலொரு அரசுநிலை இயங்குதாமே
வேண்டாத கற்பனைகள் உதவுமாமோ
மண்ணிலமை வாழ்வுநெறி யதார்த்தமாகும்
மக்களினம் உணவுக்காய் அலையும் போது
வெண்ணிலவு உலவிவரும் எல்லைக்கப்பால்
வேண்டாத கற்பகமும் காமதேனுவும்
கண்ணிலவு மணிகாணுவொரு மணியும்
கட்டாயம் நமக்கு வந்தே உதவுமாமோ?

முருக. வே. பரமநாதன்

## தமிழர் வாழ்வு

கரும்பினின் நுனி சுவைத்தால்
கசந்திடும் வெறுப்புத் தோன்றும்
கரும்பினின் அடி சுவைத்தால்
விரும்பிடும் இனிமை தோன்றும்

கரும்பினின் சுவையைப் போலே
கண்டதோர் நட்புத் தானே
காதலும் கரும்பு போலே
கருதில் ஓரளவு தானே

இடையினில் கரும்பின் பாகம்
இருந்திடும் சுவையைப் போலே
அளவுடை அன்பு காணில்
பழகிடப் பெருகு மாமே

பழந்தமிழ் நாடு கண்ட
பண்பது காதல் வாழ்வு
சிறந்திட நிறைந்து காணும்
செயலினைக் காட்ட ஒன்று

பண்ணினில் இனிமை கண்டாள்
பாங்கிக்குப் பயனைச் சொல்வாள்
எண்ணியே இனியன் ஆன
இவனையே மணந்தேன் என்றாள்

மணந்தநாள் இனிமை கண்டாள்
மணாளனோ இனியன் ஆனான்
காதலில் நிறைவு பெற்ற
கன்னியே இனிமை சேர்த்தாள்

வ.யோகானந்தசிவம்

## மாம்பழத்தின் மாண்பு

நீதி பிழைப்பிக்கும்; நேர்மை தவறுவிக்கும்;
பாதிப்படிப்பில் பதவி தரும் – ஏதுக்கும்
ஒம்பட்டிசைவிக்கும் ஒன்றன்றோ யாழ்ப்பாண
மாம்பழத்தின் தீஞ்சுவையின் மாண்பு

(தலைமை உத்தியோகம் ஒன்றிற்குப் போட்டியிட்டவர்களில் ஒருவர் யாழ்ப்பாண மாம்பழப் பெட்டியொன்றை மேலதிகாரிக்கு அனுப்பி வைத்தார் கல்வித் தகுதி அற்ற அவருக்குப் பதவி கிடைத்தது. அப்போது மாம்பழத்தின் ஆற்றலை வியந்து பாடியது.)

க. சச்சிதானந்தன்

## காலமும் விளக்கமும்

**காதல்**

இதயங்களின்
இருட்டறையில்
சுதந்திரத்திற்கு
போராடும்
ஓர் கைதி

**மரணம்**

உயிர்
உடலில் இருந்து
விடுதலை பெறுவதற்காக
எழுதப்படும்
கை எழுத்தில்லா
ஒப்பந்தம்.

**சிறை**

மனிதன்
தவறுகளை செய்வதற்கு
வழிகாட்டும்
ஆரம்ப பள்ளிக் கூடம்.

**கல்லறை**

உயிருக்கும் உடலுக்கும்
நடந்த
பலாத்கார போராட்
டத்தில்
தோல்வியுற்ற உடல்களின்
சந்நிதி.

**நாகரிகம்**

உடல்கள்
ஆடையணிவதற்கு
மறுக்கப்பட்ட
அவசரகாலச்
சட்டம்.

கே. இந்திரகுமார்

## ஒரே சாட்சி

குற்றம் ஒன்று செய்து
விட்டே
யார் கண்டார் அதனை
நண்பனுக்கும் தெரியாதே
அயலவரும் அறியாரே
எதிரிக்கும் புரியாதே–யான்
செய்த குற்றம்
சாட்சி யொன்றில்லையே
நிரூபித்துக் காட்டிடவே
வழக்கென்று வந்தென்னை
என்னதான் செய்துவிடும்
நீதிமன்றம் தானும்
ஏதும் செய்ய முடியாதே
என்றிவ்வா றென்னை
தேற்றுகின்ற அவ்வேளை
எங்கிருந்தோ ஒரு குரல்
எனை மறந்திட்டாயோ
நான் வருவேன் அந்நேரம்
என்றதுவே அக்கணமே
உணர்ந்திட்டேன்நானதனை
அணுவணுவாய் கொல்ல
வல்ல
உருவமற்ற அச்சாட்சி
அது தான் என் மனசாட்சி.

கி. செல்வராசா

## தவிப்புகள்

உன்னால்
தினம் தோறும் தவிப்புகள்
ஏராளம் ஏராளம்
உன் இமை மடையை
உடைத்துப் பாயும்
பார்வை வெள்ளத்துள்
நீந்திடத் தவிக்கிறது
என் நிழல்.
உன் மூடிவைத்த விழிக்
கதவுகள்
முளைத்துவரும் கனவுகளில்
தோன்றிடத் தவிக்கிறது
என் உருவம்
உன் கன்னக் கதுப்புகளில்
அரும்பிடும்
வியர்வை முத்துக்களால்
பயிராகத் தவிக்கிறது
என் பருவம்.
கவிஞர்களின் கவிநடையே
கண்டு வியந்திடும்
உன் கால்களுக்கு
வழிகாட்டத் தவிக்கிறது
என் சுவடு.
உன்னால் தோன்றிடும்
தவிப்புகள்
இன்னும் ஏராளம்ஏராளம்

மகா யசோதரன்

இவ்வாரச் சிறப்புக் கட்டுரை

# இலக்கியத்திலும் வரலாற்றிலும் வாழ்கின்ற சில உதாரணங்கள்

# குற்றமும் தண்டனையும்

**சொக்கன்**

> தண்டனை எனபது அறவழியில் ஒரு செயல் தவறானது என்பதைக் குறிக்க ஏற்பட்ட ஒன்றே எனலாம். மக்கள் சட்டத்தை ஒட்டி நடப்பவர்களாக இருந்தால், வாய்ச்சொல்லால் இன்னது தவறு என்று எடுத்துக் காட்டியே அவர்கள் சட்டத்தை மீறுதபடி பார்த்துக் கொள்ளலாம். ஆனால் நாம் இன்றுள்ள அவலநிலையில் வெறும் வாய்ச்சொல்லை விடப் பயன் தருவதாக ஏதாவது இருக்க வேண்டும் அல்லவா? தண்டனை என்பதும் அவ்வாறு பயன் தரும் ஒன்றாக விளங்குகின்றது.''
>
> ['அறவியல்-ஓர் அறிமுகம்' வில்லியம் லில்லி.
> (தமிழாக்கம் கோ. மோ.காந்தி (பக்கம் 368]

மேலே குறித்த கூற்றினை நோக்கும் பொழுது ஒருவர் செய்யும் குற்றத்துக்கு வழங்கப்படும் தண்டனை என்பது. மாற்றுவழி எதுவும் இல்லாததொரு சூழ்நிலையிலே அந்தக் குற்றம் மீண்டும் செய்யப்படாது தவிர்த்தற்குக் கையாளப்படும் ஒரு நடவடிக்கை என்றே கொள்ள வேண்டியுள்ளது. மனிதன் சமூகப் பிராணி. சமூகத்திலிருந்து அவன் தன்னைத் தனிமைப்படுத்தி வாழ்வது இயலாத காரியம். எனினும், இயல்பாகவே தத்தம் சொந்த நலன்களையே முதன்மைப்படுத்தி அவற்றை நிறைவு செய்வதையே குறிக் கொண்டு வாழ்பவரே அநேகர். இவ்வாறு தந்நலங்களை நிறைவு செய்ய முற்படுகையில் குறுக்கீடுகள் ஏற்படுமாயின் அவற்றிற்குக் காரணரானவருக்குத் தீங்கிழைக்க இவர்கள் முற்படுகின்றனர். இத்தீங்குகளே குற்றச் செயல்களாய்ப் பரிணமிக்கின்றன.

தனிமனிதர் இருவரிடையிலோ ஒரு குடும்பத்திலோ குற்றங்கள் நிகழ்கையில் அவற்றை இழைப்போரும் அவற்றாலே பாதிப்படைவோரும் எண்ணிக்கையளவில் மிகச் சிலரே. நடைமுறையில் இத்தகைய குற்றங்களும் தண்டனைகளும் வெளியில் வராது அவர்கள் அளவிலேயே நிகழ்ந்து முடிதல் கூடும். எனினும் தனிமனிதராகிய தொடக்க நிலை அலகும், அவர்களை உள்ளிட்ட குடும்பமாகிய சிறிய அலகுமாகப் பல சேர்ந்தமையும் முழுமையான சமூகமானது இத்தகைய சிறிய சிறிய குற்றங்களாலும் தண்டனைகளாலும் பாதிப்புறும் நிலை ஏற்படும் பொழுது, சமூகத்தை ஒழுங்கிலும் கட்டுப்பாட்டிலும் நிலைநிறுத்த வேண்டிய அரசு வாளாவிருத்தல் இயலாத ஒன்றாகும். எனவே அது சட்டங்களை வகுத்துக் குற்றங்கள் இழைப்போரை விசாரணை புரிந்து குற்றங்களுக்கேற்ற தண்டனைகளை வழங்குவது தவிர்க்கவியலாததாகின்றது. ஆக எவ்வகையில் நோக்கினும் தண்டனை வழங்குவதாகிய செயற்பாடானது வரலாற்றின் ஆரம்ப காலத்திலேயே தொடங்கிவிட்டதெனலாம்.

இதுகாலவரை குற்றங்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைகளை ஆராய்ந்த அறிவியலாளர் அவற்றை முத்திறத்தனவாக வகைப்படுத்தி விளக்கியுள்ளனர். அவையாவன:-

i எச்சரிக்கைத் தண்டனை (Deterrent Punishment
ii சீர்திருத்தத் தண்டனை (Reformative Punishment)
iii பழிக்குப் பழிவாங்கும் தண்டனை (Retributive Punishment)

மனிதனது வாழ்வியலை எதார்த்தபூர்வமாகச் சித்திரிக்கும் இலக்கியங்களிலும் அவனது கடந்தகால நிகழ்கால வாழ்வினை உள்ளது உள்ளவாறு போதிய சான்றுகளோடு பதித்திருக்கும் வரலாற்றுச் செய்திகளிலும் மேற்குறித்த தண்டனை முறைகள் எவ்வாறு கையாளப்பட்டன என்பதைச் சிறிது நோக்குவோம்.

## எச்சரிக்கைத் தண்டனை

குற்றம் இழைத்தவனுக்கு அளிக்கப்படும் தண்டனை எதிர்காலத்தில் அத்தகைய குற்றத்தினைப்பிறரும் செய்யாதவாறு அவர்களுக்கு ஓர் எச்சரிக்கையாக அமைதல் வேண்டும். இதுவே எச்சரிக்கைத் தண்டனையின் நோக்கம். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இந்தத் தண்டனைமுறை சிறந்த பயன் அளிக்கும் என்று கூறல் இயலாது குற்றவாளி ஒரு வகை மாதிரி (Model) யாக ஆக்கப்படுகிறானேயன்றி இத் தண்டனையால் அவன் எதிர்காலத்தில் திருந்தி நடப்பான் என்று முழுமையாக எதிர்பார்த்தல் இயலாது. குற்றவாளியும் குற்றத்தால் பாதிக்கப் பட்டவனும் நடுவுநிலையில் உள்ள நீதிபதி ஒருவரால் விசாரிக்கப்பட்டுக் குற்றமும் நிரூபிக்கப் பட்டபின் வழங்கப்படும் எச்சரிக்கைத் தண்டனையால் ஓரளவு நற்பயன் விளைதல் கூடும். ஆனால் குற்றத்தால் பாதிக்கப்பட்டவரே குற்றவாளியைத் தண்டிக்க முற்படும் சூழ்நிலைகளில், அல்லது உண்மையிலேயே குற்றம் சாட்டப்பட்டவரின் செயல் குற்றமற்றதாக விளங்கும் சந்தர்ப்பங்களில் இத் தண்டனை அநியாயமானதாகவும் சகிக்கவியலாதவாறு கொடுமை மிகுந்ததாகவும் ஆகிவிடுகின்றது.

எடுத்துக்காட்டாக ஒரு நாட்டரசன் தன்பகை நாட்டோடு போர்செய்து அந்நாட்டைக் கைபற்றிய காலங்களில் தன் நாட்டைக் காப்பாற்றப் போராடிய தலைவனையும் அவன் படைகுடிபரிவாரத்தையும் சிறைப்படுத்தித் தாங்கொணாத தண்டனைகளை அவர்களுக்கு வழங்குவதுண்டு, எதிர் காலத்தில் பகையரசனோ அவன் நாட்டினரோ தன்மீது படையெடுக்காதிருக்க வென்ற மன்னன் வழங்கிய எச்சரிக்கைத்தண்டனை என இது கொள்ளப்பட்டது. இந்தத் தண்டனை போராளிகளுக்கு மட்டுமன்றி அவர்களின் தொடர்புடையோர், நண்பர், உறவினர்களாகிய அப்பாவி மக்களுக்கும் வழங்கப்படுவதே இயல்பாய் இருந்து வந்தது.

எச்சரிக்கைத் தண்டனைக்கான இலக்கிய எடுத்துக்காட்டுக்கள் பல, எமது சங்க கால இலக்கிய நூல்களிலே காணப்படுகின்றன அவற்றுள் ஒன்றினைக் காண்போம்.

கிள்ளிவளவன் சோழ மன்னன் குளமுற்றம் என்ற போர்க்களத்திலே வீரமரணம் எய்தியவனாதலால் இவன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன்' என அழைக்கப்பட்டான். இவனை எதிர்த்துப்போராடிய மலயமான் என்ற மன்னன் இறந்துபட அவன் நாடு இவன் வசமாயிற்று நாட்டைக் கைப்பற்றிப் பகைவனை நமனுலக அனுப்பியதோடு கிள்ளி வளவனின் சீற்றம் தணிந்து விடவில்லை. மலயமானின் மழலை மாறா மக்கள் இருவரையும் தனது பட்டத்து யானையின் காலால் இடறிக் கொல்ல வைப்பதற்கும் இவன் துணிந்தான். இச்செயல் மூலம் பகை நாட்டவர் அனைவர்க்கும் நல்லதொரு படிப்பினையை அளித்து இனி எக்காலத்திலும் அவர்கள் தன்னை எதிர்க்காதிருக்கச் செய்வதே நோக்கம். இந்த நோக்கம் நிறைவேறப் பகை மன்னனின் அமைச்சர், அதிகாரிகள், புலவர் முதலியோர் நிறைந்த அவையினைக் கூட்டுவித்து அந்த அவையின் முன்னால் தனது கொடுந் தண்டனையை நிறைவேற்ற முனைந்தான் அக்கொடியோன்.

அவை கூடியது அனைவரும் துன்பத்தால் பிணிப்புண்டு அவலநிலையில் அமர்ந்திருந்தனர் மலயமான் மக்களோ அந்த அவையையும், தம் அநாதை நிலையையும் நினைந்து அழுது கதறினர் கிள்ளிவளவனது வயக்களிறும் (வலிமைபொருந்திய ஆண் யானையும்) ஆடிஅசைந்து மணி ஓசையுடன் வந்தது

அவையிலே அச்சத்தால் யாவரும் அடங்கியிருந்த அவ்வேளையில் செந்நாப்புலவர் ஒருவரால் மட்டும் அவ்வாறு இருத்தல் கூடவில்லை. அவர் பெயர் கோவூர் கிழார் என்பது. அப் புலவர் பெருந்தகை மன்னனை நோக்கி, ''வேந்தே நீ புறாவினதும், பிற உயிர்களினதும் துன்பத்தினைப் போக்க முற்பட்டோனின் வழித்தோன்றல். இக் குழந்தைகளோ, தமது அறிவுகொண்டு உழவு நடாத்தும் புலவர் தம் வறுமைக்கு அஞ்சித் தம் செல்வதைப் பகுத்துண்ணும் குளிர்ந்த நிழலை உடைய மன்னர்தம் வழிவந்தோர். இக் குழந்தைகளை உற்றுநோக்கு (இதுவரை அழுது கொண்டிருந்த) இவர்கள் உனது யானையைக் கண்ட புதுமையால் அழுகையை மறந்திருந்தாலும் இம் மன்றினைக் கண்டதால் புதியதோர் அச்சத்திற்குள்ளாகி வருந்துகின்றனர் புல்லிய தலையினையுடைய இவர்கள் பற்றி (நான் சொல்வதை) நீ கேட்டபின், நீ விரும்பியவாறு செய்'' என்று அக் குழந்தைகள் பற்றி எடுத்துரைத்துக் கிள்ளிவளவனின் கல்மனத்தையும் கரைவித்தார்; குழந்தைகளுக்கு விடுதலையும் அளிப்பித்தார்.

நீயே, புறவின் அல்லல்
அன்றியும் பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்
தோன் மருகனை
இவரே, புலன் உழுதுண்
மார் புன்கண் அஞ்சித்
தமது பகுத்துண்ணும் தண்
ணிழல் வாழ்நர்
களிறுகண் டழூஉம்
அழாஅன் மறந்த
புன்றலைச் சிறாஅர் மன்று
மருண்டு நோக்கி
விருந்திற் புன்கணோ உடை
யர்
கேட்டனை யாயின் வேட்
டது செய்ம்மே.
(புறநானூறு-46)

மருகனை- வழித்தோன்றல் ஆவாய், புலன்- அறிவு- அழாஅல் (ன்) -அழுதல், விருந்தின் புதுமையான, புன்கண்- வருத்தம், வேட்டது- விரும்பியது.

தனது காலிற் சிக்குண்டு தன்னைத் தடுமாறி விழச் செய்த புல்லை வேரோடு பிடுங்கித் தியிட்டு எரித்துச் சாம்பரை நீரிலே கரைத்து அருந்தியதன் மூலம் பகைவருக்கு எச்சரிக்கைத் தண்டனை அளிப்பதாகிய மார்க்கத்தைச் சாணக்கியன், சந்திரகுப்தன் என்ற மோரிய இளவரசனுக்குக்(கி மு. 4 ஆம்நூற்றாண்டு) காட்டினான் என்பது இந்திய வரலாறு கூறும் செய்தி. ஜேர்மானியசர்வாதிகாரியான அடோல்வ் ஹிட்லர் (1890-1945) நச்சுவாயு அறையிலே இலட்சக் கணக்கான யூதரை அடைத்துக் கொன்றமை, அமெரிக்கா. யப்பானிய நகரங்களான ஹிரோஷிமா, நாகசாகி என்பவற்றில் அணுக்குண்டு வீசிப்(1945 ஆகஸ்ட்) பல்லாயிரக் கணக்கான மக்களை அழித்தமை முதலியனவும் எச்சரிக்கைத் தண்டனைகளுக்கு உதாரணங்களாகக் காட்டத்தக்கனவாகும்.

## சீர்திருத்தத் தண்டனை

குற்றம் செய்தவர் தமது குற்றத்தினை உணர்ந்து திருந்தவும் தாம் வாழும் சமூகத்தினது புறக்கணிப்புக்கு உள்ளாகாது மீண்டும் அதன் ஓட்டத்திலே கலந்துகொள்ளவும் வாய்ப்பளிக்கவே இத்தண்டனை வழங்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. இவ்வகையில் இது வரவேற்கத்தக்கதே. எனினும் இதனாலும் குற்றவாளி முழுமையாகத் திருந்துவார் என்றோ, மனமாற்றம் அவருக்கு ஏற்படும் என்றோ உறுதியுடன் கூறல் இயலாது ஒருவன் பெரும்பாலான சந்தர்ப்பங்களிலே தான் செய்யும் குற்றங்களையும் குற்றங்கள் அல்ல என்று நியாயிக்க முற்படுவதனையே காண்கிறோம். ஒரு சிலரே தமது குற்றத்தை உணர்ந்து மனச்சான்றின் உறுத்தலால் கழிவிரக்கம் கொள்கின்றனர் எனவே சீர்திருத்தத் தண்டனை மூலம் மிகச்சிறுபான்மையினரின் போக்கினையே திசை திருப்பி நெறிப்படுத்தக் கூடியதாயிருக்கும். ஆகவே கொள்கையளவில் சீர்திருத்தத் தண்டனை சிறந்தது என ஏற்றுக் கொண்டாலும் அதன்மூலம் திருந்தியவர் தொகையைக் கணிப்பிடுகையில் முடிவு அவ்வளவு உற்சாகம் தருவதாயில்லை.

இன்னா செய்தாரை ஒறுத்தல்
அவர்நாண
நன்னயம் செய்து விடல்
(திருக்குறள்- இன்னாசெய்யாமை-314)

என்ற வள்ளுவர் குறிக்கோள் சாலச்சிறந்ததே. இன்னா செய்தாருக்கும் பதிலாகித் தீமை புரியாது நன்மையே செய்தல் பெருந்தன்மை என்பதற்கு ஐயம் இல்லை இது அவர்களை 'ஒறுத்தல்' (தண்டித்தல்) என்பதும் பொருந்துவதே. ஆனால் தமக்கு இழைக்கும் குற்றத்தை மறக்கின்றவர் எத்தனை பேர்? மறந்து குற்றவாளிக்கு நன்மை புரிந்து அதனையும் மறக்க வல்லவர் எத்தனை பேர்? (விடல்-குற்றத்தை மறந்து விடல் செய்யும்நன்மையையும் மறந்துவிடல்) குற்றவாளிதிருந்திய பின்னரும் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அவனது முன்னைய குற்றத்தினைக் குத்திக்காட்டாது விடுவோர் எத்தனைபேர்? இவர்களின் தொகை கணிசமான அளவுக்குக் கூடாதவரை சீர்திருத்தத் தண்டனை அதிக பயன் அளிக்கும் என்று எதிர்பார்ப்பதில் பொருள் இல்லை.

குற்றம் செய்தவரைச் சிறிது காலம் தனிமைப்படுத்தி வைத்து அவர் குற்றத்தினை அவரே உணருமாறு தூண்டுவதும், கல்வி தொழிற்பயிற்சி என்பவற்றை அவருக்கு அளித்து எதிர்கால நல்வாழ்விற்கு அவரை ஆயத்தம் செய்தலும் சீர்திருத்தத் தண்டனையுள் அடங்கும்.

குற்றம் இழைத்தவருக்குச் சீர்திருந்த வாய்ப்பளிக்கு முகமாகத் தாராள மனப்பான்மையோடு மன்னிப்பருளலும் நன்மை செய்து மறத்தலும் கூட ஒருவகையில் தண்டனையே என்பதையும் வள்ளுவர் வாய்மொழியாற் கண்டோம். இவ்வகையான ஒறுப்பை (தண்டனையை) அளித்துத் திருத்த முற்பட்டவர்களில் மகாபாரதத்தின் முதன்மைப் பாத்திமான உதிட்டிரனைச் சிறப்பாகக் கொள்ளலாம். இருவேறு சந்தர்ப்பங்களில் அவன் இவ்வாறு குற்றவாளிகளை ஒறுத்தான்.

1 துரியோதனுடையருக்குத் துச்சளை ஒரே தங்கை. அவளை மணம் முடித்தவன் ஜயத்திரதன். இவன் பாண்டவர்மீது துரியோதனன் போலவே பொறாமையும் வெறுப்பும மிகுதியும் கொண்டவன். இவற்றோடு பாண்டவர் மனையாளாகிய திரௌபதியை அடைந்து தன் இச்சையை நிறைவுசெய்வதும் இவனது நோக்கமாய் இருந்து வந்தது. சூதாடி நாடுநகர் இழந்து பாண்டவர் வனவாசம் செய்த காலத்தில் ஒருநாள் பாண்டவர் வெளியே சென்றதருணம் பார்த்துத் திரௌபதியிடம் தன் எண்ணத்தினை நிறைவேற்றிக்கொள்ள ஜயத்தின் அவள் தனித்திருந்த பர்ணசாலையை அடைந்தான். அவளைப் பலவந்தமாக அவன் தூக்கிச் செல்ல முற்பட்ட பொழுது தெய்வாதீனமாகப் பாண்டவர் அங்கு திரும்பினர். உதிட்டிரன் தவிர்ந்த பாண்டவர் நால்வர்க்கும் அவனது செயல் பெருஞ்சீற்றத்தை ஏற்படுத்தியது. அவர்கள் அவனைப்பற்றிக் கொல்ல முற்பட்ட வேளையில் உதிட்டிரன் அவர்களைத் தடுத்தான் ''துரியோதனனும் அவன் தம்பியரும் இந்த ஜயத்திரதனும் எமக்குப் பகைவர்களே. ஆனால் துரியோதனனுடையரின் ஒரே தங்கையான துச்சளை எமக்கும் தங்கை. இவனைக் கொல்வது எங்கள் தங்கையை விதவையாக்குவதாக முடியும். ஆதலால் இவன் உயிர்பிழைத்துச் செல்லட்டும்'' என்று தன் தம்பியரதும் திரௌபதியதும் சீற்றத்தைத்தணிப்பித்து ஜயத்திரதனுக்கு அறிவுரை வழங்கி உதிட்டிரன் அவனை விடுவித்தான்.

(அடுத்த வாரம் முடியும்)


## ஆங்கிலம்

ஆங்கிலத்தில் பேசவேண்டும் என்று விரும்புகிறீர்கள். ஆனால் தவறாக பேசிவிடுவோமா என்று தயக்கமாக இருக்கிறது இதுதானே உங்களது பிரச்சனை. இனி கவலை வேண்டாம். உங்களின் பிரச்சனை மூன்றே மாதங்களில் தீர்க்க முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

Bright Training Centre
P. O. Box 162,
Colombo.

01024

## நவீன கம்பியூட்டர் பற்றிய சில 'லேட்டஸ்ட்' தகவல்கள்

இன்று உலகச் சந்தைக்கு அதி நவீன கம்பியூட்டர்கள் வந்து விட்டன. இந்தக் கம்பியூட்டர்களை வாங்க உலக நாடுகள் பல போட்டி போடுகின்றன. இதனால் கம்பியூட்டர்களின் விலையும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

உலகின் பல நாடுகளில் விசேட கம்பியூட்டர் பயிற்சிக் கல்லூரிகளில்மாணவர்களுக்கு பயிற்சியும் வழங்கப்படுகின்றது. வளர்ச்சியடைந்த,வளர்முக நாடுகள் எல்லாம் கம்பியூட்டரைப் பயன்படுத்துவதில் ஆவல் கொண்டுள்ளன.

சிங்கப்பூரில் ஆறு அல்லது ஏழு வயதுள்ள சிறுவர்கள் கம்பியூட்டர் கல்வியைக் கற்று வருகின்றனர். உலக நாடுகள் எல்லாம் கம்பியூட்டர் மயமாகி வருவதால் கம்பியூட்டர் பற்றிய கல்வி சிறு வயதில் இருந்தே ஊட்டப்படுகின்றது.

நமது நாட்டில் "கம்பியூட்டர் பயிற்சி வகுப்புக்குப் போவது என்று சொல்வது நாகரிகமாகி விட்டது. இன்று யாரைக் கேட்டாலும் கம்பியூட்டர் படிக்கிறேன் என்று சொல்லும் அளவுக்கு மவுசு வந்துவிட்டது.

கம்பியூட்டரை வாங்குவதில் உலக நாடுகள் போட்டி போடுவது ஒரு புறமிருக்க மறுபுறம் அதற்கு பல நாடுகளில் எதிர்ப்பும் ஏற்பட்டு வருகின்றது

மனிதனது வேலைகளை கம்பியூட்டர் சிலமணி நேரங்களில் செய்து முடித்து விடுவதால் நேரமும் பணமும் மிச்சமாகின்றது. குறைந்த செலவில் கூடிய பயனைப் பெற முடிகின்றது. இதனால் உலகின் பல கம்பனிகள் கம்பியூட்டர்களையே பயன்படுத்தி வருகின்றன இந்த நிலை தொடர்வதால் பலர் வேலை வாய்ப்பை இழக்கின்றார்கள் வேலையில்லாப் பிரச்சனை ஏற்படுகின்றது.

இதனால் உலகின் பல நாடுகளில் கம்பியூட்டருக்கு எதிர்ப்புத் தோன்றியிருக்கின்றது. இப்போது அமெரிக்காவிலும் எதிர்ப்புத் தோன்றியிருக்கின்றது. நியூயோர்க் நகரில் உள்ள சுரங்க ரயில்களை கம்பியூட்டரைக் கொண்டு அதாவது, 'ட்ரைவர்' இல்லாமல் ஓட்டுவதற்கு ஏற்பாடு செய்தார்கள். இத்திட்டம் ரயில்வே தொழிலாளர்களின் எதிர்ப்பினால் இரண்டாவது முறையாகவும் கைவிடப்பட்டுள்ளது.

## தகவல்-குறிப்பு-செய்தி-விபரம்
## விஞ்ஞானம்

# சந்தைக்குவந்துள்ளதுசாதனை
# தொழிலாளருக்கு வேதனை

**வி.என்.எஸ்.உதயசந்திரன்**

### முதல் கம்பியூட்டர்

உலகின் முதல் கம்பியூட்டரின் பெயர் 'எனியாக்' என்பதாகும். 1946ஆம் ஆண்டு எக்கர்ட், மௌவுச்லி என்ற இரு அறிஞர்களால் இந்தக் கம்பியூட்டர் தயாரிக்கப்பட்டது. இந்தக் கம்பியூட்டருக்குப் பின் இப்போது புதிதாக அதிசயம் மிக்க கம்பியூட்டர்கள் சந்தைக்கு வந்துவிட்டன.

### சுப்பர் கம்பியூட்டர்

உலகிலே மிகவும் சக்தி வாய்ந்தது சுப்பர் கம்பியூட்டராகும். எம். பி. 24என்ற இந்தக் கம்பியூட்டரை அமெரிக்காவில் கிரே றிசேச் இன் கோப்றேசன் (Grey Research in Corporation) என்னும் நிறுவனமே தயாரித்திருக்கின்றது. இந்தக் கம்பியூட்டரின் பெறுமதி இருபத்தைந்து கோடிரூபாவாகும் சாதாரண கம்பியூட்டரைப் போல் இதை வாங்கிவிடமுடியாது.

இந்த சுப்பர் கம்பியூட்டருக்கு நாடெங்கும் கிளைகள் இருக்கும். நாடெங்கிலும் உள்ள குட்டிக்கம்பியூட்டர்கள் தேவையான தகவல்களைச் சேகரித்து சுப்பர் கம்பியூட்டருக்குநாளதோறும் அனுப்பிக் கொண்டிருக்கும். இந்தக்கம்பியூட்டர் எவ்வளவு விசயங்களை வேண்டுமானாலும் தன்னுள்அடக்கிக்கொள்ளும். ஒரு நாட்டின் தட்ப வெட்பநிலைகளை அறிவது,விவசாயம் சம்பந்தமான அனைத்துப் புள்ளி விபரங்களையும் சேகரிப்பது போன்றவற்றுடன் ராணுவ சம்பந்தமான விசயங்களிலும் பெருந்துணைபுரியும். இந்தக் கம்பியூட்டரை அமெரிக்காஒரு நாட்டிற்கு விற்பதாக இருந்தால் நிபந்தனையுடனே விற்கும்.

இந்த எம். பி. 24 என்ற சுப்பர் கம்பியூட்டரைவிடமிகவும் திறமையான கம்யூட்டர் சந்தைக்கு வருகிறது. இதன் பெயர் எக்ஸ். எம். பி. 14 என்ற சுப்பர் கம்பியூட்டராகும். இந்தகம்பியூட்டர் மூலம் பல தகவல்களைப்பெற்று எத்துறையிலும் சாதனை படைக்கலாம். இதற்கு அடுத்ததாக எம். பி. 4 என்ற சக்திமிக்க கம்பியூட்டரும்சந்தைக்கு வருகிறது. இப்போது அமெரிக்க தயாரித்துள்ள மிக நவீன கம்பியூட்டர் கிரே. ஓ. எம். பி என்ற கம்பியூட்டராகும். இது இன்னும் சந்தைக்கு வரவில்லை மேற்குறிப்பிட்ட கம்பியூட்டர்கள் அனைத்தையும் வாங்க விரும்பும் நாடுகளுக்கு அமெரிக்கா சில நிபந்தனைகளை விதிக்கும். இக்கம்பியூட்டரை பராமரிக்க அமெரிக்கர்களே நியமிக்கப்படுவர்.

இது இவ்விதம்இருக்க நாம் எவருக்கும் எவ்விதத்திலும் குறைந்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் இந்த அமெரிக்க கம்பியூட்டர்களை விடச்சக்தி வாய்ந்த பல மடங்கு சக்திவாய்ந்த சுப்பர் கம்பியூட்டரைஜப்பான் கண்டுபிடித்துள்ளது. இந்தகம்பியூட்டரை வாங்க மிகமுக்கியத்துவம் வாய்ந்த நாடுகள் போட்டி போடத் தொடங்கி விட்டன.

### மொழிபெயர்ப்புக் கம்பியூட்டர்

இங்கிலாந்தில் புதிதாக உருவாக்கப்பட்ட கம்பியூட்டரின் பெயர் 'டெல்ஹேர்ன்' என்பதாகும். இது நான்கு மொழிகளில் கிடைக்கும் செய்திகளை மொழி பெயர்த்துத்தருகின்றது. எந்தமொழியில் நமக்குச் செய்திவந்தாலும் இந்தக் கம்பியூட்டரில் ஜெர்மன், ஸ்வீடிஸ், ஸ்பெயின் இத்தாலி போன்ற மொழிகளில் செய்திகளைப் பெறலாம். அதேபோல் உலகில் உள்ள எந்த மொழியின் செய்தியையும் ஆங்கிலத்தில் விளக்கமாக இதில் பெறலாம்

வெளி நாட்டினருடன் தொலைபேசியில் பேசும்போது இதன் உதவியால் நமக்குத் தேவையான மொழியிலேயே மொழிபெயர்ப்பும் கிடைக்கும். தொழில்துறையில் அதிகம் பயன்படுத்துவதற்காகவே இவ்வளவு வசதியுடன் 'டெல்ஹேர்ன்'கம்பியூட்டரை இங்கிலாந்து நிறுவனம் ஒன்று உருவாகியுள்ளது.

### கண்தெரியாதவர்கள் பயன்படுத்தும் கம்பியூட்டர்

கண் தெரியாதவர்கள் 'பிரெய்லி' முறையில் எழுத்துக்களைத் தடவிப் படிப்பார்கள்இதேமுறையில் கம்பியுயூட்டர் திரையில் தெரியும் எழுத்துக்களையும் தடவிப் பார்த்துப் படித்துக் கொள்ளலாம். கண் தெரியாதவர்களுக்கு உதவுவதற்காக இந்தப் புதிய கம்பியூட்டரை அமெரிக்காவின் ஐ. பி. எம். நிறுவனம் தயார் செய்துள்ளது. கண் தெரியாதவர்களுக்காக சில பட்டன்கள் உள்ள சிறு சாதனத்தைக் கையில் பிடித்துக் கொண்டு கம்பியூட்டர் திரையில் நகர்த்த வேண்டும். எழுத்து உள்ள பக்கம் அந்தச் சாதனம் சரியாகச் செல்லும். இதைப் 'பிரெய்லி' முறை தெரிந்தவர்கள் எளிதாகப் படித்துப் புரிந்து கொள்வார்கள்.

இந்தக் கம்பியூட்டரில் 'பிரெய்லி' முறையில் தயாரிக்கப்பட்ட கீ போட்டும் டைப் இயந்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ளதால் கண் தெரியாதவர்கள் டைப் அடித்தும் கம்பியூட்டருக்குக்கட்டளைகளை வழங்க முடியும்.

### சதுரங்கம் விளையாடும் கம்பியூட்டர்

'கம்பியூ செஸ்' என்ற பெயரில் சதுரங்க விளையாட்டை எவருடனும் ஆடத் தயாராக இருக்கும்கம்பியூட்டரைபுளோரிடா நகரக் கம்பனி ஒன்று தயாரித்துள்ளது இந்தக் கம்பியூட்டர் புத்திசாலித்தனமாக எதிரிகளுடன் சதுரங்கம் விளையாவதோடுசதுரங்க ஆட்டத்தில் குழப்பம் ஏற்படும் போது அவற்றைச் சுலபமாகவும் தீர்த்து வைக்கின்றது இப்போது அமெரிக்காவில் மிகப் பிரபல்யமாகி வரும் கம்பியூட்டர் இதுவாகும்.

... 15 ஆம் பக்கம் பார்க்க

# ஒரு நகரையே அடக்கியிருக்கும் உலகின் மிகப் பெரிய கோயில்

திருவரங்கக் கோயிலை உலகிலேயே மிகப் பெரிய கோயில் என்பார்கள்.

காரணம் ஒரு நகரமே இந்தக் கோயிலுக்குள் அடங்கி விட்டது.

கோயிலுக்கு ஏழு திருச்சுற்றுகள். இந்தச் சுற்றுகளுக்குள்தான் நகரமே அடங்கி உள்ளது.

தானாகத் தோன்றிய தலங்கள் பல உண்டு, திருவரங்கமும் அதில் ஒன்று கோயில் பற்றிய செய்திகள் புராண இதிகாசங்களில் உள்ளன.

பன்னிரு ஆழ்வார்களும் கோயிலைப் பாடியிருக்கிறார்கள். இராமானுசரிலிருந்து வைணவ ஆசிரியர்கள் பெரும்பாலும் இங்கே வாழ்ந்திருக்கிறார்கள் வைணவத்திற்கு உன்னதமான தலம்! சைதன்யர் கூட இங்கே வந்து தங்கிப் போயிருக்கிறார்.

உற்சவ காலங்களில் வாகனங்களை எடுத்துச் செல்லும் நடை இங்கே பிரசித்தமானது.

### கம்பர் மண்டபம்

தாயார் சந்நிதிக்கு எதிரே உள்ள நாலுகால் மண்டபத்தை "கம்பர் மண்டபம்" என்கிறார்கள். கம்பர் தமது இராமாயணத்தை அரங்கேற்றியது இங்கே என்பார்கள்.

"கம்பநாட்டாழ்வார்" என்கிற பெயரில் ஒரு சிலையும் கோயிலில் உண்டு.

துலுக்க நாச்சியார் சந்நிதி என்று ஒன்று இங்கே உண்டு.

இதைப் பற்றி ஒரு கதை. டெல்லி பாதுஷா ரெங்கநாதரை (உற்சவ விக்கிரகம்) தூக்கிப் போய் விட்டார். அந்தச் சிலையைப் பாதுஷாவின் அந்தப் புரத்தில் வைக்கப்பட்டிருக்க, அவருடைய மகள் அந்தச் சிலையைக் கண்டே மையல் உற்றாள் பின்னர் அவள் ரெங்கநாதரைத் தேடி திருவரங்கத்திற்கு வந்து உயிர்விட்டாள் என்பது கதை!

திருவிழா ஒன்றில் ரெங்கநாதர் கைலி கட்டிக்கொண்டு காட்சி தருவார்.

கி. பி. 1323-லிருந்து 1371 வரை ரெங்கநாதர் சிலை வெளியே கொண்டு செல்லப்பட்டது காரணம், துக்ளக் படையெடுப்பு. 1371-ல் விஜய

### திருவரங்கம் பற்றிய சில தகவல்கள்

நகரம் தோன்றி, அதன் அரசகுமாரர் கம்பணர்தான் மீண்டும் ரெங்கநாதரை திருவரங்கத்தில் கொண்டு சேர்த்தார்.

### இரு மூலவர்

தாயார் சந்நிதிக்குள் பார்த்தால், இரண்டு மூலவர்கள் இருப்பார்கள்.

ஒருவர் துக்ளக் படையெடுப்பின் போது புதைக்கப்பட்டவர். பின்னர் அவர் இருக்கும் இடத்தையே மறந்துபோனார்கள். ஒரு மழை நாளில் தரை கரைந்து இந்த மூலச் சிலை அகப்பட்டது! இதை இரண்டாவது மூலவராக உள்ளே வைத்து விட்டார்கள்.

திருமடைப் பள்ளியில் மண் பாத்திரங்களும், [illegible] அகப்பைகளும் பயன் படுத்துகிறார்கள். தினமும் புதுப்புது மண்பாண்டத்தில் தான் பணியாரம் முதலியன செய்வார்கள்.

கம்பணர் தொடங்கிய விஜயநகர அரசர்கள் பலரும் கோயிலுக்கு மானியங்களும் பரிசில்களும் கொடுத்து வளப்படுத்தினார்கள்.

கோடை காலங்களில் பெருமாள் பள்ளிகொண்டிருக்கும் கர்ப்பக் கிருகத்தை குளிர்விப்பதற்கு,தண்ணீரை தேக்கி வைக்கும் வழக்கம் வெகு காலம் இருந்துவருகிறது.

நாழிகை கேட்டான் வாசல் ஒன்று உண்டு!இதில் நாழிகையைக் காட்டும் வட்டில் ஒன்று இருந்ததாகக் கூறுவார்கள்.

### உயரமானது

13 நிலைகளைக் கொண்ட புதிய ராஜகோபுரம், ஆசியாவிலேயே பெரிது. திருச்சி மலைக் கோட்டையைவிட உயரமானது. கோபுரத்தின் உயரம் 236 அடி, முன்பக்தில் 166 அடி அகலமும் பக்கவாட்டில் 97 அடி அகலமும் கொண்டது.

"சிற்பக்கலைப் பேரரசு" என்று பட்டம் பெற்ற சிவப்பிரகாச ஸ்தபதி (வயது 45) இக்கோபுர வேலைக்குப் பொறுப்பு ஏற்றுக் கொண்டார். தஞ்சை மாவட்டத்தில் கந்தன்குடி என்ற சிற்றூரைச் சேர்ந்த இவர், 5-ம் வகுப்பே படித்தவர்!

கோபுரத்தின் எடை 1 இலட்சத்து 20 ஆயிரம் டன். கோபுரத்தின் உச்சியில் 13 கலசங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கலசமும் $10\frac{1}{2}$ அடி உயரமும் $5\frac{1}{2}$ அடி சுற்றளவும் கொண்டது. எடை 135 கிலோ.

கோபுரத்தை கட்டிமுடிக்க 7 ஆண்டு ஆயிற்று. நாள் தோறும் 200 தொழிலாளர்கள் வேலை செய்தார்கள்.

### புராணக் கதை

பிரமா வணங்கிவந்த அரங்கநாதர் சிலையை இட்சுவாகு மன்னன் பெற்றுவந்தான். அந்தச் சிலையை விபீஷணனுக்கு இராமர் கொடுத்தார். விபீஷணன் அதை இலங்கைக்கு எடுத்துச் செல்லும் வழியில், கொள்ளிடக் கரையில் வைத்துவிட்டு ஓய்வுகொண்டான். அரங்கநாதர் இந்த இடத்தில் பள்ளி(துயில்) கொள்ளவே, அரங்கனுக்கு உகந்த இடம் இதுவே என்று இங்கேயே விட்டுச் சென்றான் விபீஷணன்.

திருவரங்கம் கோவில், 1400 ஆண்டுக்கு முன் கட்டப்பட்டது. 7 பிரகாரங்களைக் கொண்டது. ஏழு பிரகாரங்களுடன் கூடிய ஒரே கோவில் இதுதான். மொத்தப் பரப்பு 160 ஏக்கர். பிரகாரங்களின் சுற்றளவு 9 கி. மீ. (6மைல்).

அரங்கநாதர் கிழக்கே தலை வைத்து, மேற்கே கால்நீட்டி வடக்கே முதுகைக் காட்டிக் கொண்டு, தெற்கே இலங்கையைப் பார்த்தபடி பள்ளி கொண்ட கோலத்தில் இங்கு இருக்கிறார்.

"கோவில்" என்றாலே திருவரங்கம் கோவிலைத்தான் குறிக்கும். அவ்வளவு பெருமை பெற்றது.

"பூலோக சொர்க்கம்" என்றும் இக் கோவிலுக்கு ஒரு பெயர் உண்டு.

மூலவருக்கு முத்தங்கி (முத்து உடை) உண்டு. வைகுண்ட ஏகாதேசி அன்று முத்தங்கி அணிந்து கொள்ளுவார், அதற்கு" முத்தங்கி சேவை" என்று பெயர். அன்று உற்சவருக்கு நவமணி அங்கி (நவமணிகள் பதிக்கப்பட்ட ஆடை) அணிவிப்பார்கள்.

# தொலைக்காட்சியில் கேளிக்கையும் அரசியலும்

கரவெட்டி வரதன்

இன்றைய யுத்த கலாசார உலகில் தொலைக்காட்சியின் பங்கு மிகவும் அவசியமான தொன்றாக உள்ளது.

அது ஒரு "கேளிக்கைச் சாதனம்" என்பது வளர்முக நாடுகளைப் பொறுத்தவரையில் இயற்கையான தொடர்பியற் கருத்தாகும்: ஆயினும் அது ஒரு கேளிக்கைச்சாதனம் என்பதைவிட ஓர் "அரசியல் சாதனம்" என்பதே இன்றைய அரசியல் அவதானிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும்.

வெகு முன்னேற்ற நாடுகளில் இதன் பயன்பாட்டு ஆழமும், வீச்சும் நம்மை விட மிக வித்தியாசமானது.

சமூக, அரசியல் அரங்கில் தன்னை நன்கு பதித்துக் கொண்டுள்ள இச் சாதனம் வரலாற்று இயக்கத்தில் சமூக, அரசியல், விஞ்ஞானக் கூர்ப்பில் தன்னை நன்கு இறுக இணைத்துவிட்டது எனில் அது உயர்வு நவிர்ச்சியன்று!

நவீன விஞ்ஞான தொழில் நுட்ப உலகின் அத்தியாவசியமான தேவைகளுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் இதன் அவசியம் ஏனைய இரு சாதனங்களை விடவும் முதன்மை பெறுகிறது.

அறிவியலாளர், தங்கள் எதிர்பார்புக்களின் தேவைக்கேற்ப இதன் பயன்பாட்டு விளைச்சலை அதிகரிப்பதில் இதனை மேலும் புதுக்கி வழங்க ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தனியே செய்திகளையும், நிகழ்ச்சிகளையும் ஒளிபரப்பி கலாசாரங்களுக்கும், பாரம்பரியங்களுக்கும் வடிகாலாயோ, காவலனுயோ மட்டுமன்றி, பாடசாலைகள், உயர்நிலைப் பள்ளிகள், பல்கலைக்கழகங்கள், தொழிற்சாலைகள், சுத்திகரிப்பு நிலையங்கள், போக்குவரத்துச் சாதனங்கள், பாதுகாப்பு அமைப்புகள், விஞ்ஞான மருத்துவ விண்வெளி ஆய்வுகூடங்கள் போன்றவற்றிலும் இது பலவித பணிகளை ஆற்றிவருகிறது.

பரவலாக எம் மத்தியில் ரி. வி. திரை என்றதும் உலகத்தலைவர்களும், அரசியல்வாதிகளும், கலைஞர்களுமே நினைவுக்கு வருகிறார்கள்.

ஆனால்,இவர்களுக்கெல்லாம் மேலாக முதன் முதலில் ரெலிவிஷன் திரையில் காட்சியளித்த பெருமை பெற்றது குதிரை ஆகும்.

1926 ஆம் ஆண்டு ஜனவரி 27 ஆம் திகதி இங்கிலாந்தில் இடம்பெற்ற குதிரைப்பந்தயம்தான் முதன் முதலில் ஒளிபரப்பப்பட்டது.

இதன் பின்னரே ரி. வி. பெட்டிகள், ஏராளமாகத் தயாரிக்கப்பட்டு, வீட்டுக்கு வீடு வாசற்படி போல், வீட்டுக்கு வீடு மக்கள் சமுதாயத்தின் அனைத்து மட்டங்களிலும் பல்வேறு வயதினரும் பார்த்து மகிழுமளவுக்கு சமூக அரங்கினுள் சுமூகப் பிரவேசம் செய்தன.

தொலைக்காட்சியின் வளர்ச்சியில் சோவியத் அமெரிக்க விண்வெளி ஆய்வுகளின் குறிப்பிடக் கூடிய நிகழ்வாய் அமைந்த சோயுஸ் அப்பலோ விண்கல இணைப்பு (1975) மொன்ரீல் ஒலிம்பிக் போட்டி(1976) என்பன குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்! உலகின் பல பாகங்களிலுமாக கோடிக் கணக்கான கண்கள் இந்த நிகழ்ச்சிகளை அன்று சமநேரத்தில் கண்டுகளித்தன.

அறுபதுகளின் மத்தியில் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கான 'கேள்வி' பொருளியல் உலகில் அதிகரித்தது. அவ்வேளை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் மாத்திரம் ஒரு கோடி பெட்டிகள் விற்பனையாகியுள்ளன.

1960- 70 காலப்பகுதியிலேயே தொலைக்காட்சிச் சாதனம் விண்வெளி ஆய்வுகளுக்குப் பயன்படத் துவங்கியது.

### பி. பி. ஸி.

பிரிட்டனில் ஒழுங்கான தொலைக்காட்சி ஒளிபரப்பு பி. பி. சியால் 1936 நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

ஐக்கிய அமெரிக்காவில் 1939-ல் திட்டமிட்ட முறையிலான ஒளிபரப்பு அதன் தேசிய ஒளிபரப்புகம்பனியால் தொடங்கப்பட்டது.

2 ஆம் உலக மகாயுத்தம் தொலைக்காட்சியின் வளர்ச்சியினைப் பொறுத்தவரை ஐரோப்பிய நாடுகளில் மட்டுமன்றி, அமெரிக்கா, சோவியத் யூனியனிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது இதனால் நாற்பதுகள் வரை இதன் வளர்ச்சி பின்னடைந்தது

### ஜப்பான்

ஜப்பானில் 1953 இல் இது பிரவேசித்தது இன்று ஏனைய நாடுகளை விட ஜப்பானுடன் பிணைந்துள்ள இச் சாதனத்தின் உற்பத்தியில் மட்டுமன்றி தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பலவற்றையும் ஏற்றுமதி செய்வதில் ஜப்பான் முன்னணியில் திகழ்கிறது. அண்மைக் காலமாக ஜப்பான் நவீன வீடியோ தட்டுகளையும் ஏற்றுமதி செய்துவருகிறது!

### கல்விச் சேவை

1957இல் பிரிட்டனும் (பி. பி. சி) 1959இல் ஜப்பானும் (என் எச் கே) தொலைக்காட்சியில் கல்விச் சேவை நிகழ்ச்சிகளை அறிமுகம் செய்தன. இலங்கையின் ரூபவாஹினி பி. பி. சி யினதும் 'என் எச் கே' யினதும் கல்வி நிகழ்ச்சிகள் பலவற்றை ஒளிபரப்பி வருவது குறிப்பிடத்தக்கது. வளர்முக நாடுகளின் அறிவியல் தேவைகளுக்கேற்ப மாணவர்களுக்கேற்ற நல்ல பல கல்வி நிகழ்ச்சிகளைபி.பி. சியும் என். எச். கேயும் தயாரித்து வழங்கி வருகின்றன.

ஏனைய இரண்டு தொடர்பு சாதனங்களையும் விட குறுகிய காலத்துள் மிகப்பரந்தளவு தகவல்களை மக்கள் மனதில் பதியவைக்க வல்லது தொலைக்காட்சி என்கிறார். பி. பி. சி நிலைய விஞ்ஞான செய்தியாளர் டேவிட் வில்சன் முதலாளித்துவ நாடுகளைப் பொறுத்தளவில் தேர்தல். அரசியல் பிரசாரங்களுக்கே இதில் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. சுரண்டல் சமூக அமைப்பில் வாழும் தன்னை இழந்து அந்நியமான' மனிதனுக்கு மக்கள் ரசனை, ஜனரஞ்சகம் என்ற பேரிலான போலி நிகழ்ச்சிப் போசனைகள் வழங்கப்படுகிறது.அவன் அவற்றை ரசித்துப் புசிப்பதுடன் தன்னை நிதானப்படுத்திக் கொள்கிறான். அவனது சிந்தனை அலைகளின் அதிர்வுகள் ஒரு குறித்த வீச்சத்துக்குள் சிறைப்படுத்தப் படுகின்றன. அச்சிறையினுள்ளிருந்து அவனுக்கு உண்மை வெளிகளைப் பார்க்க இயல்வதில்லை! எனவே விசால சிந்தனையுள்ள சமுகத்தின் குறித்த எண்ணிக்கையாளரிடமிருந்து இது தன்னை விவாகரத்துச் செய்ய வேண்டிய நிர்பந்தத்துக்குள்ளாவதும் தவிர்க்க முடியாததே.

'எமது காலத்து மனிதனின் தலைவிதி அரசியல் மொழியிலேயே எழுதப்படுகிறது என்ற தோமஸ் மானின் கூற்று தொலைக்காட்சிக்கும் பொருந்தக் கூடியதே.

தொலைக்காட்சியின் பணிகள் மூன்று வகைப்படுத்தப் படுகின்றன. தகவல் அளித்தல் (Inform) அறிவூட்டுதல் (educate) களிப்பூட்டுதல் (entertain) என்பன அவை. மனித சமுக மட்டங்களின் அறிவுநிலை, தேடல், எதிர்பார்ப்பு, புசித்தல் நிலைகளுக்கேற்ற இப்பணிகளின் பயன்பாடும் வித்தியாசமாகின்றன

... 14 ஆம் பக்கம் பார்க்க

# பசியும் மானுடமும்

எஸ். ஜே. பி. ரட்ணதுரை

### உடற்பசி

பட்டணம் நடுவே – ஒரு
பலமாடிக் கட்டடம் - அதன்
பக்கத்தே இருப்பது
பரிசோதனைச் சாலை
புற்றுநோய் பற்றி
புதுவித ஆராய்ச்சியை
கற்றுக் கொடுக்கும்
கல்விக் கூடமது

கண்ணாடிக் குடுவையுள்
கலவைகள் கலப்பதும்
முன்னாடி நின்று
முகத்தோடு சேர்ப்பதுமாய்
ஆய்வு கூடத்தில்
அங்கே ஒருவர்
ஓய்வு இன்றியே
ஓடித்திரிகின்றார்.

புற்றுநோய்க்கு
புதுமருந்தொன்றை
கற்றுத் தீர்வது
எனும் பெரிய
இலட்சியம் ஒன்றை
இதயத்தில் கொண்டதால்
அலட்சியம் செய்கிறார்
அனைத்து சுகத்தையும்
சோதனைக் கட்டத்தின்
முடிவுக் காலம்
சாதனைக் காற்றின்
சாத்தியக் கூறுகள்
முப்பது நிமிடத்தில்
முடிவு புரிந்துவிடும்
பட்ட கஷ்டத்தின்
பயன் தெரிந்துவிடும்.

அப்போது அவர் காதலி
அழைக்கிறாள் 'ரெலிபோனில்'
இப்போது ஒருமுறை
இல்லம் வரவேண்டும்
ஒப்போடு இப்போது
ஒருமுறை வராவிடில்
எப்போதும் வரவேண்டாம்
என்றே சொல்கிறாள்.

இன்று தனக்கு
இறுதிச் சோதனை
என்று எவ்வளவோ
எடுத்துச் சொன்னவர்
ஐந்து நிமிடத்தில்
அவரை விடுவதாய்
அவளும் சொல்லவே
அவரும் சம்மதித்தார்

துள்ளிச் சென்றார்
துணைவியைத் தேடி
கள்ளி அவளோ
காமக் காதகி
அள்ளி அவரை
அணைத்தே அன்பாய்
பள்ளியறைக்கு
பார்வையால் அழைத்தாள்

சலனம் மிகுந்து
சற்றே நின்றவர்
சபலம் கொண்டு
சாய்ந்தார் அவள்மேல்
பள்ளி அறையுள்
அணைத்து மகிழ்ந்தார்
பரிசோதனைச்சாலையில்
அனைத்தையும் மறந்தார்.

சாமத்தில் விழித்துச்
சோதனை செய்தவர்
காமத்தில் இழந்தார்
கண்ட பயனெல்லாம்
அந்தோ இங்கே
அறிவுப் பசியை
உண்மையாய் வென்றது
உடற்பசியே.

### வயிற்றுப்பசி

ஊருக்கு வெளியே
உள்ளதொரு வீடு
பேருக்கு பெரியவர்
பெரும் செல்வந்தர்
மனைவியை வெறுத்து
மாற்றானை நாடி
துணைவியை தேடி
துடிப்புடன் வரும் வீடு

காத்தவள் இதுவரை
குடும்பத்தை தாயவள்
–நோயை
சேர்த்தவள் தானும்
சோர்ந்து போகவே
மூத்தவள் முறையும்
முதலில் வந்தது – நாள்

பார்த்தவள் அழைத்தாள்
பணக்கார மைனரை
நாசியில் பட்டதும்
நரம்புகள் புடைத்தெழ
பூசிவிட்டாள் தைலம்
பூவுடல் மீதினில்
ஆசி கூறி அன்னை
அனுப்பினாள் மகளை
தாசியாவதே யவர்
தலைமுறை தலைவிதி

அலைமகள் ஆகவென
ஆசை கொண்டவள்
கலைமகள் ஆகவென
கனவு கண்டவள்
தலைமகள் ஆனதால்
தாய் தந்தைக்கு
விலைமகள் ஆனாள்
விருப்ப மின்றியே

நெஞ்சம் மீதினில்
கனவுகள் சுமந்தபடி
– இருந்தார்
மஞ்சம் மீதினில்
மைனர் அமர்ந்தபடி
மோதிரம் இருந்தது
மொத்தம் இருபது –விரல்கள்
மாத்திரம் இருந்தன
ஐந்து அழுகி.

விருந்துக்கு வந்து
விளையாட்டுப் பிள்ளையோ
மருந்துக்கும் மாறாத
நோயைக் கொண்டவர்
தெரிந்ததும் பயந்து
தேவதை ஓடினாள்
பருந்துக்குப் பயந்த
பறவைக் குஞ்சாய்.

தஞ்சம் என்றோடி
தாயை அடைந்தாள்
வஞ்சம் அறியாத
வஞ்சிக் கொடியாள்
புத்தி சொன்னாள் தாய்
புரிந்தும் மசியவில்லை
கத்திப் பேசியும்
கலங்கவில்லை கன்னி.

மனதை மகள்
மாற்றும் வரை
உணவை தந்திட
மறுத்தாள் தாய் – மகள்
கண்ணீர் விட்டுக்
கதறி அழுதும் –சொட்டுத்
தண்ணீர் தன்னும்
தரவில்லை தாய்.

எத்தனை நாள்தான்
ஏந்திழை பொறுப்பாள்
பட்டினி கிடந்தே
பாவை மெலிந்தாள்
குடற் பசியை
குறைவின்றி தீர்த்திட
–மைனர்
உடற் பசிக்கு
உடன்பட்டாள் வருந்தி.

### அறிவுப் பசி

காலை வேளையில்
காளை ஒருவன்
சாலை ஓரத்தில்
யாது தேடுகிறான்
எழுதுகோல் ஒன்றை
எங்கோ தொலைத்துவிட்டு
அழுது கொண்டங்கே
அதனைத் தேடுகின்றான்.

ஏழை வீட்டை
பிறப்பாய் கொண்டவன்
பசியிலும் படிப்பை
விருப்பாய் தொடர்ந்தவன்
உணவை உண்டு
பலநாள் ஆனதால்
நினைவை இழந்து
நிலத்தில் வீழ்ந்தான்.

பள்ளி சென்று
பரீட்சை எழுத
துள்ளி வந்தவன்
துவண்டு கிடக்கிறான்
அள்ளி எடுத்தவனை
ஆற்ற மனமின்றி –மக்கள்
தள்ளிச் சென்றனர்
தனியே விட்டவனை.

எட்டிச் சென்றவருள்
எவரோ ஒருவர் –அவன்
ஒட்டிய வயிறுடன்
ஒதுங்கிக் கிடப்பதை
எட்டிப் பார்த்து
ஏக்கம் கொண்டு
தட்டி எழுப்பினார்
தண்ணீர் தெளித்து.

... 14 ஆம் பக்கம் பார்க்க

# விமான 'கறுப்புப்பெட்டி' என்றால் என்ன?

### செய்தியின் பின்னணியில்

விமானத்திலிப்போதெல்லாம் இரண்டுகறுப்புப் பெட்டி (BlackBox) எனப்படும் பறப்புத்தகவல்பெட்டிகள்உள்ளன. இவை கறுப்புப் பெட்டி எனக் கூறப்பட்டாலும் இவை கறுப்பு நிறம்அல்ல. ஒளிவீசும் ஒறெஞ் நிறமுடையவை இந்தப் பெட்டிகள்.

விபத்து ஏற்பட்டு விட்டது என்றால் உதாரணமாக விமானம் கீழே விழுந்து நொருங்கி விடுகிறது என்றால் அந்த இடிபாடுகளுக்கிடையே எளிதில் கண்டுபிடிப்பதற்காகவே சுடர் ஒளி வீசும் ஒறெஞ்வர்ணத்தை அந்த பெட்டிக்கு பூசியிருக்கிறார்கள்.இந்தப்பெட்டிஒரு அசுர வரம் பெற்ற பெட்டி எனலாம்.

வெந்தணலால் வேகாது எத்தகைய அதிர்ச்சிகளையும்–தாக்கங்களையும் அது தாங்கும். சிதையாது, எரிந்து போகாது, எந்த விதமான அரிக்கும் அமிலச்சத்துக்களாலும் இவற்றை தாக்கவோ சேதப்படுத்தவோ, அழிக்கவோ முடியாது.

Flight Recorder எனப்படும் இந்த பறக்கும் தகவல் பதிவுப் பெட்டி விமானம் பறக்கும் உயரம், காற்றின் வேகம், திசை, இஞ்சின்களின் இயக்கம் ஆகியவற்றின் தகவல்களை ஒலிப்பதிவு செய்து கொண்டே போகும். விமானம் செல்லச் செல்ல இது பதியப்பட்டுக் கொண்டே இருக்கும்.

அத்துடன் விமான ஓட்டிக்கும் (பைலட்) கட்டுப்பாட்டு நிலையத்துக்கு மிடையேயான உரையாடல்களையும் பதிவு செய்து கொண்டே போகும். அண்மையில் நடந்த பான் அமெரிக்கன் 103 விமான விபத்து தொடர்பாக இந்த கறுப்புப் பெட்டியின் ஒலிப் பதிவுகளை வைத்துக் கொண்டு விபத்து நடந்ததற்கான காரணங்களை ஆராய்ந்து வருகின்றனர். இந்த விபத்துக்கான காரணம் என்ன என்பது இனி மேல்தான் தெரியவரும்.

# இந்துபோர்ட் இராசரத்தினம்
## காலமும் வாழ்வும்

**15**

## ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்கம்

இந்துபோர்ட் இராசரத்தினம் இருபதாம் நூற்றாண்டில் இணையில்லா வகையிற் சைவத்தமிழ்ப் பரிபாலனஞ் செய்வதற்கு இலங்கையில் மானசீகமான முறையில் நல்லதொரு வரவேற்புக் காத்திருந்தது முன்னர் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே எங்கள் பத்தியில் சைவம்வளர்த்த சான்றோர் சிலரும், செந்தமிழ் வளர்த்த செம்மல்கள் பலரும் தங்கள் புலமையைத் தமிழ் நாட்டிலேயே நடாத்திப் புகழும் விருதுகளும் பெற்றிருந்தார்கள்.

இருபதாம் நூற்றாண்டிலேயே இலங்கை அரசறியத் தமிழ்ப் புலமை நடாத்திய சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்களும், வட்டுக்கோட்டை ஆறுமுக உபாத்தியாயர் அவர்களும் வெவ்வேறு காலத்தில் அரசாங்கத்திடம் 250 வெண் பொற்காசுகள் பரிசாகப் பெற்றிருந்தார்கள்.

இவ்வைபவங்களுக்கு முன்பதாக யாழ்ப்பாணத்துப் பெரியார்கள் எங்கள் நாட்டின் வரலாற்றைப் பொதுவாகவும், எங்கள் மாநிலத்து வரலாற்றைச் சிறப்பாகவும் ஆராய்ந்து எழுதுவதற்கென்று யாழ்ப்பாண வரலாற்றுச் சங்கம் என்றொரு பேரவையைக் கூட்டியிருந்தார்கள். இச்சங்கத்தின் முதற் கூட்டம் 11-12-1919ஆம் நாளில் கூடிய பின், இடையிடையே பல முறை கூடி ஆராய்ச்சி உரைகளைக் கேட்டு வந்தது. சங்கநிகழ்ச்சிகளில் வரலாற்றுப் பெரியாராயிருந்த பெரிய நீதிமன்றப் பதிவாளர் முதலியார் இராசநாயகம், வணக்கத்துக்குரிய சுவாமி ஞானப்பிரகாசர், கதிரைவேற்பிள்ளை பாலசிங்கம், எஸ்.ஆர் இராசரத்தினம் முதலானோர் யாழ்ப்பாணத்து அரசர்கள், சோழ மன்னர்களின் ஆட்சிக்காலம், இலங்கை நாணயங்கள் முதலாய பொருள்கள் பற்றிப் பேசினார்கள். கதிரைவேற்பிள்ளை பாலசிங்கம் இந்துபோர்ட் இராசரத்தினம் அவர்களின் மைத்துனன் என்பது தெரிந்ததே. அவர் விவசாயம், பொருளாதாரம், சட்டம் முதலிய துறைகளில் மேம்பட்டவர். தமிழ்ப் புலவர்கள் மகாவலிகங்கை வடக்கே திரும்பி வழிந்தோடாதோ என்று பாடியதை உணர்ந்து, வெள்ளைக்கார அரசாங்கத்திடம் மாவலி கங்கையை உடனடியாக வடக்கே திருப்பு என்று சட்டசபையில் முழக்கியவர். அதைக் கேட்டு நகைத்த தென்னகத்தார், 'வேண்டுமானால் போத்தல்களில் நிரப்பிப் போங்கள்' என்று ஏளனஞ் செய்தார்கள். இன்று பாலசிங்கத்தை நினைத்து முத்திரையும் வெளியிட்டு கொண்டாடுகிறார்கள் யாழ்ப்பாணத்தையும் யாழ்ப்பாணத்தாரையும் பெருமளவில் மதித்த கலாநிதி பி. ஈ. பீரிஸ் யாழ்ப்பாண அரசு என்னும் தலைப்பில் ஒரு நூலை வெளியிட்டார். இந்நூலுக்கு வேண்டிய பல தகவல்களை அவர்போத்துக்கல் சுவடிகளிலிருந்து பெற்றார் என்பர்.

இவ்வாறாக 1921 ஆம் ஆண்டு உதயமாகவே கல்வித் துறையில் நல்ல வழிகள் வந்து வாய்த்தன. நாற்பத்திரண்டு ஆண்டுகள் சட்டசபையை அலங்கரித்த பொன்னம்பலம் இராமநாதன் அவர்களை அலங்கரிக்க அரசினர் அவருக்கு நைற் பட்டம் அளிக்கவே, அவர் சேர். பொன்னம்பலம் இராமநாதன் ஆயினார்.

அவர் யாழ்ப்பாணத்தை அலங்கரிப்பதற்குத் திருநெல்வேலியில் பரமேஸ்வராக் கல்லூரியினைப் பல்கலைக்கழகச் சாயலில் அமைத்தார். தென்னிலங்கையர் பலர் இங்கே தங்கிச் சைவ உணவுண்டு படித்து உருவாவதற்கும் பரமேஸ்வரா வாய்ப்பளித்தது.

அப்பால் தேசாதிபதி மனிங் அவர்கள் முன்னர் சேர் அருணாசலம் அவர்கள் கேட்டவண்ணம் பல்கலைக்கழகம் அமைப்பதற்கு முன்னோடியாக இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியை அமைத்தார். அங்கே செந்தமிழ்ப் பரிபாலனஞ் செய்ய வந்து வாய்த்தவர்களுள் தமிழ்நாட்டு அநவரத விநாயகம்பிள்ளை அவர்களையும், எங்கள் நாட்டுச் சிறுப்பிட்டியூர் வைரவநாதர் தாமோதரம்பிள்ளை அவர்கள் தமிழோடு தந்த தேசிகர் என்னும் அழகசுந்தர பிரான்சிஸ் கிங்ஸ்பரி அவர்களையும் குறிப்பிடவேண்டும்.

இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி லண்டன் பல்கலைக்கழகத்துப் பட்டங்கள் பெறுபவர்களுக்கு வேண்டிய விரிவுரைகளையும் நெறிப்படுத்தலையும் கொடுத்துவரவே, நம் நாட்டில் பட்டம் பெற்றோர் தொகை பெரிதாயிற்று. கணிதப் புலியாயிருந்த சுந்தரலிங்கம் அவர்கள் எம்மவரிடையே கணிதம் வல்லார் பலரை உருவாக்கி விடவே பலர் லண்டன் பட்டத்தில் முதற் பிரிவையும் தட்டிக் கொண்டு வருவாராயினர்.



சுவாமி
விபுலானந்தர்

### பிரம்ம ஸ்ரீ சதாசிவ ஐயர் அவர்கள்

இத்தகைய பெருங் வாய்ப்புக்கள் வரப்பிரசாதங்களாய் வந்துசம்பவித்த வேளையிலே, முப்புரிநூலினரும், மும்மொழிப் புலமை பெற்றவரும், முத்தமிழ் வல்லவருமாய பிரம்ம ஸ்ரீ தி. சதாசிவஐயர் அவர்கள் யாழ்ப்பாணத்துப் பெரும் பாக வித்தியாதரிசியாய் இருந்தார்கள்.

முன்னர் நாவலர் காலத்திலும், அவருக்குப் பின்னரும் யாழ்ப்பாணத்திலே தமிழ் வளர்ப்பதற்கெனத் தமிழ்ச் சங்கங்கள் தோன்றிப் பணிபுரிந்து போனமைக்கு வெகுவாக வருந்தி, இனிமேலாயினும் நிலைபேறுள சங்கம் ஒன்றை நிறுவுவதற்குப் பெருமுயற்சி எடுப்பாராயினர்.

சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்களையும், நாவலர் அவர்களின் தமையனார் மைந்தர் கைலாயபிள்ளை அவர்களையும் இன்னும் சில பெரியார்களையும் முன்னிட்டு அரசறியுமாறு யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்கம் என்னும் தாபனத்தை 1921 ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் பதினேழாம் நாளில் மங்கலகரமாக நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்திலே கூட்டினார்கள்.

அவ்வமையம் இலங்கை முழுவதற்கும் கல்விப் பணிப்பாளராயிருந்த இவான்ஸ் என்பவர் தலைவராயிருந்தார். அரசறியத் தாபிக்கப் பெற்ற இச் சங்கத்தின் கௌரவ அங்கத்தவர் இருவர் இலங்கைப் பல்கலைக்கழகத்து மேற்சபை உறுப்பினராயமர்ந்து செல்வாக்குக் காண்பிப்பதற்கான கௌரவமும் நாளடைவில் உண்டானது. சங்கத்தின் நோக்கம் மகத்தானதாய் சாதிசமய வேறுபாடின்றி மொழித் தொண்டு புரிதலே குறிக்கோளாயிருந்தது.

இங்ஙனமாகத் தமிழிலும், சமஸ்கிருதத்திலும், பிரவேச பண்டித, பாலபண்டித, பண்டித பரீட்சைகள் நடத்துதல் இடையிடை மாநாடுகள் கூட்டி அறிவுரைகள் நிகழ்த்துதல், ஆராய்ச்சிகள் செய்தல், நூல்கள் வெளியிடுதல், சஞ்சிகை வெளியிடுதல், காவிய பாடசாலை நடத்தித் தமிழிலும், சமஸ்கிருதத்திலும் பட்டங்களுக்குப் படிப்பித்தல்.

இத்தகைய நோக்கத்தை அறிந்த மகரிஷி சுத்தானந்த பாரதியார் மனமகிழ்ந்து சங்கத்தைப் பாராட்டி வாழ்த்திப் பாடியபோது, "என்றுமுள செந்தமிழும், இன்ப மிகும் ஆரியமும் இரண்டும் வேண்டும்; நன்றிரண்டும் பயின்றுயர்ந்த நாகரிகப் பண்புகளை நயப்போம் வாரீர்" என்பது முதலாகப் பாடியிருந்தார்.

இவ்வாறே இராசகோபாலாச்சாரியரும் ஏற்றத்தாழ்வில்லை என்னும் தலைப்பில், அருமையாகப் பாராட்டியிருந்தார். தென்னிலங்கையில் சிங்கள மக்களிடையே பிரிவேணு என்னும் தாபனங்கள் நிலவும் வகையில் எம்மிடை ஆரிய திராவிட பாஷாபி விருத்திச்சங்கம் நிலவுவதற்கு நாட்டின் தேசாதிபதி அவர்களே காப்பாளர்என்னும் போஷகராயிருந்தார். உத்தியோக ரீதியில் கல்விப் பணிப்பாளர் தலைவராயும், வடபிரதேசப் பிரதம வித்தியாதரிசி செயலாளராயுமிருந்தனர். உபதலைவர்களாயும் காரிய நிர்வாக சபை உறுப்பினர்களாயும் உள்ளூர்ப் பிரமுகர்கள் இருந்து ஊக்கமளித்தனர்.

சிந்துவெளி நாகரிகத்தில் எஞ்சியுள்ளசின்னங்களிலொன்றாய ஏரி பெருத்த எருத்து மாட்டின் படத்தை முத்திரையாகக் கொண்டது. அக்காலத்திலேயே சேர் அலெக்சாண்டர் கனிங்காம் சிந்துவெளி நாகரிகம் திராவிட நாகரிகம் என நிச்சயம் செய்திருந்தார். இச்சங்கத்தின் பொருட்டு முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் எழுதியமை நினைவிற் கொள்ளத்தக்கவை. "இலக்கணம் சங்க நூல், காப்பியம், இதிகாசம், புராணம், பிரபந்தம், சைவ சித்தாந்தம், வைணவசித்தாந்தம் நியாய வேதாந்தம், நாற்கவிப் புலமை" எனப் பத்துத் துறைகளை வகுத்த அவர். நாளடைவில் "கணிதம், சோதிடம் வைத்தியம், பௌதிகம், சித்திரம் சிற்பம், இசை, நாடகம்" என்னும் துறைகளையும் சேர்க்கலாம் என்றார்.

சங்கம் நடத்திய வகுப்புகளில் கற்றுவந்த மாணாக்கர்கள் பண்டிதர்களாக உருவாகிய வேளையில், அவர்களுக்கு ஆசிரியப் பயிற்சி அளிப்பதற்கு நடேசப்பிள்ளை அவர்கள் தமது முகாமையில் பரமேஸ்வர பண்டித ஆசிரிய கலாசாலையை ஆரம்பித்து வைத்தார் அதில் அதிபராய்ப் புலோலி இலக்கணக் கொட்டர் என்னும் குமாரசுவாமிப் புலவரின் இளைய மைந்தர் கலாநிதி சிவப்பிரகாசம் அவர்கள் இருப்ப, உதவியாக இரட்டைப் பட்டதாரி சிதம்பரப்பிள்ளை, பேராசிரியர் செல்வநாயகம், சோழவந்தான் அரசர் சண்முகனார் மாணாக்கர் நவநீத கிருஷ்ணபாரதியார், சோழவந்தான் கந்தசாமிப்புலவரின் மாணாக்கன் வித்துவான் கார்த்திகேசன் முதலானோர் தமிழ்ப் புலமை நடத்தினர்கள். அப்பால், சங்கத்தாபகர் சதாசிவ ஐயர் அவர்கள் அரசினர் உதவியோடு சுன்னாகத்தில் வித்துவான் கணேசஐயர், நியாய சிரோமணி சிதம்பர சாஸ்திரியார் முதலானோரின் உதவியுடன் பிராசீன பாடசாலை நிறுவிப் பண்டிதர்களை உருவாக்கி வந்தார். நடேசன் அவர்கள் கல்வி மந்திரிக்குழுவிலிருந்த பெருமையினாலே

**க.சி.குலரத்தினம்**

அவர், ஆறும் வகுப்பிற்கு மேல் தமிழ் படிப்பிக்கும் பண்டிதர்களுக்கு மாதந்தோறும் சலுகைப் பணமாகப் பத்து ரூபா கிடைக்கச் செய்தார். பயிற்றப் பெற்ற ஆசிரியர் மாதம் 43 ரூபா சம்பளம் எடுத்த காலத்தில், மேலும் பத்து ரூபா அன்று பண்டிதர்களின் பெருக்கத்திற்கு உந்து சக்தியாயிருந்தது.

இத்தகைய சூழ்நிலையிலே தான் இந்துபோர்ட் இராசரத்தினம் அவர்கள் தமது சைவாசிரிய கலாசாலையிலே பண்டிதமணி அவர்களைக் கொண்டு காவிய பாடசாலையொன்றை நடைமுறையில் கொண்டு வந்தபோது, நாட்டில் பண்டிதர்களின் பெருக்கம் அதிகமாயிற்று.

அந்தக்காலத்திலே தான் கிருஷ்ணமூர்த்தி என்பார் "கல்கி" என்னும் புனைபெயரில் ஆனந்தவிகடனில் எழுதிவந்தார். அவர் யாழ்ப்பாணம் வந்தபோது வழிதெருவெல்லாம் பண்டிதர் கூட்டத்தைக் கண்டு மிரண்டு "யாழ்ப்பாணத்திலே வீதியில் எங்கேனும் தடக்கிவிழுந்தால் ஒரு பண்டிதரின் மேலே தான் விழவேண்டும்" என்று நகைச்சுவையாக, உண்மையை எழுதினார்.

யாழ்ப்பாணம் ஆரிய திராவிடபாஷாபி விருத்திச்சங்கம், தமிழ்நாட்டுத் தமிழ்ச்சங்கம், கரந்தைத் தமிழ்ச்சங்கம், தூத்துக்குடிச்சங்கம், தென்னிந்திய திருநெல்வேலிச்சங்கம், கணேசர் செந்தமிழ்ச் சங்கம் முதலாய சங்கங்கள் போல இங்கே தமிழ் வளர்த்தது. இச்சங்கத்தின் மாநாடுகளில் தமிழ்நாட்டிலிருந்து காலந்தோறும் கதிரேசன் செட்டியார், சேதுப்பிள்ளை, கோவிந்தசாமிப்பிள்ளை முதலானோர் வருகைதந்து சிறப்பித்துள்ளார்கள்

இலங்கையில் காலத்துக்குக் காலம் கல்விப்பணிப்பாளராயிருந்த ஆங்கிலேயர்கள், பறங்கியர், சிங்களவர், தமிழர் அவ்வவ்போது இச்சங்கத்தின் ஆண்டு விழாக்களில் தலைமை தாங்கிச் சிறப்பித்துள்ளார்கள். அவர்களுள் இவன்ஸ், ரெபிசன், விக்ஸ், மக்றே, பற்றிக், சான்டிமன், ஹௌவ்ஸ் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இங்ஙனம் புகழ் பூத்த ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்கம் சில காலமாகக்கலாநிதி என்னும் பருவகால மலர் ஒன்றை வெளியிட்டு வந்தது. அதை ஆரம்பத்தில் சதாசிவ ஐயா அவர்களும், பின்னர் கோவை வாணன் என்னும் கோப்பாய் அ.வி.மயில்வாகனம் என்னும் பன்மொழிப்புலவரும் இரட்டைப் பட்டதாரியும் நடத்தி வந்தார்கள் அதில் இலக்கியம், இலக்கணமும்,கலைகள் சரித்திரம் கல்விமுறை, கவிதை முதலிய விடயங்கள் ஆராயப் பெற்றன.

சங்கம் செய்த நற்பணிகள் 1950 ஆம் ஆண்டில் திரும்பிப் பார்த்த போது நாட்டில் 564 பிரவேச பண்டிதர்களும் 406 பாலபண்டிதர்களும் 71 பண்டிதர்களும் பட்டம் பெற்றவர்கள் வரிசையை அலங்கரித்திருந்தார்கள். சங்கப்புலவர்களின் பெயர் வரிசையும் புரவலர்தம் பெயர் வரிசையும் ஒன்றாகவே வரிநெடும் பொத்தகத்தில் எழுதப்பெற்றிருந்தன. அந்தப் பெருவரிசையில் முதலில் வித்துவான் கணேசையர் அவர்களின் பெயருக்கு அடுத்தாற்போல் இந்து போர்ட் இராசரத்தினம் அவர்களின் பெயர் எழுதப்பெற்றிருந்தமை ஏட்டுக்கும் நாட்டுக்கும் பெருமை அளித்தது. இராசரத்தினம் அவர்கள் இணையில்லாத புரவலர் என்பது நாடறிந்த விடயமாயிருந்தது.

இவ்வாறாக "கன்னித் தமிழோடு கலந்து மன்னிய ஆரியந்தன்னையும் சீரிய விழியென ஓம்பிவருமெங்கள் உயர் சங்கத்தின் வெள்ளி விழாவில் வியனுலகுவக்கக் கலைமையோங்கத் தலைமை" தாங்க என நவநீத கிருஷ்ண பாரதியார் வரவேற்ற இலங்கைப் பிரதமர் டட்லி சேனநாயக அவர்கள் பரமேஸ்வரா வளாகத்தில் சங்கத்தின் பணிமனைக்கு அத்திவாரமும் நாட்டினார். அந்த அத்திவாரத்திலேயே இன்று பல்கலைக்கழக ஆனந்தக் குமாரசுவாமி மண்டபம் எழுந்துள்ளது.

(தொடரும்)

## அமிர்தபலம்

எல்லோரும் அறிந்தகனி எங்கும் கிடைக்கும்கனி எவர்க்கும் கிடைக்கும்கனி, அது நெல்லியம் தீம் கனி, இதை உண்டால் அம்ம! உடம்புக்கு மிகவும் நல்லது. பல்லுக்கு நல்லது. சுரப்பிகளுக்கு நல்லது. மலத்தை இலகுவாகப்போக்கவல்லது. சித்தவைத்தியர்கள் மெத்தப் போற்றுவது. ஆயிரம் ஆயிரமாக நெல்லிக் கன்றுகள் இன்று பிரதேசமெங்கும் நாட்டப் பெற்றுத் பயன்தருகின்றன. நீங்கள் நாட்டிக்கொள்ள வேண்டுமாயின் மில்க்வைற் நாற்று மேடையை நாடுங்கள். கன்றுகள் பொலித்தீன் பைகளில் உங்கள் கைகளில் உடனடியாகக் கிடைக்கும். காலம் வந்துவிட்டது. நீங்கள் காலந்தாழ்த்தாமல் உடனடியாக வாருங்கள்.

[மில்க்வைற் செய்தி]

# தனிச்சுவை ததும்பிடும் கி.வா.ஜ. வின் சிலேடைகள்

காஞ்சிபுரம் கம்பன் கழக விழாவில், கி. வா. ஜகந்நாதன் உரையாற்றிய போது பலத்த கைதட்டல் எழுந்தது. உடனே கி. வா. ஜ – ''கைதட்டுவது இரு வகை; ஒன்று பேச்சின் சிறப்பிற்கு, மற்றையது பேச்சை நிறுத்துவதற்கு. முதல்வகை 'தட்டல்'. இரண்டாம் வகை 'அதட்டல்' என்ற போது சபை 'தட்ட'லால் அதிர்ந்தது!

திருக்குறள் பற்றி கி. வா. ஜ. கூறியது- 'திருக்குறளை இயற்றியவர் சின்னப்பா தேவர். என்ன ஆச்சரியமாக இருக்கிறதா? பாக்களில் சிறியது குறள். அதாவது சின்னப் பா. திருவள்ளுவர் தேவர் இனத்தைச் சேர்ந்தவர். அதனால் சின்னப்பா தேவர் என்று திருவள்ளுவரைக் கூறினால் என்ன?'

ரயில் நிலையத்தில் கூட்டம் அதிகமாக இருந்த நேரம். கி.வா.ஜ.வும் அவரது நண்பரும் களைப்பு மிகுதியால் சுவர் ஓரமாக அமர்ந்தனர். உடனே நண்பர் ''சுவர் ஓரமாக சாயாதீர்கள் சுவரில் வர்ணம்பூசியுள்ளார்கள் (பெயின்ட்)'' என்றார். 'அப்படியா இது சாயச் சுவரா? சாயச் சுவரானாலும் எனக்குச் சாயச் சுவர் அல்ல'' என்று சிரித்தபடி கூறினார். கி.வா.ஜ (சாயச்சுவர் - சாயம் பூசிய சுவர், சாய்வதற்குரிய சுவர்)

கி.வா.ஜ நண்பருடன் உரையாடிக் கொண்டிருந்த போது, நண்பரின் மனைவி அவ்விடத்தே வந்தார் கி.வா.ஜ. நண்பரிடத்தில் ''மாமி யார் பெண்ணோ?'' என வினவினார். 'யார் பெண்' என அவர் வினவுவதாக நினைத்து நண்பர், ''என் மனைவி'' என்று கூறினார். கி. வா. ஜ.வும் விடவில்லை ''தங்களுடைய மாமியார் பெண்ணோ?'' என்று தான் கேட்டேன் என்றார் நயமாக.

யாழ்ப்பாணத்தில் நீர்வேலியில் கி வா.ஜ இராசேந்திரக் குருக்கள் வீட்டில் தங்கியிருந்தபோது முத்துவேல் என்பவர் தமது காரில் அவரை அடிக்கடி அழைத்துச் செல்வார் அவரே தமது காரை ஓட்டுவார். அவர் கி.வா.ஜவிடம் ''உங்களுக்கு கார் ஓட்டுவதற்கு நான் பாக்கியம் செய்திருக்க வேண்டும்'' என்றார். அதற்கு கி வா ஜ ''நான்தான் பாக்கியம் செய்தேன் ஏனெனில் கண்ணன் கார் ஓட அர்ச்சுனன் பாக்கியம் செய்தானே'' என்றார். அதற்கு நண்பர் ''நான்கண்ணனா வேணு?'' என்றார் உடனே கி.வா.ஜ. ''அந்தப்பார்த்த சாரதி நான் பாராத சாரதி. நீங்கள் தான் நான் பார்த்த சாரதி!'' என்றார்.

தொகுப்பு
ரட்ணா

'வெற்றிலையை எப்போது போடுவார்கள்?' என்று சிறுவர்களைப்பார்த்துக் கேட்டார் கி. வா ஜ. உடனே அவர்கள் சாப்பிட்ட பின்' என்றனர். ''எங்கே போடுவார்கள்'' என்று மீண்டுங் கேட்க ''வாயில்'' என்று பதில் வந்தது. சிறுவரிடமிருந்து உடனே கி.வா.ஜ. ''வாயிலும் போடுவார்கள் வாயிலிலும் போடுவார்கள்'' என்றார். சாப்பிட்ட பின்மிஞ்சியவெற்றுஇலையை வாசலில் போடுவார்கள் அதைத்தான் வாயிலில் போடுவார்கள் என்று கி. வா. ஜ. விளக்கினார்.

கலைவாணர் அரங்கில் நடைபெற்ற தொழிலாளர் சங்க விழாவில் ஒரு கவிஞரங்கம் அதற்கு தலைமை கி. வா. ஜ. தலைப்பு 'பாட்டாளி' தொழிலாளர்கள் திரண்டுவந்திருந்தனர். ''நானும் உங்களைப்போல ஒரு பாட்டாளிதான். காரணம், பாட்டால் (கவிதையால்) உங்கள் மனதை ஆளவந்துள்ளேன் என்றார் கி. வா. ஜ.

சங்கீத வித்துவான் ஒருவருக்கான பாராட்டுவிழாவில் கி. வா. ஜ. பேசுகையில் ''வித்துவானின் சங்கீதத்திற்கான தொண்டையும் பாராட்டுகிறேன் அவரின் தொண்டையையும் பாராட்டுகின்றேன்'' என்றார்.

கி. வா. ஜ. வின் நண்பர் ஒருவருக்கு தலையில் கட்டி வந்திருந்தது நண்பர் அதை மறைக்க தொப்பி அணிந்திருந்தார் கி. வா. ஜ. நண்பரிடம் தொப்பியின் விலைபற்றி விசாரித்தார். நண்பர் தொப்பியின் விலையைக் கூறியவுடன் கி. வா ஜ. ''எனக்கு கட்டிவராது'' என்றார். (விலையும் கட்டுப்பட்டு வராது, தலையில் கட்டிவராதுஎன்ற இரு பொருளில் இவ்வாறு கூறினார்)

# திறமை கொண்ட தொழில் புரியும் தேர்ந்ததொரு நிறுவனம்

அண்மைய புள்ளி விபரமொன்றின்படி, வடபகுதியில் மட்டும் வருடந்தோறும் இருபதினாயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் க. பொ. த. (சா. த.) பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். அவர்களில் மூன்றிலொரு பங்கினர் மாத்திரமே – ஏறத்தாழ ஆறாயிரம் பேர்– பின்னர் க. பொ. த. (உ. த.) பரீட்சைக்குத் தோற்ற முடிகிறது. இத்தொகையில் ஆறிலொரு பகுதியினர் மட்டும்– ஏறத்தாழ ஆயிரம் பேர்– அதற்குமப்பால் தம் கல்வியைத் தொடரும் வாய்ப்பைப் பெறுகிறார்கள். அதாவது, பாடசாலையை விட்டு விலகுவோரில் இவர்கள் ஐந்து வீதத்தினரேயாவர்.

மிகுதி தொண்ணூற்றைந்து வீதத்தினரின் நிலை என்ன? அதுவும் எப்படிப்பட்ட தொண்ணூற்றைந்து வீதம்? ஒரு வளர்முக நாட்டின் மனித வளத்தில் சக்தியும் செழுமையும் நிரம்பிய பகுதி.

சமூகத்துடன் ஒட்டாது விலகிநிற்கும் தற்போதைய கல்வி அமைப்பில், தமது இரண்டாங்கட்டக் கல்வியைமுடித்து விட்டு, உயர்கல்விக்கான (அதுவும் எத்தனை பொருத்தப்பாடுடையது?.) வாய்ப்பினைத் தவறவிடும் இந்த பேலே சொன்ன ஆயிரக்கணக்கான இளைஞர்- யுவதிகளை மனதிற் கொண்டு அவர்களை நாட்டிற்கும் வீட்டிற்கு மேற்ற நற்பிரஜைகளாக்குவதற்கும் அதன் மூலம் எமது தொழில் வளர்ச்சியை முன்னெடுப்பதற்குமென்ற– பொருத்தப்பாடும்தொலைநோக்குமுடைய- இலட்சியங்களுடன் நிறுவப்பட்ட பொறியியல் துறை சார்ந்த உயர் கல்வி நிறுவனமொன்று கடந்த ஒன்றரை தசாப்தங்களாக எம் மத்தியில் பணியாற்றி வருகிறது.

'தொழில் நுட்பத் தேர்ச்சி, பொருளாதாரத் தன்னிறைவின் திறவுகோல்' என்கிற பிரகடனத்துடன், இம் மண்ணினதும் மக்களதும் முன்னேற்றத்திற்காக தன் பங்குப் பணியை ஆற்றிவரும் அந் நிறுவனம் பற்றி எம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்.

தெற்காசியாவிலேயே மூத்த கல்விநிறுவனம் என்று கொள்ளப்படுகிற வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தனது நூற்றைம்பதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடிய போது, அந்த நினைவாக–உழவுக்கும் தொழிலுக்கும் ஒவ்வொன்றென–எமது நாட்டிற்களித்த பரிசுகள் இரண்டு. அவற்றுள் ஒன்றான 'யாழ்ப்பாணக் கல்லூரித் தொழில் நுட்ப நிறுவனம்' பற்றித்தான் மேலே குறிப்பிடப்பட்டது. (மற்றையது யாழ். கல்லூரி விவசாய நிறுவனம், மருதனமடம்.) இன்று வடபகுதியில் முழுநேர பொறியியல் துறைக் கல்வியை வழங்கும் தனித்துவமிக்க நிறுவனமாக யாழ்ப்பாணக் கல்லூரித் தொழில்நுட்ப நிறுவனம் வட்டுக் கோட்டையில் அமைந்து விளங்குகின்றது.

**சாந்தன்**

1974-ல் ஏழு மாணவர்களுடன் முளைவிட்ட இந்நிறுவனம், இன்று பொறியியலின் பல்வேறு துறைகள் சார்ந்த பதினான்கு பயிற்சி நெறிகளையும், ஏறத்தாழ நானூறு மாணவர்களையும் கொண்டதாக வளர்ந்திருக்கிறது. இப் பயிற்சி நெறிகள் இன்று பொறியியல் வேண்டி நிற்கும் பல்வேறு மட்டங்களையும் தேவைகளையும் சார்ந்தவையாக அமைகின்றன.

முதலாவதாக, கைவினைச் சான்றிதழுக்கான ஓராண்டுப் பயிற்சிகள். இதில், இயந்திர சாலைப் பயிற்சி, ஒட்டுவேலை, வார்ப்பு வேலை, மின் இணைப்பு ஆகிய நான்கு நெறிகள் உள.

அடுத்து, ஒன்றரை ஆண்டு கால தொழில்நுட்பச் சான்றிதழ் பயிற்சிகள், இதில், காற்றுச் சீராக்கலும் குளிரூட்டலும், வாகன யந்திர தொழில்நுட்பம், வானொலி தொலைக்காட்சி பழுது பார்த்தல் ஆகிய மூன்று நெறிகள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

மூன்றாவதாக, ஓராண்டு காலடிப்ளோமாக்கள். இதில், குடிசார் வரைவல்லுநர் பயிற்சி மற்றும் கணனி நெறிப்படுத்தலும் தரவு நிரைப்படுத்தலும் ஆகிய இரு நெறிகள்.

அடுத்ததாக, மூன்றாண்டு கால தொழில் நுட்ப டிப்ளோமா. இதில் மின்னியலும் தொலைத்தொடர்பும், மின் சக்தி, இயந்திரவியல், குடிசார் – கணியவியல் ஆகிய நான்கு பிரிவுகள் உள்ளன.

கைவினைச் சான்றிதழ், தொழில்நுட்பச் சான்றிதழின் முதலிரு நெறிகள் ஆகியவை ஆண்களுக்கே விதந்துரைக்கப்படுகின்றனவெனினும், ஏனைய நெறிகளிலும் பிரிவுகளிலும் இருபாலரும் பயில்கிறார்கள்.

கைவினைச் சான்றிதழ் தவிர்ந்த மற்றப் பயிற்சி நெறிகள் யாவும் ஆங்கில மூலமே நடத்தப்படுவதுடன், அதற்காக விசேஷ ஆங்கிலப் போதனைகள் பாட விதானங்களிற் சேர்க்கப்பட்டுள்ளன. இதனால், இங்குபயிற்சி பெறும் மாணவர்கள் வெளிநாடுகளிலும்சுலபமாக வேலை வாய்ப்பையோ மேற்படிப்பையோ பெற்றுக்கொள்ள முடிகிறது.

பயிற்சி நெறிகளின் பாட விதானங்கள், லண்டன் சிற்றி அன்ட் கில்ட்ஸ் நிறுவன பாட விதானங்களை உள்ளடக்கி வகுக்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட வகுப்புக்கள் தவிர, லண்டன் பொறியியற் கழகத்தின் முதலாம் இரண்டாம் பகுதிப் பரீட்சைகளுக்கான முழுநேர மற்றும் வாரஇறுதி வகுப்புக்களும் இங்கு நடத்தப் படுகின்றன.

கடந்த இரு ஆண்டுகளாக தேர்ச்சி பெற்ற கட்டிடத் தொழிலாளர்களுக்கான தேவை உணரப்பட்டதன் நிமித்தம்– நான்குமாதகால தச்சுவேலை, மேசன் வேலைப் பயிற்சி நெறிகளும் இங்கு இடம்பெற்றுள்ளன.

பயிலுநர்க்குப் போதிய செய்முறைப்பயிற்சி அளிக்கக் கூடியவசதி பொருந்திய நவீன பயிற்சிக் கூடங்களும் ஆய்வு கூடங்களும் அமைந்துள்ளமை இந்நிறுவனத்தின் முக்கிய அம்சமாகும். உதாரணத்திற்கு, கணனித்துறை மாணவர்கள் குளிரூட்டப்பட்ட பயிற்சிக் கூடத்தில் அதிநவீன கணனிகளைப் பயன்படுத்துகிறார்கள், குடிசார்துறை மாணவர்கள் வளர்ந்துவரும் வளாகத்தில் நிர்மாணிக்கப்படும் கட்டிடங்களில் பயிற்சி பெறுகிறார்கள். யந்திரசாலை, மின்துறை மாணவர்ள், உற்பத்திச் செயற்திட்டங்களில் ஈடுபடுகிறார்கள் மற்றும் பிரிவுகளும் இவ்வாறே.

தத்தமது துறைகளில் தகுதியும் தேர்ச்சியும் பெற்ற பொறியியலாளர்களும் தொழில் நுட்பவியலாளர்களும் இங்கு விரிவுரையாளர்களாயும் போதனாசிரியர்களாயும் பணிபுரிகிறார்கள். வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப் பெற்று தம் சொந்த வாழ்க்கைகளை மேம்படுத்திக் கொள்ளக்கூடிய தராதரங்களைப் பெற்றவர்களெனினும், இவ்வாசிரியர்கள், தம்சமூகத்திற்காற்றும்கடமை இதுவென்றுணர்ந்த பெரும் பொறுப்புணர்வுடன் பணியாற்றுவதை இங்கு அவதானிக்க முடிகிறது. இவர்களுக்குத் தலைமை தாங்கும் நிறுவன இயக்குநர் திரு. எம். ஜி. பிள்ளைநாயகம், இயந்திர மற்றும் விவசாய பொறியியல் துறைகளில் பட்டதாரி. தற்போது, கலாநிதிப் பட்ட ஆய்வுக்காக வெளிநாடு சென்றுள்ளார். பதில் பணிப்பாளராகப் பொறுப்பேற்கும் திரு. பட்றிதுரைரத்தினம், அனுபவம் வாய்ந்த இயந்திரப் பொறியியல் பட்டதாரி.

யாழ்ப்பாணம்- காரைநகர் வீதியில், வட்டுக்கோட்டைச் சந்திக்குத் தெற்கே மிக அமைதியான சூழலில் நிறுவன வளாகம் அமைந்துள்ளது. ஐந்து ஏக்கர் பரப்பில், விசாலமான நன்கு திட்டமிடப்பட்ட அமைப்புகள், நூலகம், கேட்போர் கூடம் ஆய்வுகூடங்கள் வகுப்பறைகள், வரைதற்கூடங்கள் மாணவர்க்கான நவீன விடுதிகள், ஆசிரியர் இல்லங்கள், பரந்த மைதானம் யாவும் அழகுற அமைந்துள்ளன. மாணவியர்க்கு, யாழ்ப்பாணக் கல்லூரிப் பெண்கள் விடுதியில் இடமளிக்கப்படுகிறது.

மாணவர்களின் பல்துறை ஆற்றல்களையும், தலைமைத்துவ பண்புகளையும் ஊக்குவிக்கு முகமாக நிறுவன மாணவர் மன்றம் செயற்பட்டு வருகிறது. மெய்வல்லுநர் போட்டிகள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன.

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய இன்னொரு அம்சம் என்னவெனில், தனியார்துறை நிறுவனமாக இருந்தபோதிலும் ஏற்புடைய மாணவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள், புலமைப் பரிசில்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

தொழில்நுட்பக் கல்விப் போதனையுடன் நின்றுவிடாத எமது பிரதேசத்திற்கான பொருத்தமான தொழில் நுட்பம் பற்றிய ஆய்வுகளையும் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. எரிவாயு உற்பத்தி, காற்றாலைகள், செங்கல் உற்பத்தி போன்றவற்றில் ஆசிரியர்களும் மாணவர்களும் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அண்மைக்கால நிகழ்வுகளிடையிலும் எவ்வித தடங்கல்கட்கும் இடங்கொடாது நிறுவனம் தனது செயற்பாடுகளை நிகழ்த்தி வந்துள்ளதெனில் மாணவர்களின் உற்சாகமும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்புமே காரணிகளாகும்.

பரந்த பசும் வயல்களும், நடுவே கம்பீரமாக வளர்ந்திருக்கும் நிறுவனமும், எம் மண்ணின் உழவுக்கும் தொழிலுக்கும் சின்னங்களாய்க் காட்சியளிப்பது எவர் மனதையும் பெருமிதமுறவே வைக்கும்.


G. C. E. (OL)
மீட்டற் பயிற்சி

1989 பெப்ரவரி சாதாரண பரீட்சைக்குத் தோற்றுவோரின் நன்மைகருதி

BRIGHT STUDY CIRCLE

தபால் மூலம் ஒரு கல்வி வட்டம் ஒன்றினை ஆரம்பித்துள்ளது. மேலதிக விபரங்கட்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

BRIGHT STUDY CIRCLE
P. O. Box 162, Colombo

15022

# நம்பிக்கை நாணயத்தின் சின்னம்-ஷப்ரு



## 'ஷப்ரு' தரும் புதிய வட்டி வீதங்களை கூர்ந்து நோக்குங்கள்!

## ஆகா! பிரமாதம்! பரமதிருப்தி என்றே ஆனந்திப்பீர்கள்!

## நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15% |
| 6 மாதங்கள் | 15% | 17% |
| 12 மாதங்கள் | 18% | 20% |
| 24 மாதங்கள் | 21% | 23% |
| 36 — | 22% | 24% |

### பணிப்பாளர் சபை

திரு. எல். பி. ஈ. கருணாரத்ன,
சட்டத்தரணி, சமாதான நீதிவான் (தலைவர்)
திரு. எஸ். பாலசுப்பிரமணியம்
A. I. B. (Lond), முகாமைப் பணிப்பாளர்
திரு. ஜே. டி. நவரட்ணம்,
A. I. B., (Lond), பொது முகாமையாளர்
திரு. ஏ. எம். எச். பாரி,
B. A. (Hons)
திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

### முதலீட்டுப் பாதுகாப்பு

ஷப்ருவின் உறுதியும் அபரிதமான வளர்ச்சியும் உங்கள் முதலீட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்றன. வங்கியியலிலும் நிதியியலிலும் சிறந்த தகைமையும் அனுபவமும் உள்ள எமது முகாமையாளர்களின் நிர்வாகத்திறன் அதை மேலும் உறுதிப்படுத்துகிறது.

### திறமையான சேவை

வாடிக்கையாளரின் வெற்றியும் திருப்தியுமே எமது பிரதான நோக்கமாகையால் அவர்களின் கோரிக்கைகளையும், தேவைகளையும் சிநேகபூர்வமாக உடனுக்குடன் கவனித்து திறமையான சேவைகளை வழங்குகின்றோம்.

## நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984→85 | 1985→86 | 1986→87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4,365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,485,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,366 | 100,577,482 |
| வங்கிக் கடன்கள் | 1791,516 | 8,283,818 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரி செலுத்துமுன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரி செலுத்தியபின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

### சிறந்த வருமானம்

ஷப்ரு கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள் பல்வேறு விசேட சலுகைகளையும் வசதிகளையும் வழங்குகின்றது. உங்கள் தேவைக்கேற்ப வட்டியை மாதாந்தம், காலாண்டில் அல்லது முதிர்ச்சியில் பணமாகவோ, காசோலையாகவோ அன்றி வங்கிக் கணக்கூடாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

SU

**SHABRA UNICO FINANCE LIMITED**
61, BAUDDHALOKA MAWATHA, COLOMBO 4. TEL 589310, 500576.
**ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்.**
யாழ் முகவர்: 207. மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 22073 - 24805

குட்டிக்கதை

## அன்பினுல் வெல்லுவோம்

மனம் சோர்ந்துபோய் இருந்தார் அந்த ஆச்சிரம நிர்வாகி. ''சீ இந்த மக்கள் என்ன இவ்வளவு மூடத் தனமாய் இருக்கிறுர்களே! எப்போது தான் இவர்கள் திருந்துவார்களோ? என்று யோசித்தார்.

அவரின் கவலைக்கு காரணம் இதுதான். அந்த ஆச்சிரமத்தில் பல அநாதைப்பிள்ளைகளைக் கவனித்து வந்தார் அவர். அன்று ஒருநாள் தண்ணீர்க் குழாயில் தண்ணீர் வரவில்லை. எனவே அந்த ஆச்சிரமத்தைச் சேர்ந்த பையன் ஒருவன் பக்கத்து வீட்டுக் கிணற்றில் தண்ணீர் குடிக்க வாளியைக் கையில் எடுத்தபோது தான் அது நடந்தது.

அந்தப்பையனை அந்த வீட்டின் உரிமையாளர் கண்டு விட்டார். 'டே...... யாரடா அதுஆரைக்கேட்டு தண்ணி அள்ளுருய் அநாதை நாயே......''எல்லோரும் இங்க வாங்கோ'' என்று அவர் கத்தியவுடன் அந்த வீட்டிலுள்ள அனைவரும் சேர்ந்து அவனை நன்ருக அடித்து முறித்து விட்டார்கள்.

இச் சம்பவத்திற்குப் பின்னர் பக்கத்து வீட்டவருக்கு அந்த ஆச்சிரமத்தில் ஒரு வெறுப்பு. எந்நேரமும் அந்தப் பிள்ளைகளைத் தூற்றியவண்ணம் இருப்பர்.

ஆச்சிரம நிர்வாகி, பல தடவை சமாதானம் சொல்லிப்பார்த்தும் பயன் ஏதும் இல்லை.

இது நடந்து சில நாட்கள் சென்றன. அந்த மாரி காலம் தொடங்கியது. மழைவிடாமல் பெய்து பெரும் புயல் வீசத்தொடங்கியது.

ஆச்சிரமக் கட்டிடமானது மேட்டுப் பகுதியில் இருந்தமையினுல் மழை வெள்ளம் உள்ளே செல்லவில்லை. பக்கத்து வீட்டவரின் வீடு பதிந்த நிலப்பகுதியில் இருந்தமையால் வீட்டினுள் வெள்ளம் புகுந்தது. பக்கத்து வீட்டிலுள்ள அனைவரும் செய்வதறியாது திகைத்த வண்ணம் ஆச்சிரமக் கட்டிடத்தை நோக்கிப்போனுர்கள்.

தமது குடும்பத்துடன் தஞ்சமென புகுந்த பக்கத்து வீட்டவரை இன்முகத்துடன் வரவேற்ருர் நிர்வாகி.

பல அநாதைக்குழந்தைகள் முகத்தில் சந்தோசம் தம் உற்ருரைக் கண்டது போல் ஆனந்தமடைந்தனர்.

தாம் சாப்பிடும் தட்டுகளைக் கொடுத்தார்கள். சாப்பாடுகளைப் பரிமாறினுர்கள். பக்கத்து வீட்டவருக்கு நெஞ்சை வெட்கம் பிடுங்கித் தின்றது.

''சே... அன்று ஒரு சொட்டுத் தண்ணீர் கூட குடிக்க நான் கொடுக்கவில்லை. இன்று இவர்கள் என் குடும்பத்தாருக்கு என்னமாய் உதவி செய்கிறுர்கள்'' என்று தாம் செய்த பிழைகளை உணர்ந்தார்.

''ஒன்றே குலம், ஒருவனே தேவன்'' என்று அப்பிள்ளைகள் பாடத் தாமும் சேர்ந்து பாடினுர் அவர். இப்போது அவரின் மனம் வேற்றுமைகளைக் களைந்தெறிந்து மனித ஒற்றுமையைக் கொண்டாடியது.

உமா

## பூந்தோட்டம் அங்கத்தவர்கள்

இலக்கம் 151 வைத்தியநாத சர்மா பிருந்திகா
வயது 09, ஸ்ரீ இராமகிருஷ்ண மகளிர் பாடசாலை கொக்குவில்.

இலக்கம் 152 தில்லைநாதன் ஆனந்தகுமார்
வயது11, ட்றீபேர்க் கல்லூரி சாவகச்சேரி.

இலக்கம் 153 தங்கரத்தினம் மிர்ஞளினி
வயது 10, கணேச வித்தியாலயம் சித்தன்கேணி.

இலக்கம் 154 மோகனநாதன் கோகுலன்
வயது 07, அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்

இலக்கம் 155 புஸ்பவதி செல்லத்துரை
வயது 13, சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம். மட்டுவில் தெற்கு சாவகச்சேரி.

இலக்கம் 156 மதியாபரணம் உரோமேசுதன்
வயது 13, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி யாழ்ப்பாணம்.

இலக்கம் 157 நளாயினி நவரத்தினம்
வயது 13, உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் மிருசுவில்.

இலக்கம் 158 கயிலைநாதன் மதிவதனி
வயது 13, சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

இலக்கம் 159 கந்தசாமி பகீதரன்
வயது 10, பளை மகா வித்தியாலயம் பளை.

இலக்கம் 160 இரகுபதி திருமால்
வயது 11, உருத்திரபுரம் மகா வித்தியாலயம் கிளிநொச்சி.




### விலங்குகள் விதம் விதம்: 13

## டொல்பின்

டொல்பின் கடலில் செல்பவர்களுக்கு நண்பன். கடலில் செல்பவர்கள் தவறி விழுந்தால் அவர்களைக் காப்பாற்றும் நற்குணம் கொண்டது இது.

இதுபலவிந்தைகளைச் செய்யும் பல நாடுகளில் இதற்கு விளையாடக் கற்றுக்கொடுக்கிருர்கள். கைப்பந்தாட்டம் கூட இது ஆடும் என்ருல் பார்த்துக்கொள்ளுங்கள்.

டொல்பின் பேசும். அதற்கென ஒரு மொழி உள்ளது. அது டொல்பின் மொழி பேசும்போது 32 வகையான ஒலிகளை எழுப்பும். உயிரியல் அறிஞர்கள் இது பேசுவதைப் புரிந்து வைத்திருக்கிருர்கள். ஒவ்வொரு வகை ஒலியையும் எழுப்ப மூன்று செக்கன்களையே டொல்பின் எடுக்கின்றது.

இது திமிங்கிலம் போல குட்டி ஈன்று பால் கொடுப்பதாகும்.

இது பாயும்போது வால் தான் முதலில் கிளம்பும். பலர் இதனை வேட்டையாடுகின்றனர் அதனுல் இவ்வினம் அழிந்துவருகின்றது

தி. தவபாலன்

## படித்து 'உயர' வேண்டும்

பாலர் பள்ளிக்கு படிக்கப் போகும்
'பாப்பா' ச் செல்வங்களே - நீங்கள்
படித்துப் 'பெரிய மனிதர்'களாக
வேண்டும்! இம்மண்ணிலே.

வள்ளுவர், சங்கரர் போல ஞானியாய்!
'வரதன்' வரவேண்டும்! - 'தமிழ்
மாறன்' கம்பர் பாரதி போலக்
கவிஞ ஞகவேண்டும்!

காந்திஜீ, நேருஜீ போன்று தலைவனுய்
'சாந்தன்' வரவேண்டும்! - சின்னக்
'கண்ணன்' பெரியார் அண்ணு போல்பகுத்
தறிவைத் தரவேண்டும்!

ஔவை சரோஜினி போலக் குஞ்சு!
'அநுஜா' வரவேண்டும் - அன்னை
இந்திரா போல 'சந்திரா'ச் சிட்டும்!
'ஆற்றல்' பெற வேண்டும்!

அல்லே. க. வ. ஆறுமுகம்

## முரசொலி பூந்தோட்டம்
### அங்கத்தவர் பத்திரம்

முழுப்பெயர்: ..........................................

வயது: ..........................................

பாடசாலையின் பெயர்: ..........................................

கல்விகற்கும் வகுப்பு: ..........................................

வீட்டு முகவரி: ..........................................

கையொப்பம்: ..........................................

மேலுள்ள விபரங்கள் சரியானவை என்று உறுதி கூறுகின்றேன்.

.................... ....................

திகதி பெற்ருர் / வகுப்பாசிரியர் கையொப்பம்

(பதினுன்கு வயதுக்குட்பட்டவர்கள் மாத்திரம் உறுப்பினராகலாம். மூன்று பத்திரங்களை ஒன்ருக நிரப்பி அனுப்ப வேண்டும்)

## வாக்கினில் இனிமை வேண்டும்

திருவள்ளுவர் ''இனியவை கூறல்'' என்றே ஓர் அதிகாரம் எழுதியிருக்கிருர்.

நல்ல இதமான, இனிய சொல்லைக் கூறவேண்டும் என்கிருர்.

இனிய சொல்லைக் கொண்டு எத்தனையோ பேர், சமூக வாழ்வில் பல நட்புறவுகளைவளர்த்து வளர்கிருர்கள், வெற்றி பெற்று வருகிருர்கள்.

'இனிய சொல் இருக்க, கடுமையான சொல் பேசக் கூடாது' என்பதைத் தான் 'கனியிருப்பக் காய் கவர்ந்தற்று' என்கிருர் வள்ளுவர்.

நாம் பேசுவது, சொல்வது யாவும் நல்லனவாகவும் மங்களகரமானதாகவும் இருத்தல் வேண்டும்.

சா. இராமகிருஷ்ணன்

## வயலின் வாத்தியம்

கர்நாடக சங்கீதக் கச்சேரிகளிலே வயலின் இனிமையான பக்க வாத்தியமாக இடம் பெறுகிறது. பஜனை, நாட்டியம், நாடகம் போன்ற நிகழ்ச்சிகளிலும் இது ஓர் சிறந்த பக்கவாத்தியமாக விளங்குகின்றது. வயலின் வாசிப்பதில் நன்கு தேர்ச்சி பெற்ருேர் தனிக்கச்சேரி செய்வர்.

தற்கால வழக்கிலுள்ள வயலின் சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டதெனத் தெரிகிறது. இராவணுஸ்திரம் அல்லது இராவண விரஸ்த்தம் எனப்படும் வாத்தியம் வில் போட்டு வாசித்ததாக கூறப்படுகிறது முற்காலத்து கூர்ம வீணை தற்போதைய வயலின் அமைப்பை ஒத்தது. முதன் முதலில் வயலினை அப்பியாசித்து அதில் கர்நாடக சங்கீதத்தை சீராக வாசிக்க முடியுமெனக் காட்டியவர் ''பாலஸ்வாமி தீட்சதர்'' ஆவார். இவரது காலம் 1786 முதல் 1858 வரையாகும்.

வயோலா, வயலின், சேலோ என்னும் வாத்தியங்கள் வயலின் இனத்தைச் சேர்ந்தன. வயலின் முழுவதும் மரத்தினுலே செய்யப்பட்டது. நரம்புகளாலும் உலோகங்களாலுமான தந்திகள் இதில் பயன்படுத்தப்பட்டுள்ளன. வயலினின் அடிப்பலகை சற்று அழுத்தமாகவும் கெட்டியாகவும் இருக்க வேண்டும். வயலின் செய்ய பைன், மேப்பிள், சிசமூர், சில்வ ஓக், ஸ்புறூஸ் ஆகிய மரங்கள் பயன்படும். விரற்பலகை, பிரடைகள், தந்தி, தாங்கி என்பன செய்ய கருங்காலி மரம் உபயோகிக்கப்படுகிறது. வயலின் உட்பாகம் செய்வதற்கு மரங்களை அளவாக வெட்டி நிழலிலுலர்த்திப் பதப்படுத்துவர். வயலின் ஓர் நரம்புக் கருவியாகும்.

சுகன்யா சிவானந்தன்
(அங்கத்தவர் இல.28)

# காலம் மாறியிருக்கின்றது கடமையிலும் மாற்றம் தேவை

மங்கையர் மஞ்சரி

சென்ற மாதம் சுவையான ஒரு விவாதம் நடந்தது. பல மாதர்கள் அதில் கலந்து கொண்டார்கள். பட்டதாரிப் பெண்களும், உயர் பதவி வகிக்கும் பெண்களும் சமூக சேவை நிறுவனங்களைச் சேர்ந்த மாதர்களும் காரசாரமாகப் பேசினார்கள். 'தங்கள் பெண்கள் சம்பாதித்துக் கொண்டு வருவது பெற்றோர்களுக்குப் பிடிக்கிறது; மனைவி சம்பாதிப்பது கணவனுக்கு வேண்டியிருக்கிறது. ஆனால், வயதான தங்கள் பெண்களுக்குக் கொடுக்க வேண்டிய சுதந்தரத்தையோ உரிமையையோ மட்டும் அளிக்கப் பெற்றோர்கள் தயங்குகிறார்கள். அதேமாதிரி தான் கணவன் மனைவி விஷயத்திலும், மனைவி எல்லா விதத்திலுமே தனக்குக் கீழ்படிந்தவளாக, கட்டுப்பட்டவளாக விளங்க வேண்டும் என்றே கணவன் எண்ணிச் செயல்படுகிறான். இந்த நிலையே இன்னும் நீடிக்கிறது. இந்த அவலத்தை மாற்ற நாம் தீவிரமாகப் பாடுபடவேண்டும்.'

இப்படிப் பேசிய பல பேச்சாளர்களில் ஒருத்தி, தான் கண்ட ஒரு சம்பவத்தையும் கூறினாள். படித்துப் பட்டம் பெற்று, சுமாரான பதவி வகிக்கும் ஒரு தம்பதியைப் பார்க்கப் போயிருந்தபோது' அந்தக் கணவன் தான் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தானும். அவன் மனைவி அடுக்களையை விட்டே வெளி வரவில்லையாம். அத்தனை தூரம் மனைவியை அடக்கிவைத்திருக்கிறான் கணவன் என்று கூறினாள் அவள்.

உண்மை எப்படியோ? எல்லாருக்குமே பணம் தேவைப்படுகிறது. கணவன் மனைவி இரண்டுபேருமே சம்பாதித்தால், வாழ்க்கையை ஓரளவுக்குச் சரிக்கட்டிக் கொண்டு போக முடிகிறது. இல்லத்தரசியான மனைவி, வீட்டை விட்டு வெளியில் போய்ச் சம்பாதிக்கத் தொடங்கினால், சில சலுகைகளையும் ஓரளவு சுதந்திர உணர்வையும் பெற விழைவதில் தவறு என்ன? ஆண் பெண் இரண்டு பேருமே படித்துப் பட்டம் பெற்று, சம்பாதிக்கத் தொடங்கும் போது, அவர்களிடையே வித்தியாச மனப்பான்மை ஏன் எழவேண்டும்? பெண்கள் இல்லத்தரசிகளாகமட்டும் விளங்காமல், ஆண்களுக்குச் சமமாக எல்லாப் பணிகளையும் மேற்கொள்கின்றனர். உடல் உழைப்பினால் சம்பாதிக்கும் ஆண்களைத் தவிர, அலுவலங்களில் போய்ப் பணிபுரியும் ஆண் பெண்களிடையே உடல் வலுவிலோ அறிவுத் திறனிலோ என்ன வித்தியாசம் இருக்கிறது? மேஜையடியில் அமர்ந்து பணிபுரியும் ஆண் பெண்களிடையே உடல் உரத்தில் அதிக வேற்றுமை கிடையாது என்று பிரபலப் பெண்கள் பத்திரிகை ஒன்று செய்த ஆய்விலிருந்து தெரிகிறது.

ஒரே மாதிரியான வேலையைச் செய்து விட்டு மாலையில் வீட்டுக்குத் திரும்பும் தம்பதியரிடையே, வீட்டுக்கு வந்ததும் மனைவி மட்டும் வழக்கமான வீட்டு வேலைகளைக் கவனிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. கணவன் தான் மட்டும் அதிகமாக வேலை செய்து களைத்துப் போய்த் திரும்பியிருப்பது போன்று பெருமூச்சுடன் நாற்காலியில் சாய்ந்து விடுகிறான். மனைவி வழக்கமான இரவுச் சாப்பாடு, குழந்தைகள் படிப்பு, காலையில் சோப்பில் நனைத்து வைத்துவிட்டுப்போன துணிமணிகளை அலசிக் காயப் போடுதல் முதலிய எல்லா வேலைகளையும் செய்ய வேண்டி இருக்கிறது. அநேகம் பெண்கள் இவற்றைப் பெரிய வேலை என்று யோசித்து மலைக்காமல், யந்திரம் போல் செய்கின்றனர். இதனால் அலுவலகங்களில் பணியுரியும் ஆண்களைவிடப் பெண்களே உடல் உரத்தில் சிறந்து விளங்குகிறார்கள்.

நேரம் பிசகாமல் உழைக்கும் யந்திரம் கூடச் சில சமயங்களில் பழுதுபட்டு நின்று விடுவதுண்டு. உயிரும் உணர்ச்சியும் படைத்த பெண்கள் மட்டும் எப்படி அலுத்துக் கொள்ளாமல் செய்ய முடியும்?

முன்னாளில் கணவன் சம்பாதித்துக் கொண்டு வருவதும் மனைவி இல்லத்தைக் கவனித்துக் கொள்வதும் இயல்பாக இருந்தன. சம்பாதித்துக் கொண்டு வரும் ஆண் உயர்ந்தவன் என்ற எண்ணம் எப்படியோ அவன் உள்ளத்தில் வேரோடி விட்டது. இல்லத்தரசி, இல்லத்து ராணி என்ற புகழ்ச் சொற்றொடர்களை ஆரமாக்கிப் பெண்களை மகிழ்வித்து வந்தார்கள். ஆனால் இந்த வழக்கத்தில் பிரமாதத் தவறு ஒன்றும் இல்லை. ஆண்மகன் வெளியில் போய்ச் சம்பாதித்துக் கொண்டு வந்தால், 'பெண் வீட்டைக் கவனித்துக் கொள்வது தானே முறை? நம் பெரியவர்களும் சிறப்பாகத்தான் இந்த முறையைச் செயல்படுத்தி வந்தார்கள் பல்லாண்டுகளாக.

இப்போது காலம் மாறிவிட்டது மனப்பான்மையும் மாறிவிட்டது செலவுகளும் அதிகரித்து விட்டன ஆடம்பரப் பொருள்களை வாங்கிச் சேகரிக்க வேண்டும் என்ற எண்ணமும், அடுத்த வீட்டுப் பெண்ணைவிட, ஒருபடி உயர்வாகத் தாமும் உடுத்த வேண்டும், வசதியோடு வாழ வேண்டும் என்றவற்றுக்கெளரவ மனப்பான்மையும் சகோதரிகளிடையே மிகுந்து விட்டன. இதன் பலன், அவசியம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பெண்களும் பணி புரிய முனைந்துவிட்டார்கள்

எண்பது சதவிகித மத்திய தரக் குடும்பத்தினர், விலைவாசிகள் விண்ணை எட்டும் இந்த நாளில் ஒருவர் வருமானத்தில் குடும்பத்தை நடத்திச் செல்ல முடியாமல் தத்தளிக்கிறனர். இதனால் வேலை பார்க்கும் பெண்ணை ஆண்மகன் விரும்புவதில் தவறு இல்லை. இரண்டு பேரும் சம்பாதிப்பது குடும்பத்தை ஓரளவு செம்மையாக நடத்திச் செல்லவும், குழந்தைகளை சிறப்பாகப் படிக்க வைக்கவும் முடிகிறது. மாதம் மாதம் மனைவியின் சம்பளப் கவரைப் பார்த்ததும் 'அப்பாடா' என்ற நிம்மதிப் பெருமூச்சுவிட முடிகிறது அதே சமயத்தில் பெரும்பாலான கணவன்மார்கள் ஓர் உண்மையை மறந்துவிடுகிறார்கள். தங்களைப் போலவே ஓர் அலுவலகத்தில் எட்டு மணி நேரம் உழைத்துவிட்டு வரும் மனைவிமார்களுக்குச் சிறு சிறு உதவிகளை ஏன் செய்யக் கூடாது?

சமையலறையில் போய் உதவாவிட்டாலும் குழந்தைகள் படிப்பைக் கவனிப்பது, கறிகாய் வாங்கி வருவது காய்ந்த துணிகளுக்கு இஸ்திரி போடுவது போன்ற வேலைகளைக் கணவன்மார் செய்யலாமே! குழந்தைகளின் துணிகளை எல்லாம் மனைவி இஸ்திரி போட்டு மடித்து வைக்கும் போது, கணவன் செய்தித்தாளில் தன் முகத்தை மறைத்துக் கொள்வது விவேகமான செயலா? இந்த மாதிரியான சில்லறை வேலைகளை எல்லாம் தணவன் பகிர்ந்து கொண்டால் குடும்ப வருமான அதிகரிப்பில் பங்கு கொள்ளும் மனைவியின் மனம் மகிழாதா? அலுத்துப் போன மனைவி, என்றாவது ஒரு நாள் சுள்ளென்று எரிந்து விழுந்தால், "உன்னால் முடியாவிட்டால் ஆளைப் போட்டுக் கொள்" என்று கூறுவது புத்திசாலித்தனம் அல்ல. புடைவை, நகை, எவர்ஸில்வர் என்று பெண்கள் செலவழித்தாலும், வேலைக்காரியிடமும் சலவைத் தொழிலாளியிடமும் காய்கறிக்காரர்களிடமும் கொடுக்கும் பணத்தில் சிக்கனம் காட்டுவது இயல்பு. வேண்டாத வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு உடம்பையும் மனசையும் கெடுத்துக் கொள்வார்கள். இந்த நாளில் இது அவசியம் இல்லை. காலம் மாறியிருப்பது போல் கடமையிலும் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. இதை உணர்ந்து கணவன்மார்கள் செயல்பட்டால், வீட்டிலும் மகிழ்ச்சி அதிகரிக்கும்; மனைவியின் உள்ளமும் உடலும் பெருமிதத்தால் வளரும். மகிழ்ச்சியும் இன்பமும் நிரம்பிய இல்லத்தில் குழந்தைகளும் சிறப்பாக வளருவார்கள்.

## தொலைக்காட்சியில்..

... 9 ஆம் பக்கத் தொடர்ச்சி

சர்வதேச ரீதியில் பொருளியல் தரவுகளின்படி விளம்பரதாரர்களைப் பொறுத்தவரையில் மற்றைய இரண்டு சாதனங்களை விட அவர்களது ஆதரவைப் பெரிதும் பெற்றுள்ள சாதனம் தொலைக்காட்சி.

எது எப்படி இருப்பினும் டெலிவிஷனை உலகுக்கு வழங்கிய ஸ்கொட்லாந்து நாட்டு அறிஞரான ஜோன் லோகி பெயர்டின் கதையோ வேறு. இதனால் அவர் போதியளவு பணம் சம்பாதித்து விடவில்லை! அவர் கண்ட கஷ்டங்களும் அடைந்ததுன்பங்களுமே அனந்தம்.

மார்க்கோனி கம்பனி பெயர்டின் கண்டு பிடிப்பில் பலவித மாற்றங்களை மேற் கொண்டு நவீன முறையில் அமைத்து விற்றதனால் பெயர்டின் பெட்டிகள்''அவுட் ஒவ் டேற்' ஆகிவிட்டன.

பெயர்ட் தனது இறுதிக் காலத்தில் வறுமையால் வாடி போர்வை கூட இன்றி குளிரில் நடுங்கி 1946இல் மரண மெய்தினர்.

உயிருடன் இருந்தபோது அவரை ஏறெடுத்துப்பாராத இவ்வுலகம் இறந்த பின்னர் அவருக்கு புகழஞ்சலி மட்டும் செலுத்தியது

சமூக மட்டங்களின் வாழ்க்கையையும் உணர்வுகளையும் அபிலாசைகளையும் பிரதிபலிக்கும் பணியில் காலக் கண்ணுடியாக தொலைக்காட்சி நிகழ்தல், அதன் எதிர் காலத்தை மேலும் ஒளி ஊட்டும் என்ற–சோவியத்யூனியன் தொடர்பு சாதன ஆய்வாளர் என். எஸ். பிரியுகோவ் வின் கருத்து சுயாதீன தொலைக் காட்சியலுக்கு இலட்சியமாய் அமைவதுடன் ஜோன் பெயர்டுக்கு செலுத்தக்கூடிய சிந்தனை அஞ்சலியாகவும் அமையும்.

## பசியும்..

... 9 ஆம் பக்கத் தொடர்ச்சி

வடை ஒன்றை வாங்கி,
வாய்க்குள் போடு'
கடை ஒன்றைக் காட்டி
காசைக் கொடுத்து
அன்பே உருவாய்
அவனிடம் சொன்னவர்
ஒரு ரூபாய் கொடுத்து
ஒதுங்கிப் போனர்.

காசைக் கண்டதும்
களிப்பைக் கொண்டவன்
தோசை வாங்கி
தொண்டை நிரப்ப
ஆசை கொள்ளாது
அந்தக் காசில்
ஓசைப் படாமல்
ஓர் 'பென்'வாங்கினன்.

துவண்டு கிடந்தவன்
துள்ளிச் சென்றான்
பள்ளி நோக்கியே
பரீட்சை எழுத.

அறிவுப் பசியை
அவனும் தீர்த்திட
வயிற்றுப் பசிக்கு
வஞ்சகம் செய்தான்.

முதல் கதையில்
அறிவுப் பசியை உடற்பசியும்
இரண்டாம் கதையில்
உடற்பசியை வயிற்றுப் பசியும்
மூன்றும் கதையில்
வயிற்றுப் பசியை அறிவுப் பசியும்
மாறி மாறி வென்றதை
மானிடரே கண்டீர்!

பசியொன்று மேவுகையில்
பாவம் செய்கின்றார்
பழி பாவம் ஏதுமில்லை
பாவம் அவர் மேலே
பரிகாசம் செய்யாதீர்
பார்த்தவரை நீர்
பரிதாபம் கொண்டிடுவீர்
பண்போடவர் மேலே

## இந்த வாரம் உங்கள் பலன்

யாழ்சோதிடர். ச. அரியநாயகம்

**8-1-89 -- 14-1-89 வரை**

**மேடம்:** பொன் பொருள் விருத்தி, வாகனசுகம், புதுத் தொழில்மூலம் இலாபம், வணிகர்கள், கலைஞர்கள், கடல் தொழில் செய்வோர்க்கு சிறப்பான வாரம்.

**இடபம்:** வாகன நஷ்டம், பெண்களால் நன்மை, பெரியோர் ஆசி, புதுத் தொழில், தடையான பணவரவு, மனை பூமியால் லாபம், புத்திர சுகம்.

**மிதுனம்:** காதலர் ஒன்று சேருவர், புதுமனை சேர்க்கை, புண்ணியவழிபாடு, மாமன் வழி உதவி, வாகன சுகம், பிரிந்தவர் ஒன்று சேருவர்.

**கடகம்:** மூத்த சகோதரர் வழி நன்மை, வாகன சுகம், வெளியூர் செய்தியால் மகிழ்ச்சி, பிதாமாதா வழி நன்மை, எண்ணிய எண்ணம் நிறைவு, தொழில் மூலம் லாபம்.

**சிங்கம்:** வாகன நஷ்டம். மனை பூமி சேருதல், மங்கள காரியவிருத்தி. புண்ணிய வழிபாடு, மாமன்வழி கவலை, தூர தேச பிரயாணம். புதுத் தொழில் மூலம் நன்மை.

**கன்னி:** தொழில் மூலம் லாபம், வாகன மாற்றம், வெளிநாட்டு பிரயாண மகிழ்ச்சி, இரு தொழில் விருத்தி, சகோதரர் வழி உதவி, நீண்டகால பகை தீரும்.

**துலாம்:** வாகன நஷ்டம், திடீர் பிரயாணம், எண்ணிய எண்ணம் நடக்கும், பெண்களால் உதவி, புதுத் தொழில் மூலம் லாபம், பிரிந்தவர் ஒன்று சேருவர்.

**விருச்சிகம்:** புகழ் கிட்டும், இலட்சுமி கடாட்சம், வாகன சுகம், பெரியோர் ஆதரவு, பிரிந்த காதலர் ஒன்று சேருவர், உத்தியோக உயர்வு

**தனுசு:** பண நஷ்டம், திருடர் பயம், பெரியோர் ஆதரவு. வாகன சுகம், பெண்களால் கவலை, மூத்த சகோதரர் வழி உதவி, பெற்றோர்வழி உதவி, புத்திரபேறு.

**மகரம்:** பண நஷ்டம், மனக்கிலேசம், வாகனசுகம், புத்திரரால் உதவி, வாக்கு வசீகரம், புண்ணிய வழிபாடு, தடைப்பட்ட பணம் கிடைக்கும்.

**கும்பம்:** மங்கள காரிய விருத்தி, புண்ணிய வழிபாடு மனநிறைவு, வாகன சுகம், தொழில் மூலம் புகழ், திடீர் பிரயாண மகிழ்ச்சி, பிதா மாதாவழி உதவி.

**மீனம்:** வாக்கு வசீகரம், வெளியூர் செய்தியால் நன்மை, தெய்வ வழிபாடு, வாகன சுகம், மனையில் சுப காரியம், கலைஞர்களுக்கு புகழ், விருந்துபசாரம்.

## கிடுகிடு கிணறு

உலகிலேய மிக ஆழமான கிணறு மேற்கு ஜெர்மனியில் தோண்டப்பட இருக்கிறது!

அதன் ஆழம் என்ன தெரியுமா?

14 கிலோ மீட்டர்(அதாவது 9 மைல் ஆழம்!!)

பூமி என்றால் என்ன? அதன் உள்ளே என்னென்ன புகைந்து இருக்கின்றன? இதைக் கண்டுபிடிக்கவே இவ்வளவு ஆழமான கிணறு!

## யாழ்ப்பாண

...5 ஆம் பக்கத் தொடர்ச்சி

4. கொடிகாம நகர வளர்ச்சிக்குத் தேவையான நன்னீரை மணற்காட்டுப் பிரதேசத்திலிருந்து பெறலாம். சந்தை நகர் நீர் விநியோகத் திட்டத்தில் சாவகச்சேரி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகியவற்றுடன் கொடிகாமத்தையும் சேர்த்துக் கொள்ளலாம். சந்தை நகர் நீர்விநியோகத் திட்டம் தற்பொழுது கைவிடப்பட்ட நிலையில் இருக்கிறது.

5. கொடிகாமம் அபிவிருத்திப் பிரதேசம் கொடிகாமம், கச்சாய், உசன் எழுதுமட்டுவாள், மிருசுவில், நாவற்காடு, இடைக்குறிச்சி, இயற்றாலை, மந்துவில் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும்.

கொடிகாமத்தையும் அதன் அயற் பகுதிகளையும் விருத்தியாக்கப்பின்வரும் திறமுறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும்

1. யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்ப்பாண நகருக்கு அடுத்து கொடிகாமத்தை இரண்டாவது நிர்வாக நிலையமாகக் கணித்து அரசகாரியாலயங்கள் இடவமைவு செய்வதில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

2. யாழ்ப்பாணகிழக்குப் பிரதேசத்திற்கானபலபொது சேவை நிறுவனங்கள் காரியாலயங்கள் போன்றன கொடிகாமத்தில் அமைக்கப்பட வேண்டும்

3. யாழ்ப்பாண மாவட்டத்தின் கைத்தொழில் நடவடிக்கைகளை கொடிகாமப் பிரதேசத்தில் விருத்தியாக்க முற்படுவதுடன் இங்கு கைத்தொழில் பேட்டையொன்று அமைக்கப்பட வேண்டும்.

4. இந்நகர்ப்பகுதியில் பெரிய வீடமைப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு யாழ்ப்பாணம் மேற்குப் பகுதியிலிருந்து கூடியளவு மக்களை புதிய கொடிகாமம் நகருக்கு இடம் பெயர வைக்கவேண்டும்.

5. குடாநாடு முழுவதையும் இணைத்த நகரங்களுக்கிடையிலான புகையிரதப் போக்கு வரத்தொன்று உருவாக்க கொடிகாமம்-பருத்தித்துறை பருத்தித்துறை -காங்கேசன்துறை ஆகிய இடங்களுக்கிடையிலான பகுதிகளுக்குப் புகையிரதப் பாதை அமைக்கப்பட வேண்டும்.

6. கொடிகாமத்திலிருந்து வரணி, குடத்தனை வழியாக மணற்காட்டுக்குச் சாலையொன்று அமைக்கப்பட வேண்டும்.

7. கொடிகாமத்தில் பஸ் டிப்போ ஒன்று அமைக்கப்படவேண்டும். மேலும் இங்கிருந்து யாழ்ப்பாணம் கிழக்கு, தெற்கு பகுதிகளுக்கான போக்குவரத்து விருத்தியாக்கப்பட வேண்டும்.

8. மாவட்டத்தின் முக்கிய கலை, கலாசார மண்டபங்கள் சில கொடிகாமத்தில் இடவமைவு பெற வேண்டும்.

மேற்குறிப்பிட்ட திறமுறைகள் நல்ல முறையில் கடைப்பிடிக்குமிடத்து கொடிகாம நகரும், கொடிகாமப் பிரதேசமும் வளர்ச்சி பெறுவதுடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது காணப்படும் பிரதேச வேறுபாடுகள் குறைய வழியேற்படுவதுடன், யாழ்ப்பாண கிழக்குப் பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் வழிவகுக்கலாம்.

## சந்தைக்கு...

...8 ஆம் பக்கத் தொடர்ச்சி

### இயந்திர மனிதனை இயக்க கம்பியூட்டர்

அமெரிக்காவில் மனிதன் செய்யும் வேலைகளை எல்லாம் இயந்திர மனிதனைக் கொண்டு செய்கிறார்கள். நாசா நிறுவனத்தின் அறிவியல் அறிஞர்கள் கம்பியூட்டரின் கட்டுப்பாட்டில் இயங்கும் ஓர் இயந்திர மனிதனைக் கண்டு பிடித்திருக்கின்றார்கள். மனிதனின் மூளைப்பகுதியில் மிக நுண்ணிய அறுவைச் சிகிச்சையை இயந்திர மனிதன் செய்து விடுகின்றான்.

### சுற்றுலாப் பயணிகளுக்கு உதவும் கம்பியூட்டர்

வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் மொழி பெயர்ப்பாளரின் உதவியின்றி தனித்து சுற்றுப்பிரயாணம் செய்ய உதவும் கைக்கடக்கமான மொழிபெயர்ப்புக் கம்பியூட்டர் இப்போது சந்தைக்கு வந்து விட்டது.

அமெரிக்கத் தயாரிப்பான இந்தக் கம்பியூட்டரில் ஆங்கிலத்தில் இந்த வார்த்தைக்கு ஜெர்மன் மொழியில் எப்படிச் சொல்லவேண்டும் என்று ஜெர்மன் மொழியில் பதில்சொல்லி விடும். ஆங்கில மொழியிலிருந்து நமக்குத் தேவையான பிரெஞ்சு, இத்தாலி, ஜெர்மன், ஸ்பானிஷ் ஆகிய மொழிகளில் இது மொழி பெயர்த்துத் தருகின்றது இதன் விலை 1500 டொலர்களாகும் இந்தக் கம்பியூட்டரைப் பயன்படுத்தி எந்த நாட்டையும் சுலபமாகச் சுற்றி வரலாம்.

### பூகம்பத்தை கண்டுபிடிக்க கம்பியூட்டர்

பூகம்பத்தை முற்கூட்டியே அறிந்து தெரிவிக்க உதவும் கம்பியூட்டர் ஒன்றைஸ்கொட்லாந்து விஞ்ஞானிகள் இப்போது புதிதாகக் கண்டுபிடித்திருக்கின்றார்கள்.

### பட்டன்கள் இல்லாத கம்பியூட்டர்

கம்பியூட்டர்களை இயக்குவதற்கு பட்டன்கள் உண்டு. ஒரு விசயத்தை கம்பியூட்டரில் பதிய வைக்க அல்லது சேமிக்க, சேமித்த விடயங்களை மீண்டும் திரையில் கொண்டு வர எல்லாவற்றிற்குமே பட்டன்கள் பயன் படுத்தப் படுகின்றது. இந்த பட்டன்கள் இல்லாமலேயே இப்போது புதிதாக ஒரு கம்பியூட்டர் தயாரிக்கப்பட்டிருக்கிறது அதாவது இந்தக் கம்பியூட்டரை இயக்குவதற்கு பட்டன்கள் தேவையில்லை, வெறும் வாய் மொழியாலேயே இயக்கலாம் ஆங்கிலத்தில் பேசினல் அதைப் புரிந்து கொண்டு பதில் சொல்கிறது அல்லது திரையி காட்டி விடுகிறது இந்த அதி நவீனக் கம்பியூட்டர். இந்த கம்பியூட்டர் இன்னும் சந்தைக்கு வரவில்லை. அடுத்த சில மாதங்களில் சந்தைக்கு வந்துவிடும்.

### கம்பியூட்டரால் நன்மை

கம்பியூட்டர் பயன் படுத்துவதால் நன்மைகளும் தீமை இருக்கத்தான் செய்கின்றது. நமது நாடுகளில் கம்பியூட்டர்களைப் பயன்படுத்துவதால் பல நன்மைகள் இருக்கின்றன.

கம்பியூட்டர்களால் தொல்லைகள் இல்லை. அதற்குப் பொய் சொல்லத் தெரியாது. கம்பனியைப் பற்றி வெளியே தவருகச் சொல்லாது. அடிக்கடி லீவு எடுக்காது அலுவலகத்தில் வேலை நேரத்தில் அரட்டை அடிக்காது. ஊர்க்கதை கதையாது அலுவலகத்திற்கு வருவோர் மீது சீறிச் சினக்காது, வேலைகளைச் செய்வதற்காக லஞ்சம் வாங்காது. மொட்டைக் கடிதம் எழுதாது. உறவினர்களுக்கு முன்னுரிமை வழங்காது. தொழிற் சங்கம் அமைக்காது.

பதவி வெறி அதற்கு இருக்காது. லேடி டைப்பிஸ்ட்டைப் பார்த்துக் கண்ணடியாது. காதல் மொழி பேசாது. அரசாங்கச் சொத்துக்களை தன் சொத்தாக உரிமை கொண்டாடாது. இத்தனை நன்மைகள் இருப்பதால் நாடு முழுவதும் கம்பியூட்டர் மயமாகி விட வேண்டும் என்று ஆசைப் படுகின்றீர்களா? கம்பியூட்டர் மயமாகிவிட்டால் மேற் குறிப்பிட்ட வேலைகளைச் செய்பவர்கள் நடுத்தெருவில் விடப்பட்டு விடுவார்களே.........

## அமெரிக்க..

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் புரட்சிகர லிபிய மக்கள் இப் பயமுறுத்தல்களுக்கு அஞ்சமாட்டார்கள். நாம் சவாலை சவால் மூலம் முறியடிப்போம் என்று கூறியுள்ளார்.

அமெரிக்க அதிபர் றீகன் கேணல் கடாபியை 'சர்வதேச பயங்கரவாதி' என்று வருணித்து வந்துள்ளார்.

அமெரிக்க அதிபர் றீகன் லிபியா மீது குற்றஞ்சாட்டி அதற்கு தன்னிடம் ஆதாரம் இருப்பதாகவும் தெரிவித்து தன்னை உலகின் பொலிஸ்காரனும், வழக்காளியாகவும் காட்டிவிட்டு தானே தீர்ப்பு வழங்குவதாக விமானத் தாக்குதலை நடத்தி விட்டார்.

அப்படியானல் றீகன் சொல்வதுதான் சரி அவருடையது தான் நியாயம். இதனைக் கருத்திற் கொண்டு பார்க்கையில் அவரே தீர்ப்பு வழங்கலாம் அதற்கு ஆதாரம் தேவையில்லை.


## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 08 08, 1929

மறைவு: 09 12. 1988

### திரு. சந்ரசேகரம் தியாகராசா

[இளைப்பாறிய இ. போ. ச. நடத்துநர் கிளிநொச்சி டிப்போ]

அன்னையை இழந்து தவித்த பொழுதும்
உன்முகத்து ஒளியினிலே மகிழ்ந்திருந்த
கலகலப்பு வாழ்க்கை எல்லாம் கனவாகுதையா
ஊரறிந்த கல்வி உரம் பெறவைத்து உயர்த்தி
வைத்தாயையா
ஆலமரமாய் அனைவருக்கும் வழிகாட்டியாய்
அன்புவழி காட்டினையையா
ஆதரித்தேற்றும் வல்லிபுர ஆழ்வார் அவசரமாக
அழைத்து சென்றாரையா

**அமரத்துவம் அடைந்த எங்கள் தலைவனே!**
**உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்**

மக்கள், செந்தமிழ்ச்செல்வன், செந்தமிழ்ச்செல்வி, கலைச்செல்வி கலைச்செல்வன்
ஜெயச்செல்வி, ஜெயச்செல்வன்.
செழுங்கதிர்செல்வன், செழுங்கதிர்செல்வி,
சங்கத்தமிழ்ச்செல்வன் மற்றும்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

301/5. இராமநாதபுரம்,
வட்டக்கச்சி. கிளிநொச்சி.

01207



வியாபாரம் பெருக விளம்பரம் செய்க



# "தொழிற் பயிற்சிகள்"

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொழில்வாய்ப்பு பெறக்கூடிய முறையில் குறைந்த காலத்தில் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

★ **Computer Programming in Basic Language**

60 மணித்தியாலம் Radio Shack, Laser, Acorn Computer களில செய்முறைப்பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்
காலம்: 4 மாதம் முழுக்கட்டணம்: 1000/-

★ **றேடியோ, ரெலிவிஷன் றிப்பியறிங்**

சகல இன றேடியோக்கள், ரெலிவிஷன்கள், திருத்தப்படும் முறைகள் ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 4 மாதம் முழுக்கட்டணம்: 1000/-

★ **வீடியோ, டெக் றிப்பியறிங்**

காலம்: 3 மாதம் முழுக்கட்டணம் 750/-

★ **றீவைண்டிங்**

மின் மோட்டர், மின் விசிறி, ரான்ஸ்போமர் றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 4 மாதம் முழுக்கட்டணம்: 1000/-

★ **எலெக்ரிக்கல் வயறிங்**

வீட்டு மின்சாரவேலை, மின்சாரப் பொருட்கள் திருத்தல் பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 2 மாதம் முழுக்கட்டணம்: 500/-

பயிற்சிமுடிவில் சித்தியடையும் மாணவர்களிற்கு சான்றிதழ் வழங்கப்படும்.

O/L படித்த இருபாலாரும் சேரலாம்

**மீண்டும் பயிற்சிகள் ஆரம்பம்**
• 11. 01. 1989 [கிழமை நாட்கள்]
• 15. 01. 1989 [சனி, ஞாயிறு]

குறிப்பு. ★ வெளிநாடு செல்வோர்களிற்கு தனிப்பட்ட முறையில் குறைந்த காலத்தில் பயிற்சியளிக்கப்படும்
★ சனி, ஞாயிறு வகுப்புகள் தொழில் புரிவோரின் வசதியை முன்னிட்டு மாலைநேரம் நடைபெறும்.

விபரங்களுக்கு:

**JAFFNA TECHNICAL INSTITUTE**

ஸ்ரான்லி வீதி. (றெயில்வே கடவை அருகாமை) யாழ்ப்பாணம்.

01249

சிறந்த முறையில்
வீடியோ படம் பிடித்திட
வீடியோ விகோன்ஸ்
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோயிலுக்கும் இடையில்)
353 C, மணிக்கூட்டுவீதி

வார முரசொலி
VARAMURASOLI

For Quality Video Filming
VIDEO Vihons
353 C, Clock Tower Road,
★ Wellington Junction.

# குடாநாட்டில் 300 ஆசிரியருக்கு உள்ளூர் இடமாற்றம்

முன்னர் எப்போதுமில்லாத அளவிற்கு இம் முறை யாழ். மாவட்டத்தில் கூடுதலான ஆசிரியர்களுக்கு உள்ளூர் இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சுமார் முந்நூறு ஆசிரியர்கள் இம் முறை உள்ளூர் இடமாற்றத்தைப் பெற்றுள்ளனர். இந்த இடமாற்றங்களில் அனேகமானவை ஆசிரியர்களிடம் இருந்து ஏற்கனவே பெறப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. யாழ் மாவட்டத்திற்கு முன்னர் எப்போதும் இல்லாத அளவில் பெருமளவில் ஆரம்ப ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதினால் உள்ளூர் இடமாற்றத்தின் மூலம் ஆசிரியர்களை தேவையைப் பொறுத்து பரவலாக்கம் செய்யவேண்டிய தேவை யாழ். கல்வித்திணைக்களத்திற்கு இம் முறை ஏற்பட்டிருந்தது.

இந்த இடமாற்றத்தின் மூலம் கஷ்டப் பகுதிகளில் கூடியகாலம் கடமை புரிந்த ஆசிரியர்கள் அவர்கள் விரும்பிய பகுதிக்கு இடமாற்றத்தைப் பெறும் சந்தர்ப்பத்தைப் பெற்றுள்ளதுடன் சில பாடசாலைகளில் மேலதிகமாக இருந்த ஆசிரியர்களை, பற்றுக்குறையிருந்த பல பாடசாலைகளுக்கு நியமிக்ககூடியதாகவுமிருந்ததாக பிரதமகல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் தெரிவித்தார்.

இதேவேளை ஆசிரியர் பற்றுக்குறையுள்ள பாடசாலைகளுக்கு புதிதாக நியமனம் பெறவுள்ள கலை, விஞ்ஞானம், கணித பட்டதாரி ஆசிரியர்களும், தராதரப்பத்திரமுடைய மற்றும் ஆரம்ப ஆசிரியர்களும் நியமிக்கப்படவுள்ளனர். மார்ச் மாதத்தில் நடைபெறவுள்ள மாவட்டங்களுக்கிடையேயான ஆசிரிய இடமாற்றத்தின் போது மேலும் குறிப்பிட்டளவு ஆசிரியர்கள் வெளி மாவட்டங்களில் இருந்து யாழ். மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்றுவரவுள்ளதினால் அடுத்த தவணை ஆரம்பத்தில் பல பாடசாலைகளிலும் உள்ள ஆசிரிய பற்றுக்குறையை ஓரளவு நிவர்த்திக்கக் கூடியதாகவிருக்குமென கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

## சந்திரிகாவின் இலங்கை விஜயம் கடைசி நிமிடத்தில் ரத்து!

காலம் சென்ற ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் தலைவர் திரு. விஜேகுமாரணதுங்காவின் மனைவி திருமதி சந்திரிகா குமாரணதுங்கா எதிர் வரும் தேர்தலில் போட்டியிடவில்லை தேர்தலில் போட்டியிடுவதற்கென அவர் இலங்கைவருவார் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் கடைசி நேரத்தில் அவரது இலங்கை விஜயம் ரத்து செய்யப்பட்டதனுல் வேட்பாளர் பட்டியலில் இருந்து அவரதுபெயர் கடைசி நேரத்தில் நீக்கப்பட்டது.

சந்திரிகா கம்பஹா மாவட்டத்தில் ஐக்கிய சோஷலிஸ கட்சியின் வேட்பாளராக போட்டியிட விருந்தார்.

### ஆங்கில. . .

தபால் மூலம் அனுப்பி வைக்கப்படவுள்ளது. போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்படுபவர்கள் பின்னர் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையில் தெரிந்தெடுக்கப்படுபவர்கள் குறுகிய கால சேவைக்கால முன் பயிற்சி வழங்கப்பட்டு ஆங்கில உதவி ஆசிரியர்களாக குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகளுக்கு நியமிக்கப் படுவார்கள்.

### தமிழ் . .

கம் ஆகிய ஆறு பேரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் வெள்ளவத்தைப் பகுதியில் அண்மைக்காலமாக இடம்பெற்ற கொள்ளைகளில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப் படுகிறது.

### அகில இலங்கை. . .

நான்கு பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்றுள்ளார்.

பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி மாணவர் ஒருவர் வர்த்தகத்துறையில் நான்கு பாடங்களிலும் 'ஏ' சித்தியடைந்துள்ளார்.

### நடனம் ..

வெத்தமுல்லவுடன் தொடர்பு கொண்டு இம் மாணவர்களின் நிலைமைபற்றி எடுத்துக்கூறியதையடுத்தே இம் முடிவு எடுக்கப்பட்டது.

இதற்கு வசதியாக மேற்குறிப்பிட்ட பாடங்களுக்குத் தோற்றுத மாணவர்களை உடனடியாக யாழ். கல்விக் கந்தோரிலுள்ள கல்வி நிர்வாகப் பிரிவுடன் தொடர்பு கொண்டு விடயங்களைத் தெரிவிக்குமாறு கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### கொழும்புக்கு ..

கொழும்புக்குச் செல்லும்.

மேலும் எரிபொருள், உணவு ஆகியவற்றை ஏற்றிய இரண்டு சரக்குரயில்களும் நேற்று யாழ்ப்பாணம் வந்தன. இவற்றில் ஏழு வகன் எரிபொருட்களும், பன்னிரண்டு வகன் அரிசியும் உள்ளது.

### திருகோணமலை. . .

மிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்னர் கொழும்பு பொலிஸ் தலைமையகத்தில் ஆராய்ச்சி அபிவிருத்தி பிரிவுப் பணிப்பாளராக பணியாற்றி வந்தார். வடக்கு கிழக்கு பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. மகேஸ் செல்வரத்தினத்தின் கீழ் இவர் கடமை புரிவார், திரு. ஆனந்தராஜாவின் தலைமையலுவலகம்திருகோணமலையில் அமைந்திருக்கும்.

### பஞ்சாப்பில். . .

இந்திரா காந்தி கொலை தொடர்பாக இரு எதிரிகளான சீக்கியருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதையடுத்து இந்த வன் முறைகள் ஆரம்பித்துள்ளன.

### குடாநாட்டு. . .

23 ஆம் திகதி ஹபரனை குண்டு வெடிப்பையடுத்து யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான மின் சப்ளை பூரணமாக துண்டிக்கப்பட்டது.

## இலங்கைப் பெண்மணி நியூஸிலாந்தில் டாலர் மோசடி

எழுபதினுயிரம் டாலர் மோசடி தொடர்பாக இலங்கைப் பெண்மணியொருவர் நியூஸிலாந்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த பெண் மூன்று வருடங்களுக்கு மேலாக நியூஸிலாந்தில் தனியார் நிறுவனமொன்றில் வேலை செய்து வருகின்றார் இவர் கடமை புரியும் நிறுவனத்தின் டாலர்களையே இவ்வாறு மோசடி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளார். இந்தப் பெண்மணி இதற்கு முன்னரும் நியூஸிலாந்தில் பணமோசடி குற்றச்சாட்டொன்றில் விசாரிக்கப்பட்டிருந்தார்.

இப் பெண்மணியின் இலங்கையிலுள்ள வங்கிக் கணக்குகள் தற்பொழுது ஆராயப்பட்டு வருகின்றது.

## உலக கிண்ண போட்டி தொடரில் நேற்று மேற்கிந்தியதீவுகள் அணியை பாகிஸ்தான் அணி வென்றது

மூன்று நாடுகளுக்கிடையில் நடைபெறும் உலகக் கிண்ண ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று பாகிஸ்தான் அணி மேற்கிந்தியதீவுகள் அணியை 55 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 7 விக்கட்டுகள் இழப்பிற்கு 258 ஓட்டங்களைப் பெற்றது. மேற்கிந்தியதீவுகள் அணி 203 ஓட்டங்களைப் பெற்றது.

இப்போட்டித் தொடரில் மேற்கிந்தியதீவுகள் அணி ஏழு போட்டிகளில் பத்து புள்ளிகளும், அவுஸ்ரேலிய அணி ஐந்து போட்டிகளில் நான்கு புள்ளிகளும், பாகிஸ்தான் அணி ஆறு போட்டிகளில் 4 புள்ளிகளும் பெற்றுள்ளன.

### சிவில்...

தற்கு முன்னர் தடை விதிக்கப்பட்டிருந்தது இந்த தடை நீக்கப் பட்டதையடுத்து நான்கு தனியார் விமான சேவை நிறுவனங்கள் இந்த விமான நிலையங்களைப்பயன்படுத்தி உள்ளூர் விமான சேவைகளை நடாத்துவதாக விமான போக்குவரத்து வட்டாரங்கள் தெரிவித்தன.

தனியார் விமானங்களுக்கு, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து விமானப் படை எரிபொருளை வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

### சுட்டுக்கொலை

மாத்தறையில் யற்றியான பகுதிக்கிராம சேவகர் கே. ஜீ. தனபால இனம் தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார். தமது வீட்டுக்கு வெளியே இவர் நின்றபோதே சுடப்பட்டு மரணமானர்.

### 68 மாதங்கள் ..

சட்டமும் தாமாகவே செயலிழந்ததாகக் கருதப்படும். அப்படியாளுல், இந்த வார இறுதிக்குள் இச்சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் அனைவரும் விடுதலைசெய்யப்பட வேண்டும்; அல்லது நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டும்.

## காலமானர்

### வி. கே. கந்தையா

(Retired Chief Inspector of Police Founder - Ex - Administrator Police) C. W. C. Benefit Scheme

திரு. வி. கே. கந்தையா 04-01-89 இல் காலமானர். அன்னர் திருமதி தெய்வானையின் அன்புக்கணவரும், காலம்சென்ற ரஞ்சன் (IP), திருமதி இந்திராதேவி, செல்வஜெயசங்கர், பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), மனோகரஞ்சிதன் (அமெரிக்கா), ரஞ்சினிதேவி (யாழ்ப்பாணக் கல்லூரி), திருமதி உமாயோர்ஜ் (லங்கா சீமெந்து லிமிட்டெட்) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி சாந்தினி ரஞ்சன், செல்வஜெயசங்கர், யோர்ஜ் சந்திரன் (லங்கா சீமெந்து லிமிட்டெட்) ஆகியோரின் மாமனுரும், மகிழ்தினி, நிருபா ஆகியோரின் பேரனுமாவார். இறுதிச் சடங்குகள் 09-01-89 திங்கட்கிழமை காலை 8-30 க்கு நடைபெற்று. பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 11-30 மணிக்கு அராலி தெற்கு, பூனுவடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
மனைவி, மக்கள்,

'அன்பு இல்லம்'
அராலி தெற்கு.

01255

## காலமானர்

### திரு. முந்தையா இராசையா

இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த திரு மு. இராசையா காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும், தவமலர் (நல்லூர் இந்து கலவன் பாடசாலை), புனிதமலர் (U K) புலேந்திரன் (காகித ஆலை, வாழைச்சேனை), மகாலட்சுமி (U. K.), ஜெயலட்சுமி (ஸ்கந்தவரோதயா கல்லூரி), சரோஜா (U. K.), சுதாமதி (Kotmale) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவானந்தன் (காகித ஆலை, வாழைச்சேனை), திருப்பதி (U K.), செல்வமணி, சிதம்பரநாதன் (U.K.),சோமசுந்தரம்(Radio Ceylon), ராஜ்குமார் (U. K.), சுகுமார் (Kotmale Project) ஆகியோரின் அன்பு மாமனுரும், குகன் (U. K.), நிமலன் (U. K ), சுமதி (Paper factory, Valaichenal), மாலதி (J/University), செந்தூரன் (J/Technical College) குமரன், கார்த்திகா, நிர்த்திகா (U. K.) சஞ்ஜீவன், ஜெனனி, கவிதா, அரவிந்தன் ஆகியோரின் அன்புப் பாட்டனுமாவார்.

அன்னரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக 08-01-89 (இன்று) ஞாயிறு காலை 10-00 மணியளவில் செம்பாடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றூர், உறவினர், நண்பர்கள் இதனை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: வி. சிவானந்தன்

இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

01253

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 62 ஏ, இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப் பிரிவில் 08 01-1989 அச்சிட்டு வெளியிடப்பெற்றது